Registered as a Newspaper

# தினச்செய்தி

வாரமலர்

விலை : ரூபா 25.00

என்றும் உங்களுடன்

Registered at the Department of Posts of Sri Lanka Under No QD/29/News/2016

பக்கம் 24 | ஜன. 17-23, 2016 | செய்தி - 16

# கச்சதீவும் : அரைவேக்காட்டுத் தமிழ்த் தலைவர்களும்

ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளின் வளர்ச்சி

பக். 17



மன்னாரில் முஸ்லிம்கள் மீள்குடியேற்றம்

சர்ச்சைக்குரிய காரணம் என்ன?

பக். 10

கச்சதீவு சம்பந்தமாக தமிழ்த் தலைவர்கள் என்று மார்பில் தட்டிக் கொள்பவர்கள் அரைவேக்காட்டுத் தனமாக எழுதுவதையும், பேசுவதையும் படிக்கும் போதும், கேட்கும் போதும் அழுவதா? சிரிப்பதா என்று தெரியவில்லை. அவர்கள் தொடர்ந்து முட்டாள்தனமாக பிதற்றுகின்றார்கள்.

கச்சதீவு யாருக்குச் சொந்தம் என்ற அடிப்படை விடயஞானமே இல்லாமல் இருக்கின்றார்கள். இது மிகவும் கவலையையும், வேதனையையும் அளிக்கின்றது.

கடந்த பதினோராம் திகதி தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணித்தலைவரும் நீண்டகாலமாக நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவருமான வீ. ஆனந்தசங்கரி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவிற்கு "இந்திய இலங்கை மீனவர்களின் முறுகல் நிலைமைக்கு தீர்வு," என்ற தலைப்பிட்டு ஒரு பகிரங்கக் கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

பார்க்க பக்கம் 2

தினச்செய்தி
என்றும் உங்களுடன்
T.P : 021 224 2636
Fax : 021 2242139
Web : www.thinacheithi.com / lk

# சகல இன மக்களும் ஏற்கும் அரசியல் சட்டங்களை உருவாக்குங்கள்

இலங்கையில் புதிய அரசியல் சட்டம் ஒன்றை உருவாக்கும் வேலைகள் ஆரம்பமாகிவிட்டன. இது நாடு சுதந்திரம் அடைந்த பிற்பாடு உருவாக்கப்படவுள்ள நான்காவது அரசியல் சட்டமாகும்.

1978 ஆம் ஆண்டு ஓர் அரசியல் சட்டத்தை ஜே.ஆர். ஜெயவர்த்தனா தலைமையிலிருந்த அரசாங்கம் உருவாக்கிற்று. அந்த அரசியல் சட்டத்திற்கு மொத்தமாக பத்தொன்பது திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. ஆனால் இந்தப் பத்தொன்பதாவது திருத்தில், நிர்வாக அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா தனது அதிகாரங்களை கைவிட முன்வந்தது ஒரு முக்கிய திருத்தமாகும்.

இருபதாவது திருத்தத்திற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. நடைமுறையில் உள்ள விகிதாசார தேர்தல் முறையை கைவிட்டுவிட்டு, தனித்தனியே தேர்தலில் போட்டியிட்டு வெல்லும் திட்டத்தை மீண்டும் அறிமுகப்படுத்த முன்வந்தனர்.' ஆனால், இருபதாவது திருத்தம் கொண்டுவர முன்னமே நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதால் அத்திட்டம் கைவிடப்பட்டது.

1970 ஆம் ஆண்டு ஸ்ரீமாவோ பண்டாரா நாயக்காவின் தலைமையில் ஓர் அரசியல் சட்டத்தை உருவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறு புதிய ஓர் அரசியல் சட்டத்தை அமைப்பதற்கு 'நவரங்க ஹலா' என்ற ஒரு நாடக மண்டபத்தில் ஓர் அரசியல் நிர்ணய சபை ஒன்றை உருவாக்கி நடவழக்கைகளை மேற் கொண்டனர்.

முதல் கூட்டம் அங்கு நடைபெற்றது. அதையடுத்து மிகுதிக் கூட்டங்கள் யாவும் நாடாளுமன்றத்திலேயே நடைபெற்றன. நாடாளுமன்றமே அன்று அரசியல் சாசனத்தை உருவாக்கும் அதிகாரம் கொண்ட அரசியல் நிர்ணய சபையாக உருமாறிற்று.

ஆனால் கடந்த ஜனவரி மாதம் 9 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட அரசியல் சட்டத்தை உருவாக்கும் நடவழக்கைகள் வேறுவிதமாக அமைந்திருந்தன. அரசியல் நிர்ணய சபைக்குப் பதிலாக நாடாளுமன்றத்தை அரசியல் சாசன சபையாக மாற்றிக் கொண்டார்கள். இந்தப் புதிய முறையின்படி வருங்காலத்தில் நாடாளுமன்றம் புதிய அரசியல் சட்டம் ஒன்றை உருவாக்கும் அரசியல் சாசன சபையாக மாறுகின்றது.

ஆனால், முக்கியமான கேள்வி ஒன்று தொக்கி நிற்கின்றது. அது என்னவென்று சொன்னால், இந்த நாட்டில் எத்தனை அரசியல் சட்டங்கள் நடைமுறையில் உள்ளன? என்பதுவே ஆகும்.

1972 ஆம் ஆண்டின் குடியரசு அரசியல் சட்டம் உருவாக்கப்பட்ட பொழுது அது 1948 ஆம் ஆண்டில் இலங்கை சுதந்திரத்திற்கு பிரித்தானியரால் வழங்க உருவாக்கிய அரசியல் சட்டத்தைஇரத்துச் செய்யத் தவறிவிட்டார்கள். குடியரசு அரசியல் சட்டத்தை உருவாக்கினார்கள். ஆனால் 1947 ஆம் ஆண்டு அரசியல் சட்டத்தில் குறிபபிடப்பட்டுள்ள 29 ஆவது ஷரத்தின் இரண்டாவது அம்சத்தில் குறிப்பிடப்பட்டிருந்த பிரகாரம் அந்த இரண்டாவது அம்சத்தை 1972 ஆம் ஆண்டு அரசியல் சட்டம் இரத்துச் செய்யத் தவறிவிட்டது.

எனவே 1972 ஆம் ஆண்டு அரசியல் சட்டமும், 1978ஆம் ஆண்டு அரசியல் சட்டமும் பிழையானவை என கருத்தில் கொள்ள முடியும். எனவே நான்காவது முறையாக அரசியல் சட்டம் ஒன்றை உருவாக்க முன்வரும் போது, முதன்முதலில் 1948 ஆம் ஆண்டுக்கான இலங்கையின் சுதந்திரத்துக்கான அரசியல் சட்டத்தை முழுமையாக இரத்துச் செய்ய நடவழக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

ஒரு நாட்டிற்கு எக்காலத்திலும் இரண்டு அரசியல் சட்டங்கள் நடைமுறையில் இருக்கக் கூடாது. இன்று வரையில் இரண்டு அர சியல் சட்டங்கள் உள்ளன.

அவையாவன –

1. 1948 ஆம் ஆண்டுக்கான இலங்கை சுதந்திரத்திற்கான அரசியல் சட்டம்.

2. 1978 ஆம் ஆண்டுக்கான ஸ்ரீலங்கா அரசியல் சட்டம்.

இந்த இரண்டு அரசியல் சட்டங்களையும் இரத்துச்செய்த பிற்பாடு தான் புதிய அரசியல் சட்டத்தை அமுலுக்கு கொண்டு வர வேண்டும்.

ஸ்ரீலங்கா ஒரு ஜனநாயக சோசலிச குடியரசு நாடு. அரசியல் சட்டங்கள் மக்களுக்காக மக்களால் நிறைவேற்றுவதாகும்.

நிறைவேற்றப்படும் அரசியல் சட்டம் பெரும்பான்மையின மக்களுக்கு சாதகமாகவும், சிறுபான்மையின மக்களுக்குப் பாதகமாகவும் அமையக் கூடாது. எனவே, புதிய அரசியல் சட்டமானது இந்த நாட்டில் வாழும் சகல இன மக்களாலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கவேண்டும்.

அரசியல் சாசன சபையில் அங்கம்வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த விடயத்தை கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும்.

நாடு என்பது சகல மக்களுக்கும் சொந்தமாகும்.

ஒருசில மக்களுக்கு மாத்திரம் அல்ல.

(01ஆம் பக்கத்தொடர்ச்சி)

# கச்சதீவும்...

அந்தக் கடிதத்தில் கச்சதீவு பற்றி அவர் குறிப்பிட்டுள்ளார். அவரது கச்சதீவு சம்பந்தமாக அபத்தமான குறிப்புக்களை படித்த போது அழுவதா? சிரிப்பதா என்று தெரியவில்லை. அது அரைவேக்காட்டுத்தனமாக இருந்தது.

அக்கடிதத்தில் ஆனந்தசங்கரி குறிப்பிடுகையில் –

"அன்றைய இலங்கைப் பிரதமர் கௌரவ சிறிமாவோ பண்டார நாயக்காவின் வேண்டுகோளுக்கமைய கச்சதீவு இலங்கைக்கு கையளிக்கப்பட்டவேளை, இந்திய மாநிலங்கள் சில குறிப்பாக தமிழ்நாடு பெரும் எதிர்ப்பை வெளிக்காட்டியது." அத்துடன் அவருடைய கடிதத்தில் கச்சதீவை திருமதி. இந்திராகாந்தியின் அரசு இலங்கைக்கு நன்கொடையாக வழங்கியதாக எழுதியிருந்தார். இது ஒரு சுத்த அபத்தமான செய்தியாகும்.

முதலில் ஒன்றை தெளிவாக உணரவேண்டும். இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் கச்சதீவு சம்பந்தமாக எந்தவொரு ஒப்பந்தமும் நடைபெறவில்லை. கச்சதீவை இலங்கைக்கு யாரும் அன்பளிப்பாகத் தரவுமில்லை.

கச்சதீவு சுதந்திரமும், இறைமையும் உள்ள இலங்கை நாட்டின் ஒரு பகுதியாகும். இந்தச்சிறிய தீவு இந்திய கடல் எல்லைக்கு மேற்குப் பகுதியில் ஒரு கடல் மைலுக்கு அப்பால் இலங்கையின் எல்லைக்குள் அமைந்துள்ளது.

1974 ஆம் ஆண்டு, இலங்கை இந்திய கடல் எல்லைகள் சம்பந்தமாக பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. அந்தசமயம் இலங்கையில் வெளிவிவகார செயலாளராக இருந்த டபிள்யூ. ரீ. ஜெயசிங்க (1972 – 1989) இரண்டு சுற்றுப் பேச்சுவார்த்தைகளை இந்திய வெளிவிவகார அமைச்சுடன் நடாத்தினார்.

இலங்கை இந்தியாவிற்கு இடையிலான எல்லைகள் சம்பந்தமாக வரலாற்றுச்சிறப்புமிக்க கடல் எல்லைகள் பற்றி யூன் மாதம் 1974 ஆம் ஆண்டு ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டது. அதுபோல இரண்டாவது ஒப்பந்தம் மார்ச் 1976 ஆம் ஆண்டு மன்னார்குடா, வங்காளவிரிகுடா சம்பந்தமான கடல் எல்லைகள் ஒப்பந்தம் செய்யப்பட்டது.

1974 ஆம் ஆண்டு செய்து கொண்ட இந்த கடல் எல்லை ஒப்பந்தத்தை இரண்டு நாட்டுப் பிரதமர்களும் தங்கள் தங்கள் நாட்டின் தலைநகரில் இருந்தவாறே கையெழுத்து இட்டனர்.

அதன்பிரகாரம், சிறிமாவோ பண்டாரநாயக்கா கொழும்பில் வைத்து ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். புதுடில்லியில் வைத்து திருமதி. இந்திராகாந்தி இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டு கையெழுத்து வைத்தார்.




அதையடுத்து இரண்டு நாடுகளின் ஒப்புதலுடனும் 26 யூன் 1976 ஆம். ஆண்டு இந்த ஒப்பந்தம் சம்பந்தமாக குறிப்பு ஒன்று பத்திரிகையில் வெளிவந்தது.

அந்தப் பத்திரிகைக் குறிப்பில். – "இரு பகுதியினரும் கடல் எல்லைப் பிரச்சினை சம்பந்தமாக ஆராய்ந்ததை அடுத்து பாக்கு நீரிணையின் கடல் எல்லை சம்பந்தமான வரலாற்றுச் சான்றுகளையும் பரிசீலித்து சர்வதேச கடல் சட்டங்களுக்கு அமைய தீர்மானிக்கப்பட்டது. இரு நாடுகளுக்குமான கடல் எல்லை, யாருமே குடியேற்றாமல் உள்ள கச்சதீவு இந்தியாவின் மேற்குப் பகுதியில் ஒரு கடல்மைலுக்கு அப்பால் அமைந்துள்ளது."

"1974 ஆம் ஆண்டு ஒப்பந்தம் கச்சதீவு இலங்கையின் இறைமைக்கு உட்பட்ட நாட்டின் எல்லைக்குள் அமைந்துள்ள தீவு என உறுதிப்படுத்திற்று. ஆனால், 1974 ஆம் ஆண்டின் கடல் எல்லை நிர்ணயம் சம்பந்தப்பட்ட ஒப்பந்தத்தில் ஐந்தாவது ஸரத்தில் வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

"செய்து கொண்ட ஒப்பந்தம் அமுலில் இருக்கும் அதேசமயம், இந்திய மீனவர்களும், இந்திய யாத்திரிகர்களும், கச்சதீவுக்குச் செல்வதற்கு அனுமதி வழங்கப்படுகிறது. ஆனால் அவர்கள் அவ்வாறு செல்ல இலங்கையரசிடம் வீசாக்கள், எடுக்கவேண்டிய அவசியமில்லை. அதேசமயம் இந்திய மீனவர்கள் கச்சதீவுக்குச் சென்று தமது மீன்பிடி வலைகளை உலரவைக்க முடியும் என்று குறிப்பிடப்படுகிறது."

"ஆனால் 1976 ஆம் ஆண்டு மன்னார் குடா, வங்காள கடலிலுள்ள இலங்கை இந்திய கடல் எல்லைகளை நிர்ணயிக்கும் ஒப்பந்தத்தின் மூலம், 1974 ஆம் ஆண்டின் ஒப்பந்தத்தின் ஐந்தாவது ஸரத்தில் இந்திய மீனவர்களுக்கும், யாத்திரிகர்களுக்கும் வழங்கப்பட்ட சலுகைகளை இரத்துச் செய்தது.

எனவே, கச்சதீவு என்ற இந்த சிறியதீவு இலங்கைக்குச் சொந்தமான தீவு என அன்றைய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் டபிள்யூ. ரீ. ஜெயசிங்கவினால் இந்திய வெளிவிவகார அமைச்சுக்கு ஆதாரங்களுடன் நிரூபித்துக் காட்டினார்.

எனவே, இலங்கைக்கு சொந்தமான கச்சதீவை இந்தியா எமக்கு 'அன்பளிப்பாகவோ', 'நன்கொடையாகவோ' வழங்கவில்லை. இவ்வாறான அபத்தமான கருத்தை ஆனந்தசங்கரி உடனடியாகக் கைவிடவேண்டும். இதேவேளை அன்று தமிழ்த் தேசியக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவரும், இன்று வடமாகாண சபை உறுப்பினராக இருக்கும் எம்.கே. சிவாஜிலிங்கம் கச்சதீவை இந்தியாவிற்கு திருப்பி கையளிக்க வேண்டும் எனக் கூறியதும் அபத்தமாகும்.

மேலும், 1974 ஆம் ஆண்டிலும் 1976 ஆம் ஆண்டிலும் இந்திய இலங்கை கடல் எல்லை சம்பந்தமாகவும் ஒப்பந்தம் செய்யப்பட்டது. இந்த ஒப்பந்தத்தை மீறி இலங்கை எல்லைக்குள் வந்து மீன்பிடிக்கும் இந்தியமீனவர்கள் குற்றவாளிகள். அவர்களைக் கைதுசெய்ய வேண்டும். சிறைத்தண்டனையும் வழங்கப்பட வேண்டும்.

ஏனெனில் இலங்கையர்கள் இந்திய கடல் எல்லைக்குள் சென்றால் அவர்களை மாலைபோட்டு இந்திய கடற்படை வரவேற்பதில்லை. இலங்கை மீனவர்களை இந்திய கடற்படை கைது செய்து நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்று சிறைத்தண்டனை வழங்கி சிறையில் தான் அடைக்கின்றார்கள். இந்தியா இலங்கை மீனவர்களுக்குச் செய்வதையே, இலங்கையரசும் இந்திய மீனவர்களுக்குச் செய்யவேண்டும்.

அத்துமீறி கடல் எல்லைக்குள் வரும் இந்திய மீனவர்களை கைது செய்யவேண்டும். நீதிமன்றத்தின் முன் ஆஜர்படுத்தவேண்டும். அவ்ரகளுக்கு சிறைத்தண்டனை வழங்கப்பட்டால் சிறையில் அடைக்கத் தான் வேண்டும். ஆனால் அவர்களை விடுதலை செய்யக்கூடாது.

மேலும், கச்சதீவு இலங்கைக்கு தான் சொந்தம் என 2013 ஆம் ஆண்டு 'தினச்செய்தி'யின் ஆசிரியர் கச்சதீவு சென்று இலங்கைக் கொடியை ஏற்றியுள்ளார் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

### மனந்திறக்கிறார் அனந்தி

# ஆட்சி மாறினாலும் காட்சி மாறவில்லை

தமிழ் மக்கள் கண்ணீருடன் வாழும் போது, எதற்கு பொங்கல் விழா களியாட்டத்தினை இந்த ஏமாற்று அரசாங்கம் முன்னெடுக்கின்றது

நல்லாட்சி நிலவுவதாக சர்வதேசத்திற்கு வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

அதேநேரம், காணாமற் போனவர்கள் மற்றும் அரசியல் கைதிகளின் உறவினர்கள் கண்ணீருடன் வீதிகளில் நடமாடித் திரிகின்றார்கள். இராணுவத்தில் சரணடைந்தவர்கள் மற்றும் காணாமற் போனவர்கள், அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவில்லை.

இவர்களுக்கு என்ன நடந்ததென்ற பொறுப்புக் கூறலை கூட இந்த அரசாங்கம் மேற்கொள்ளவில்லை. அரசியல் கைதிகள் இரு தடவை உண்ணாவிரதம் இருந்தும், விடுவிக்கப்படாமல் தொடர்ச்சியாக அரசியல் கைதிகளாகவே இருக்கின்றார்கள்.

பொது மக்களின் காணிகளை விடுவிப்பதாக கூறியிருந்தாலும், ஏமாற்று வேலையாக சில பகுதி காணிகளை மட்டும் அரசு விடுவித்துள்ளது.

ஓரிரு அரசியல் கைதிகளை விடுவித்துவிட்டு, நல்ல பிள்ளையாக தன்னை



சர்வதேசத்திற்கு காட்டிக்கொண்டிருக்கிறது அரசு.

அன்றாடம் கண்ணீருடனும் கவலையுடனும் வாழ்ந்துகொண்டு இருக்கின்ற போது, தமிழ் மக்களாகிய நாங்களே தைப்பொங்கலை கொண்டாடாத இந்த நேரத்தில், இந்த அரசாங்கம் என்னத்தினை வெளி உலகிற்கு காட்டுவதற்காக யாழ்ப்பாணத்தில் பொங்கலை கொண்டாடியது.

எனவே, நல்லாட்சி என்று கூறும் இந்த அரசாங்கம் ஒரு வருடமாகியும், தமிழ் மக்களுக்கு எதையும் செய்யவில்லை

மிக மோசமான அரசாங்கம் மற்றும் இன அழிப்பு அரசாங்கம் என்று கூறும் கடந்த அரசாங்கம் தன்னுடைய ஆட்சிக்காலத்தில், இராணுவத்தில் சரணடைந்தவர்கள் மற்றும் காணாமற் போனோர்கள் இருக்கின்றார்கள் என்று சர்வதேசத்திற்கு கூறியதுடன், அவர்களின் பெயர்ப்பட்டியலை கூட வெளியிடுவதாக கூறியிருந்தது.

ஆனால், இந்த அரசாங்கம் தன்னிடம் தடுப்பு முகாம் இல்லை. காணாமற் போனோர்கள் என்ற வகையினா் இல்லை என்று கூறிவிட்டது.

ஐ.நாவில் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதாக கூறிய இந்த ஏமாற்று அரசாங்கம். இன்று தமிழ் அரசியல் கைதிகள் தன்னிடம் இல்லை என்று கூறிக் கொண்டிருக்கின்றது.

ஏமாற்று அரசாங்கம் தமிழ் மக்களை தொடர்ந்தும் ஏமாற்றிக்கொண்டிருக்கின்றது. எனவே ஏமாற்று அரசாங்கம் எவ்வாறு இந்தப் பொங்கலை கொண்டாடும்

குறுகிய காலத்தில் இராணுவ அச்சுறுத்தல் காரணமாக ஒதுங்கி இருக்கின்றார்கள். ஆட்சி மாறினாலும், இராணுவ அச்சுறுத்தலுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

ஆட்சி மாறினாலும் எமது காட்சிகள் மாறவில்லை. எனவே, யாழில் நடந்த கறுப்புக் கொடி போராட்டத்தினை ஜனாதிபதி மிகத் தெளிவாக உணர வேண்டும். சிங்கள மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். தமிழ் மக்கள் கண்ணீருடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

அவ்வாறான நிலைமையில் எவ்வாறு பொங்கல் நடாத்தி இந்த நாட்டில் நல்லாட்சி நிலவுகின்றது என்று சர்வதேசத்திற்கு காட்ட முடியும்.

---

# முந்நூறுக்கும் மேற்பட்ட கம்பனிகள் யாழ். சர்வதேச கண்காட்சியில் பங்கேற்பு

தமிழ் நாட்டிலிருந்து அறுபது வர்த்தகப் பிரதிநிதிகள் அடங்கியகுழு பங்கு பற்றுகின்றது

ஐம்பதிற்கும் மேற்பட்ட வர்த்தக பிரதிநிதிகள் வவுனியா, முல்லைத்தீவு ஆகிய வர்த்தக சபைகளிலிருந்து பங்குபற்றவுள்ளன.

வடமாகாணம் தொடர்ந்தும் ஏழாவது வருடமாக யாழ்.சர்வதேச வர்த்தகக் கண்காட்சியை (JITF 2016) வரவேற்கவுள்ளது.

எதிர்வரும் ஜனவரி 29 –31 வரை யாழ்ப்பாணத்தில் மிகவும் பிரமாண்டமான கண்காட்சியும் நுகர்வோர் சந்தையுமாக இந்நிகழ்வு அமையவுள்ளது.

“கட்டாயம் பங்குபற்ற வேண்டும்” என்று படிப்படியாக யாழ் மக்கள் மத்தியில் இடம்பிடித்துள்ள இக்கண்காட்சிக்கு சாமானிய மக்கள், யாழ்.பிரஜைகள், வடக்கிலுள்ள வர்த்தகர்கள் பங்குபற்றவுள்ளனர்.

இக்கண்காட்சி யாழ்.மாநகர சபை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இக் கண்காட்சியில் சர்வதேச மற்றும் உள்ளூர் வர்த்தக நிலையங்களின் காட்சிச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

2015ஆம் ஆண்டு நடைபெற்ற வர்த்தகக் கண்காட்சியை அறுபதாயிரத்திற்கும் மேற்பட்டோர் சென்று பார்வையிட்டனர்.

வடமாகாணத்தில் இதுவே பெரும்பகுதியான மக்களை ஈர்த்த நிகழ்வாக சென்ற வருடம் அமைந்திருந்தது.

இந்தப் பிராந்தியத்திலுள்ள வீதிகள், மின்சார இணைப்பிலுள்ள பாலங்கள் அரசினால் புனருத்தாரணம் செய்யப்பட்டு உலகிலுள்ள ஏனைய வர்த்தகக் கேந்திர நிலையங்களைப் போன்று உருவாக்கப்பட்டு வருகின்றது.

இம்முறை நடைபெறும் கண்காட்சியில் கட்டடக் கைத்தொழில், ஹோட்டல், உணவு, குளிர்பானங்கள், மோட்டார் வாகனக் கைத்தொழில், விவசாயம், நுகர்ச்சிப்பொருட்கள் ஆகிய பலதரப்பட்ட விடயங்கள் எதிர்வரும் மூன்று நாள் கண்காட்சியின் பொழுது காட்சிக்கு வைக்கப்படும்.

“வடக்கின் நுழைவாயில்” என அழைக்கப்படும் இக்கண்காட்சியின் பொழுது கூட்டு வர்த்தக ஒப்பந்தங்கள், மிகப்பெரிய பொருட்களுக்கான ஓடர்கள் ஆகியன வடக்கு, கிழக்கு மக்களுக் கிடையில் நடைபெறும் முக்கிய நிகழ்வாகும்.

2016ஆம் ஆண்டிற்கான வர்ததகக் கண்காட்சியின் போது பல மேலதிக நிகழ்ச்சிகளையும்செய்வதற்கு முன்வந்துள்ளனர்.

உதாரணமாக, மாலை நேரத்தில் பிரபல பாடகர்கள் அடங்கிய இரண்டு நாள் இசை நிகழ்வுகள், சிறுவர்களுக்கான விளையாட்டு அமைப்புக்கள் என்பன அவற்றில் சிலவாகும்.

இந் நிகழ்வுகளை ஐடியல் மோட்டோர்சும் அவர்களுடன் இணைந்து எஸ்லோன்பைப் கம்பனியும் செய்கின்றன.

2016 ஆம் ஆண்டில் நடைபெறும் கண்காட்சியின் முக்கிய அம்சங்கள்,

- முந்நூறிற்கும் மேற்பட்ட கைத்தொழில் மற்றும் நுகர்வோர் சம்பந்தப்பட்ட கடைகள்.
- அறுபது ஆயிரத்திற்கும் மேற்பட்ட பார்வையாளர்கள்.
- மாலை நேரத்து இசை நிகழ்வுகள்.
- குழந்தைகளுக்கான விளையாட்டு அமைப்பு
- சகலவிதமான உணவு வகைகள் மற்றும் குளிர்பான விற்பனை நிலையம்.
- ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொருட்களுக்கு விசேட கழிவு.
- மணித்தியாலத்திற்கு மணித்தியாலம் அதிஷ்டலாபச்சீட்டுக் குலுக்கல்.
- கருத்தரங்கு, செயன்முறை விளக்கம்.
- உயர்கல்விக்கான மேடைகள்.
- இலங்கைத் தேயிலையில் பானங்கள் தயாரித்து சுவை பார்க்க வழங்குதல்.

என்பன குறிப்பிடத்தக்க நிகழ்வுகளாகும்

**தினச்செய்தி தொடர்பான விமர்சனங்கள், ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.**

***தொடர்புகளுக்கு :***
**தில்லைகட்டி லேன்,**
**சுன்னாகம் கிழக்கு,**
**சுன்னாகம்.**

**தொலைபேசி : 021 7539300**
**தொலைநகல் : 021 7539300**
**இணையம் : thinacheithi@gmail.com**



# அரசகேசரியின் பதில்கள்

கேள்வி: *அரசாங்கம் கொண்டு வரும் புதிய அரசமைப்பினால் இனப்பிரச்சினைக்கு தீர்வைக் கண்டுவிட முடியாதென ஜே.வி.பி.யின் தலைவர் அனுர குமார திஸநாயக்க கூறியுள்ளாரே? அவரின் கூற்றில் உண்மை உள்ளதா?*

பதில்: இருக்கலாம்...?

**அபிஷன், நீர்கொழும்பு.**

கேள்வி: *அரசின் புதிய அரசியலமைப்பின் மூலம் தேசியப் பிரச்சினைக்கு தீர்வைக் காண முடியுமென சம்பந்தன் நம்பிக்கை தெரிவித்துள்ளாரே?*

பதில்: அவரின் நம்பிக்கைக்கு ஆண்டவன் அருளட்டும்.


**சுரன், திருகோணமலை.**

கேள்வி: *சர்வதேச ரீதியில் விடுதலைப் புலிகளை தடைசெய்வதற்கு முன்னாள் வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் மேற்கொண்ட நடவடிக்கை தவறானதென எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளமை பற்றி என்ன நினைக்கிறீர் அரசகேசரியாரே?*

பதில்: எரிக் சொல்ஹெய்ம் எமது உள்நாட்டு விடயங்களில் தலையிடாமல் இருப்பது நல்லது.

**துஷியந்தி, மட்டக்குளி.**

கேள்வி: *தமிழ் மக்களை சில தமிழ்த் தலைமைகள் பலிக்கடா ஆக்கியுள்ளதாக டக்ளஸ் தேவானந்தா எம்.பி தெரிவித்துள்ளமை பற்றி?*





பதில்: அவரைத்தான் கேட்க வேண்டும்

**யசோதா, யாழ்ப்பாணம்**

கேள்வி: *அமெரிக்காவில் பெருகிவரும் துப்பாக்கி கலாச்சாரம் அதனால் ஏற்படும் கொலைகள் குறித்து அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா ஊடகவியலாளர்கள் முன்பு அழுததன் மூலம் விளங்குவது என்ன?*

பதில்: அவருடைய கையாலாகாத்தனம்.

**அஞ்சனா, வவுனியா.**

கேள்வி: *புதிய அரசியல் கட்சியின் உருவாக்கம் தவிர்க்க முடியாது என்கிறார் பசில்? நீர் என்ன நினைக்கிறீர்?*

பதில்: பசில் நினைப்பதற்கு நான் என்ன சொல்ல முடியும்.

**சுரேஸ், மஸ்கெலியா.**

கேள்வி: *வடபகுதி கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டு கைதான மீனவர்கள் தொடர்ச்சியாக விடுதலையாகி வரும் நிலையில், அந்த மீனவர்களால் பாதிக்கப்பட்ட எமது மீனவர்களுக்கு இழப்பீடுகளை இந்திய மத்திய அரசிடமிருந்து பெற்றுக் கொடுத்தால் என்ன?*


பதில்: நல்ல ஆலோசனை, பூனைக்கு யார் மணி கட்டுவது.

**சயந்தன், பருத்தித்துறை.**

கேள்வி: *இந்திய வெளி விவகாரச் செயலாளரும் கொழும்பு வந்து சென்றுள்ளாரே?*

பதில்: சிலர் வருவார் சிலர் போவார்.

**அஜந்தா, நாவலப்பிட்டி.**



கேள்வி: *இலங்கையில் கடும்போக்குடைய அமைப்புகளுக்கு தடை விதிக்கப்பட வேண்டுமென கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வலியுறுத்தி உள்ளமை குறித்து?*

பதில்: பரலோகத்தில் இருக்கும் தேவனே என்னை இரட்சிப்பாயாக.

**மேகலா, கண்டி.**

கேள்வி: *வடகொரியாவின் அணு ஆயுதப் பரிசோதனை அமெரிக்காவிற்கு அச்சுறுத்தலா?*

பதில்: நிச்சயமாக.

**சக்திஜீவன், கொழும்பு.**




# சொன்னார்கள் சொன்னார்கள்...

நாட்டின் ஒற்றையாட்சித் தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில், அரசியலமைப்பை வரைவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி இடமளிக்காது.

ஒற்றையாட்சியைப் பாதுகாக்கும் வகையிலும், மத சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் வகையிலுமே, புதிய அரசியலமைப்பு வரையப்படும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுதியளிக்கிறது.



ஏனைய மதங்களின் உரிமைகள் உறுதிப்படுத்தப்படும் அதேவேளை, தற்போதைய அரசியலமைப்பில் பௌத்த மதத்துக்கு கொடுக்கப்பட்டுள்ள முன்னுரிமை தொடர்ந்து வழங்கப்படும்

**பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் சந்திம வீரக்கொடி**

அரசியலமைப்பு மாற்றத்தின் மூலம், நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு குந்தகம் ஏற்படுத்தவோ, வடக்கு, கிழக்கை இணைக்கவோ மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சி அனுமதிக்காது.

அரசியலமைப்பு மாற்றத்தின் மூலம்நாடு துண்டாடப்படப் போவதாகவும் பௌத்த மதத்திற்கு இருக்கும் முன்னுரிமை நீக்கப்படப்போவதாகவும் குற்றஞ்சாட்டப்படுகிறது. நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையில் இவை எதுவும் கிடையாது.

மக்களினதும், அரசியல் கட்சிகளினதும் கருத்துக்களை பெற்றே அரசியலமைப்பு திருத்தப்படவேண்டும்.

13 ஆவது திருத்தம் எமது அரசியலமைப்பின் அங்கமாகும். 13 ஆவது திருத்தம் நாட்டின் இறைமைக்கு குந்தகமாக இல்லை என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.



எனவே 13 ஆவது திருத்தத்திற்கு அப்பால் அதிகாரத்தைப் பகிர சிறிலங்கா சுதந்திரக கட்சி உடன்படாது. வெளிநாடுகளுக்கு தேவையானவாறு இதனைத் திருத்த மாட்டோம்.

**அமைச்சர் டிலான் பெரேரா**

"தேசியப் பிரச்சினை உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதற்கு இறுதிச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

இரண்டு பிரதான கட்சிகளும் இணைந்து ஆட்சி அமைத்துள்ளது போன்றதொரு சந்தர்ப்பம் இனிமேல் ஒருபோதும் கிடைக்கப் போவதில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு அனைத்து கட்சிகளினதும் கருத்துக்களைப் பெற்று நாட்டுக்கு உகந்த அரசியலமைப்பை ஏற்படுத்துவோம்.

புதிய அரசியலமைப்பு தொடர்பான தீர்மானமே தற்போது பாராளுமன்றத்தில் முன் வைக்கப்பட்டுள்ளது.

அனைவரும் தமது கருத்துக்களையும் திருத்தங்களையும் முன்வைக்க முடியும். விவாதிக்க முடியும். அனைத்தும் வெளிப்படைத் தன்மையாகவே அமையும். எதுவுமே இரகசியமாக மேற்கொள்ளப் படமாட்டாது.




பௌத்த தர்மத்திற்கு அளிக்கப்படும் முதலிடத்துக்கு, புதிய அரசியலமைப்பில் எவ்வித பாதிப்பும் ஏற்படாது. அதேபோன்று ஒற்றையாட்சிக்கும் பாதிப்பு ஏற்படாது.

வடக்கு மற்றும் தெற்கிலுள்ள அடிப்படைவாதிகளின் பொய்ப் பிரசாரங்களுக்கு மக்கள் ஏமாந்துவிடக்கூடாது.

**அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல**

இன மற்றும் மத அடிப்படையிலான அரசியல் கட்சிகள் மற்றும் கடும்போக்குடைய அமைப்புக்களை தடை செய்ய வேண்டும்.

இவ்வாறான கட்சிகள் அமைப்புக்கள் எம்மை ஐக்கியப்படுத்த முயற்சிப்பதில்லை. மாறாக எம்மை பிளவடையச் செய்யவே முயற்சிக்கின்றன.



நீண்ட கால அடிப்படையில் கடும்போக்குடைய அமைப்புகள் மற்றும் இன மதவாத அடிப்படையிலான அரசியல் கட்சிகளை தடை செய்ய வேண்டும்.

நாட்டின் சில பகுதிகள் தமக்கு மட்டும் சொந்தமானது என நினைப்பது பிழையானது. அவ்வாறு உரிமை வழங்கும் எந்தவொரு உறுதியும் எங்கும் எழுதப்படவில்லை. இன அல்லது மத ரீதியான பிரிவினைகளுக்கு நாம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்

**கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை**

நாட்டு மக்களின் விருப்பு வெறுப்புகள் உள்வாங்கப்பட்ட மற்றும் காலத்துக்கு பொருந்தக் கூடியவாறான அரசமைப்பு முறை இருக்க வேண்டும் என்பது எனது கருத்து.

துரதிஸ்டவசமாக நாடு பல வாய்ப்புகளை தவறவிட்டிருக்கிறது. டட்லி சேனநாயக்க –செல்வநாயகம், பண்டாரநாயக்க– செல்வநாயகம் உடன்பாடுகளை நடைமுறைப் படுத்த அனுமதிக்கப்பட்டிருந்தால், வேலுப்பிள்ளை பிரபாகரன் என்ற ஒருவர், உருவாகியிருக்கமாட்டார்



1958, 1971,1983 வன்முறைகளில் இருந்து பாடம் கற்றோம். 2004இல் ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் கூட நாட்டை அபிவிருத்தி செய்யும் நல்லதொரு வாய்ப்பை வழங்கியது. இவ்வாறு பல வாய்ப்புகளை நாடு இழந்திருக்கிறது.


தெற்கிலுள்ள மக்கள் சமஸ்டி என்ற சொல்லைப் பார்த்து அஞ்சுகின்றனர். வடக்கிலுள்ளவர்கள் அதேபோன்று ஒற்றையாட்சி என்ற சொல்லுக்கு அஞ்சுகின்றனர். இதனைத் தீர்க்க வேண்டும்.

அரசியலமைப்பை வரைவதற்கு அரசாங்கத்திடம் தகுதிவாய்ந்த, ஆற்றல் வாய்ந்தவர்கள் இருக்கின்றனர். எனவே அதனை விரைவாக மேற்கொள்ள வேண்டும்.

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன**




# ஹைட் மைதானத்தில் ஜே.வி.பியின் முதலாவது கூட்டம்



இராமலிங்கம் சந்திரசேகர்
மத்திய குழு உறுப்பினர்
மக்கள் விடுதலை முன்னணி.

1970 மே 27ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் ஸ்ரீ.ல.சு.க., ல.ச.ச.க., கம்யூனிஸ்ட் கட்சி (ஐக்கிய முன்னணி) பெரும்பான்மை வெற்றியைக் கண்டன. இக்காலத்தில் தோழர் ரோகண விஜேவீர சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். ஐக்கிய முன்னணி வெற்றியுற்றதன் பின்னர் தோழர் விஜேவீர விடுதலை செய்யப்படுவார், அடக்குமுறைகள் முடிவுக்கு வருமென எதிர்பார்த்த போதிலும், அது அவ்வாறு இடம்பெறவில்லை. அதனால் தோழர் ரோகண விஜேவீரவை விடுதலை செய்யும்படி வற்புறுத்தி ஆர்பாட்ட இயக்கமொன்றை முன்னெடுக்க கட்சி முடிவுசெய்தது.

அதற்கிணங்க 1970 ஜீலை 09 ஆம் திகதி தோழர் ரோகணவை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டிய நிலையேற்பட்டது. அவரை விடுதலை செய்யும்படி கட்சி வலியுறுத்தும் போராட்டத்தை அவரை விடுதலை செய்வதற்கு முதல்நாள் மேற்கொண்டிருந்தது. கைகளினால் வரைந்த சுவரொட்டிகள் (போஸ்டர்) நாடு முழுவதும் ஒட்டப்பட்டதுடன், அந்தசுவரொட்டியில் எழுதப்பட்டிருந்ததாவது "தேசப் பற்றுள்ள தோழர் ரோகண விஜேவீராவை விடுதலை செய்!" எனும் சுலோகமாகும்.

மக்கள் விடுதலை முன்னணி முன்னெடுத்த இந்த ஆர்ப்பாட்ட இயக்கம் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக மாறியது. காரணங்கள் எவையெனில் ஜே.வி.பி. தனது பெயரில் மேற்கொண்ட முதலாவது போஸ்டர் இயக்கம் இதுவாகும். அதன்மூலம் அந்நாள் வரையில் இலங்கையில் இருந்து வந்த விளம்பர கலையில் புரட்சிகரமான மாற்றத்தை ஆரம்பித்தது. அது நாள் வரையில் பிரசார தகவல்களுக்காக பயன்படுத்திய அச்சு அறிவித்தலுக்குப் பதிலாக கையில் வரையப்பட்ட விளம்பரக்கலை தோன்றியது அந்நாளாகும். இலங்கையில் தற்போது மிக பிரபல்யம் அடைந்து இருக்கும் போஸ்டர் கலையை இலங்கைக்கு அறிமுகப் படுத்தியவர்கள் மக்கள் விடுதலை முன்னணியினர். மற்றைய விடயம் என்னவென்றால் ஒரே இரவில் நாடு முழுவதிலும் இடம் பெற்றமையாகும். இதற்கு முன்னர் இவ்வாறு நாடு முழுவதிலும் தாக்கத்தினை ஏற்படுத்தும் பிரச்சார இயக்கம் இலங்கையில் இருந்திருக்கவில்லை. ஒரே இரவில் நாடு முழுவதிலும் போஸ்டர் ஒட்டும் தகைமையை இன்றும் கொண்டிருப்பது மக்கள் விடுதலை முன்னணியே. அடுத்த முக்கிய விடயம் என்னவெனில் ஒரே இரவில் ஒரே வடிவத்தில் தோன்றிய இந்தப் போஸ்டர் இயக்கத்துடன் ஜே.வி.பியின் அமைப்புச் சக்தியைப் பற்றி அரசாங்கத்தின் கவனம் திரும்பியமையாகும். இதன் காரணமாக அரசாங்கம் குழப்ப நிலையை வெளிப்படுத்தியது.

நிலைமைகள் இவ்வாறு இருந்தபோது 1970 ஜீலை 09 ஆம் திகதி நுவரெலியா மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் தோழர் ரோகண விஜேவீர விடுதலை செய்யப்படுகிறார். ஜே.வி.பி. பிரமாண்டமான பிரசார இயக்கத்தை ஆரம்பித்ததாகவும் திறமையான மற்றும் கேட்போரை வசியப்படுத்தும் பேச்சாளராக தோழர் ரோகண விஜேவீரவை நாடு இனங்கண்டதும் இவ்வாறான அரசியல் பின்னணியிலேயாகும்.



கட்சியினுள் தோன்றியிருந்த உள்ளக நெருக்கடி இக்காலத்திலேயே பாரியளவில் உக்கிரமடைந்திருந்தது. இந்த உள்ளக முரண்பாட்டைக் கட்சி சரியாக இனங்கண்டுகொண்டது. "திறமையற்ற பழைய மற்றும் திறமையான புதியவர்களுக்குமிடையிலான முரண்பாடுகள். என்பதாகும், கட்சியில் லொக்கு அத்துல, கருணாரத்ன போன்றவர்களை விட திறமையும் ஆற்றலையும் கொண்டவர்கள் கட்சியில் பிற்காலத்தில் இணைந்திருந்தனர். விஷேடமாக பல்கலைக்கழகங்கள் ஊடாக கட்சியில் லயனல் போபகே, ஜயதேவ உயன்கொட போன்றவர்கள் திறமைசாலிகள் ஆவர். புரட்சிகர இயக்கம் எப்போதும் திறமை சாலிகளுக்கு சந்தர்ப்பத்தையும் பொறுப்புக்களையும் பெற்றுக்கொடுக்க வேண்டியிருப்பதால் இந்த திறமையான தோழர்களிடம் பொறுப்புக்களை ஒப்படைக்கும்போது திறமையில்லாத பழைய நபர்கள் அதை விரும்புவதில்லை. பழைய திறமையற்றவர்களுக்கும் புதிய திறமைசாலிகளுக்கும் இடையில் முரண்பாடு தோன்றுவது இவ்விடத்திலாகும். இதன்போது தோழர் ரோகண விஜேவீர எப்போதும் திறமைசாலிகளுக்கு பொறுப்புகளை ஒப்படைப்பதனால், லொக்கு அத்துல போன்றவர்கள் தங்களது தனிப்பட்ட நோக்கத்தை மறைத்துக் கொண்டிருந்த பழையவர்கள் தோழர் விஜே வீரவுடனும் முரண்பட்டுக் கொண்டனர்.

கட்சி உள்ளகத்தில் தோன்றிய முரண்பாடுகளின் விளைவாக, தோழர் ரோகண விஜேவீர சிறையில் இருக்கும்போது லொக்கு அத்துலவினால் கட்சியின் அடிப்படை கமிட்டி" கலைக்கப்பட்டது. அப்போது மத்திய கமிட்டியின் பாத்திரத்தை வகித்த "அடிப்படை அமைப்பை" கலைத்த லொக்கு அத்துல அதற்குப் பதிலாக தமக்கு ஆதரவானவர்களை உள்ளடக்கிய குழுவொன்றைக் கொண்டு சென்றதுடன் அதன் மூலம் போபகே போன்றவர்கள் விரும்பாதவர்களை சூட்சுமமான முறையில் அமைப்பிலிருந்து வெளியேற்றுவதற்கும் அவர்களுக்கு எதிராக பொய்யான குற்றச்சாட்டுக்களைப் பரப்புவதற்கும் நடவடிக்கை எடுத்தார். தனிப்பட்ட நோக்கத்துடன், தலைமைத்துவத்திற்கும் அதிகாரத்திற்கும் பேராசை பிடித்தவர்கள் புரட்சிகர இயக்கத்தில் சேரும்போது அதன் மூலம் புரட்சிகர இயக்கங்களுக்குப் பாரிய பாதிப்புகள் ஏற்படுமென்பதை மீளவும் உறுதிப்படுத்துகின்றது. ஆனால், அவைகளுக்கு முகம் கொடுக்காது புரட்சிகர இயக்கத்திற்கு முன் செல்ல முடியாதது போலவே புரட்சிகர இயக்கம் அவ்வாறான அனுபவங்களைப் பெற்று உறுதியுறுவதும் அவ்வாறான சம்பவங்களுக்கு முகம் கொடுப்பதன் மூலமாகவேயாகும்.

**ஜே.வி.பியின் வரலாறு - 4**

தோழர் விஜேவீர விடுதலையானதன் பின்னர் பாரிய பிரசாரச் திட்டத்துடன் மக்கள் விடுதலை முன்னணி பகிரங்க அரசியலில் நேரடியாகவே இறங்கியதும் ஒரு புறத்தில் மேற்குறிப்பிட்ட உள்ளக நெருக்கடியும் மறுபுறத்தில் தொடர்ந்து வந்த அரச அடக்கு முறைக்கும் இடையிலும் ம.வி.மு கருத்தியல் பிரச்சார இயக்கத்தை 1970, ஜீலை 4 ஆம் திகதி வித்தியோதய பல்கலைக்கழகத்தில் தோழர் விஜேவீர நடத்திய பகிரங்க செற் பொழிவின் மூலமாக ஆரம்பித்து வைத்தார். இந்த சொற்பொழிவின் தொனிப பொருள் 'சி.ஐ.ஏ.காரர்கள்' என்பதாகும் அதற்கான காரணம் பழைய இடதுகள் ம.வி.மு.யை சி.ஐ.ஏ எடுபிடிகள் என கூறியிருந்ததனால், அதற்குப் பதிலளிக்க வேண்டிய நிலை இருந்தமையினாலாகும். இந்த சொற்பொழிவை நிகழ்த்தும் போது தோழர் ரோகண விஜேவீர கட்சியின் பொதுச்செயலாளரும் பிரதான பேச்சாளரும் ஆவர்.

அதன் பின்னர் ம.வி.முன்னணி பல பொதுக்கூட்டங்களை ஆரம்பித்தது. கட்சியின் கன்னி கூட்டம் 1970, ஆகஸ்ட் 10 ஆம் திகதி ஹைட்பார்க் மைதானத்தில் இடம் பெற்றது. இந்த கன்னிக் கூட்டத்தில் நமது நாட்டில் அரசியலில் புதிய மைல்கல் முன்வைத்ததாக அமைந்தது. ம.வி.மு இடதுசாரி இயக்கமாக இருந்தது போலவே தேசபக்த இயக்கமாகவும் இருந்தது என்பதை இந்தக் கூட்டம் மேலும் உறுதிப்படுத்தியது. மேடையின் பின் பகுதி மார்க்ஸிஸத்தின் பிதாக்களான மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின் ஆகியோரின் புகைப்படங்களுடனும் இலங்கையின் காலனித்துவ எதிர்ப்பு போராட்டத்தின் வீரனான கெப்பெட்டிகொலவின் உருவப்படமும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. கூட்ட மேடையமைப்பும் அந்தநாள் வரையில் இருந்து வந்த சம்பிரதாய பூர்வமான மேடையை விட வேறு தன்மையைக் கொண்டிருந்தது. பெரும் திரளான இளைஞர்களின் பங்களிப்புடன் பெரும் திரளான மக்கள் கலந்து கொண்ட இக்கூட்டத்தின் விஷேடஅம்சம் என்னவெனில் மக்கள் ஆதரவாகும். கூட்டத்தின் பிரதான பேச்சாளரான தோழர் விஜேவீர தனது உரையின் இறுதியில் கட்சியைக் கட்டியெழுப்பும் பணிக்காக மக்களிடம் உதவி கேட்டபோது சில இளைஞர்கள் தாங்கள் கழுத்தில் அணிந்திருந்த தங்கச் சங்கிலிகளையும், சிலர் தமது கைக்கடிகாரங்களையும் கழட்டி கொடுத்தனர். இது ஆட்சியாளர்களை அச்சமடையச் செய்த சம்பவமாகும். ம.வி.முயின் தலைவர் மேடையிலிருந்து உதவிகளைக் கேட்ட போது அன்று 1970 இல் இருந்த பொருளாதார நிலைமைக்கேற்ப யுவதி ஒருவர் தனது கழுத்தில் அணிந்திருந்த மாலை, மூக்குத்தி, தோடுகளை கழட்டி கொடுப்பதற்கும், இளைஞர்கள் தம் கையில் கட்டியிருந்த கைக்கடிகாரத்தை கழட்டி கொடுக்க முன்வந்தமையாது. இந்த இயக்கம் தொடர்பாக இளம் தலைமுறையினரின் வசிகரிப்பும், தியாகத்தையும் கோடிட்டு காட்டியது. அந்நாள் நிகழ்வின் மூலம் ஆளும் வர்க்கம் அச்சமடைவது ஒன்றும் புதுமையான விடயமல்ல. ம.வி.மு. இளைஞர்களின் ஆதரவை அதிகமாக பெற்றுக்கொண்டபோது ஐக்கிய முன்னணி அரசாங்கம் தமது அடக்குமுறையை உக்கி ரப்படுத்தியது. இந்த நெருக்கடியின காரணமாகவும் கட்சியின் உள்ளக நெருக்கடியின் காரணமாகவும் 1970 ஆகஸ்டில் ஆரம்பமான பிரசார இயக்கம் 1971 ஆரம்பத்தில் நிறுத்தவேண்டிய நிலை ஏற்பட்டது.

1970 ஆகஸ்ட் 10ஆம் திகதி ஹைட் மைதானத்தில் ஆரம்பிக்கப்பட்ட ம.வி.மு.யின் பிரசார

(தொடர்ச்சி 23 இல் .....)

# எழுச்சி பெற்ற த.ப.க இயக்கத்திற்கு உதவி வழங்காத திருமலை பிரமுகர்கள்

## திருமலையில் தமிழ் பல்கலைக்கழக இயக்கம்மறைக்கப்பட்ட உண்மைகள் -3

25 ஏக்கர் விவசாயத்திட்டத்தின் முகாமைத்துவம் கமத்தொழில் திணைக்கள விவசாய உத்தியோகத்தரான காராளசிங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அவருக்கு உதவியாக அவரின் சிபார்சுக்கிணங்க குண்டசாலை விவசாயக் கல்லூரியில் சிறப்புப் பயிற்சிபெற்ற இராமன் என்பவர் பண்ணை முகாமையாளராக நியமனம் செய்யப்பட்டார். மேற்படி 25 ஏக்கர் விசாயத் திட்டத்தை பொறுப்பேற்ற காராளசிங்கம் ,இறுங்கு பயிர்ச் செய்கையை தெரிவு செய்ததுடன் இறுங்கு பயிர்ச் செய்கைக்குஅனாவசியமான செலவுகளை சிபாரிசு செய்ததன் மூலம் மிகப்பெரிய நஷ்டத்தை த.ப.க.இயக்க பயிற்சி நிலையத்திற்கு ஏற்படுத்தினார்.

எதிர்பார்த்திராத ,இத்தோல்வி பற்றி எல்.ஏ.ரி.வில்லியம்ஸ் முதலீட்டாளர்களுடன் கலந்துரையாடி உண்மை நிலைமையை எடுத்துரைத்ததுடன்,அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பாக அவர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார். பயிற்சி நிலையத்தை உருவாக்கும் விடயத்தில் தொடர்ந்தும் உற்சாகமாக செயற்படும்படி முதலீட்டாளர்கள் உற்சாகப்படுத்தினர்.

தேல்வியைக்கண்டு துவண்டு விடாமல் அடுத்த நடவடிக்கை தொடர்பாக எல்.ஏ.ரி. வில்லியம்ஸ், க.தங்கமயில். பூ.சந்திரகுமாரன், இரா.கனகரத்தினம், ந.மனோகரன் ஆகியோர் கலந்துரையாடி மிளகாய் செய்கையை மேற்கொள்வதன் மூலம் இறுங்கு பயிர்ச்செய்கையில் இழந்த மூலதனத்தை சரிசெய்து கொள்ள முடியும் என தீர்மானித்து உடனடியாக செயலில் இறங்கினர்

மிளகாய் பயிர்ச்செய்கை எதிர்பார்த்திருக்காத வகையில் பெரு வெற்றியைக் கொடுத்தது. 25 ஏக்கர் நிலப்பரப்பை பயன்படுத்தி ஆரம்



பிக்கப்பட்ட பாரிய விவசாயத் திட்டத்தின் பொறுப்பு நிரந்தர ஊழியர், அமைய ஊழியர் என கிட்டத்தட்ட 60 ஊழியர்களுக்கு பயிற்சி நிலையப் பண்ணையில் தொழில் வழங்கக் கூடியதாக இருந்தது.

மரக்கறி வகைகள், மிளகாய், கத்தரி நாற்றுக்கள் உழுந்து, பயறு, கௌப்பி போன்ற தானிய வகைகள் ஆகியவற்றை பெரிய அளவில் உற்பத்தி செய்ததன் மூலமாக பயிற்சி நிலையப் பண்ணை திருகோணமலை விவசாயிகளின் நம்பிக்கைக்குரிய ஸ்தாபனமாக மாறியதுடன் ஏற்கனவே த.ப.க. ,இயக்கம் இழந்திருந்த நம்பிக்கையை படிப்படியாக மீளப் பெறக்கூடியதாக இருந்தது. இவ் வெற்றிக்கான பிரதான காரணி பயிற்சி நிலையத்தின் ஒவ்வொரு அசைவும் எல். ஏ.ரி.வில்லியம்சின் நேரடி கண்காணிப்பில் இடம்பெற்றமையாகும், இதற்காக பிரதி சனிக் கிழமை தோறும் எல்.ஏ.ரி.வில்லியம்ஸ் பயிற்சி நிலையப் பண்ணையில் தவறாது சமுகமாக இருப்பார்



அன்றைய காலகட்டத்தில் ஒரு இறாத்தல் செத்தல் மிளகாய் (அன்றைய காலகட்டத்தில் கிலோ நிறுவை நடைமுறையில் இருக்கவில்லை) 140 ரூபாவாக கறுப்புச் சந்தையில் விற்பனையாகிக் கொண்டிருந்த வேளையில் த.ப.க.இயக்கத்தின் பயிற்சி நிலையப் பண்ணையில் ஒரு இறாத்தல் செத்தல் மிளகாய் கட்டுப்பாட்டு விலையான 16 ரூபாய்க்கு பங்கீட்டு அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டமையானது பொது மக்கள் மத்தியில் த.ப.க. இயக்க பயிற்சி நிலையபண்ணை தொடர்பில் நல்லெண்ணம் உருவாகக் காரணமாகியது.

மரக்கறி மற்றும் தானியவகை உற்பத்திகள், மிதமிஞ்சிய மிளகாய் அறுவடை பெருமளவான கத்தரி, மிளகாய் நாற்றுவகைகள் விதை வெங்காயம் போன்றவற்றின் விற்பனை பெருமளவான வருவாயை பண்ணைக்கு பெற்றுக் கொடுத்தது. பயிற்சி நிலையப் பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் நாற்று வகைகளுக்கு திருகோணமலை விவசாயிகள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றிருந்தன. செடிப்பயற்றை, கௌப்பி, சோயா அவரை, புதியரக பயறு, உழுந்து வகைகள் விவசாய திணைக்களத்தால் அறிமுகப்படுத்திய சூட்டோடு சூடாக திருகோணமலை மாவட்ட விவசாயிகளுக்கு அவற்றை அறிமுகப்படுத்துவதில் முன்னணி வகித்த Inline image 1 பெருமைக்குரிய ஸ்தாபனமாக த.ப.க.இயக்கத்தின் பயிற்சி நிலையப் பண்ணை விளங்கியது. இதன் காரணமாக பண்ணையில் உற்பத்தியான பொருமளவான தானிய வகைகள் விதைத் தேவைக்காக விவசாயிகளால் கொள்முதல் செய்யப்பட்டன. இதுதவிர. விளக்கெண்ணை தயாரிப்பதற்கு உகந்ததான "ஹீரா" வகை முத்தாமணக்கு விதைகளை கொழும்பின் பிரபல நிறுவனமான சீ.ஐ.சீக்கு வினியோகித்ததனூடாக த.ப.க இயக்கத்தின் பயிற்சி நிலையம் மேற்படி நிறுவனத்தின் நம்பிக்கைக்குரிய ஸ்தாபனமாக விளங்கியது. விவசாயிகளுக்கும் முத்தாமணக்கு பயிர்செய்கையை அறிமுகப்படுத்தியதுடன் அறுவடைகளை விவசாயிகள் இடையூறின்றி விற்பனை செய்து கொள்வதற்கான வசதியை பயிற்சி நிலையப் பண்ணை ஏற்பாடு செய்து கொடுத்திருந்தது. மறுபுறமாக விவசாய கழிவுப் பொருட்கள், குப்பை கூழங்களால் தயாரிக்கப்படும் சேதனைப் பசளை தயாரிக்கும் முறை, குறுகிய நேரத்தில் மிளகாய்ப் பழங்களை செயற்கை முறையில் காயவைக்கும் போறணை முறை போன்றவற்றை திருகோணமலை விவசாயிகளுக்கு அறிமுகம் செய்த பெருமையும் த.ப.க. இயக்க பண்ணையையே சாரும். (இவ்வாறாக வளர்ச்சி பெற்ற நிறுவனம் பற்றி தமிழ் தினசரி ஒன்றில் த.ப.க.இயக்கத்தின் விவசாய முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை என திரிபுபடுத்தி கட்டுரை ஒன்றை 14. 02.1999ஆம் திகதி வெளியிட்டிருந்தது. த.ப.க. இயக்கத்தின் கமத்தொழில் கால்நடை பயிற்சி நிலையப் பண்ணை திருகோணமலை மாவட்ட கமத்தொழில் அபிவிருத்தியில் முன்னோடியாகத் திகழ்ந்ததை அவதானித்த அன்றைய கமத்தொழில் திணைக்களப் பணிப்பாளர்களான திரு. நடேசன், திரு.அபேரத்னா ஆகியோரின் பாராட்டைப் பெற்றுக் கொண்டது. அத்துடன் மேற்படி பணிப்பாளர்களின் ஆலோசனைக்கிணங்க திருகோணமலை மாவட்ட விவசாயிகளுக்கு விவசாயக் கண்காட்சி மற்றும் கமத்தொழில் செயல் முறையில் நவீன மாற்றங்கள் பற்றிய கண்காட்சி, விரிவுரைகள் கருத்தரங்கு ஆகியவை பயிற்சி நிலைய கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்டன. இதன் மூலம் எல்.ஏ.ரி வில்லியம்ஸ் பொறுப்பேற்ற பணியின் முதற்கட்டம் மிக கோலாகலமாக பயிற்சி நிலைய வளா



த.ப.க.இயக்கத்தின் பயிற்சி நிலைய பண்ணையில் திருகோணமலை மாவட்ட விவசாயிகளுக்கு செயன்முறை விளக்கம் வழங்கும் கருத்தரங்கின் காட்சிகளை படங்களில் காணலாம்.

கத்தில் வெற்றிகரமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது இவ்வாறான செயற்பாடுகளினால் த.ப.க. இயக்கத்தை கட்டியெழுப்ப உதவிய தமிழ் மக்களில் சிறுபிரிவினர் பயனடைந்தனர் எனச் சொல்லலாம்.

Inline image 3Inline image 2

இவை ஒருபுறமாக நடந்து கொண்டிருக்க மறுபுறமாக செயன் முறை பயிற்சி முகாமுக்கான ஆரம்பத் திட்டமிடல்களும் மேற்கொள்ளப்பட்டன. மலையகத்தின் வேலையற்ற இளைஞர்களுக்கு கமத்தொழில் கால்நடை வளர்ப்பில் பயிற்சியளித்து அவர்களை இத்துறையில் ஈடுபடுத்த திட்டமிடப்பட்டது. இதனடிப்படையில் பரீட்சார்த்தமாக மலையக இளைஞர்கள் பத்துப்பேர் பயிற்சிக்காக சேர்த்துக் கொள்ளப்பட்டனர். பயிற்சிக்காலத்தில் தங்குமிட வசதி, உணவு மற்றும் ஏனைய வசதிகள் பயிற்சி நிலையத்தால் வழங்கப்படுவதுடன் பயிற்சிக் காலத்தில் இவர்களின் பணிக்கு குறிப்பிட்டளவு ஊதியமும் வழங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. இவர்களுக்கான ஊதியம் பயிற்சி முடிவடைந்து வெளியேறும்போது மொத்தமாக வழங்கப்படும். இந்தப் பணம் அவர்களுக்கு மூலதனமாக பயன்படும் என்பதே நோக்காகும். மேற்படி திட்டமிடலின் பெறுபேறுகள் கண்டறியப்படும்வரை பயிற்சிநெறி தொடர்பான விபரங்கள் வெளியிடப்படாமையால், இது பற்றிய தகவல்கள் வெளி உலகுக்கு தெரியாமல் போனது த.ப.க.இயக்க பயிற்சி நிலையத்தினல் இடம்பெறும் கமத்தொழில் கண்காட்சி, கருத்தரங்கு, விரிவுரைகள் பற்றிய விபரங்களை இலங்கை வானொலி செய்தி அறிக்கையில் வெளியிடுகிற அளவுக்கு பிரபலமாகியது த.ப.க. இயக்கத்தின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நிகழ்வாகும். இவ்வாறாக த.ப.க.இயக்கம் புதுப்பொலிவு பெற்று வளர்ச்சிப்பாதையில் பயணிக்கத் தொடங்கிய சந்தர்ப்பத்தில் அதனை தட்டிக்கொடுத்து ஊக்குவிக்க திருகோணமலையின் பொது விவகாரங்களுக்கு உரிமை கொண்டாடும் இனப்பற்றாளர்கள் எவரும் முன்வராத நிலையில் சிவா னந்தத போவனதவத்தாய் மாதாஜி க.தங்கமயில், பூ.சந்திரகுமாரன்,ரா.கனகரெத்தினம், ந.மனோகரன் பயிற்சி நிலைய ஊழியர்களும் முன்நின்று நிகழ்ச்சியை சிறப்புற நடாத்தினர். பெருமளவில் விவசாயிகள் கலந்து கொண்ட இந்நிகழ்ச்சியில் கமத்தொழில் திணைக்கள பணிப்பாளர்கள் திரு. நடேசன், திரு. அபேரத்னா ஆகியோர் கலந்து கொண்டு விரிவுரை வழங்கிய இந்நிகழ்ச்சியில் உரையாற்றிய எல்.ஏ.ரி.வில்லியம்ஸ் திருக்கோணமலையில் நீண்ட காலம் இயக்கமற்று இருந்த த.ப.க. இயக்கம் எழுச்சி பெற்றுவருகின்ற சந்தர்ப்பத்தில் பக்கபலமாக உதவிட திருகோணமலை பிரமுகரும் முன்வரத் தயாரில்லாமையானது வேதனைக்குரியதும் வெட்கப்பட வேண்டியதுமானது எனக் குறிப்பிட்டார். இது போன்று மேலும் பல கருத்தரங்குகளும், கண்காட்சிகளும் த.ப.க.இயக்க பயிற்சி நிலைய வளாகத்தில் நடைபெற்றன.

பி.எஸ். குமரன்

# பிரபா – உமா நிரந்தர மோதல் ஆரம்பம்

பயங்காரவாதத்தை ஒழிப்பதற்கு பயங்கரவாத தடைச்சட்டம் அன்று தொடக்கம் இன்றுவரைக்கும் இந்த நாட்டின் சட்டங்களுள் ஒன்றாகவே இருந்து வருகின்றது.

இந்தச் சட்டம் என்று எமது சட்டங்களில் இருந்து நீக்கப்படும் என்று தெரியவில்லை.

வட அயர்லாந்தில் அன்று உள்ள நிலைமைகளைக் கட்டுப்படுத்துவதற்காக வரையப்பட்ட பிரித்தானியச் சட்டமே பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு (P.T.A) முன்னுதாரணமாகும்.

அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவால் பயங்கரவாத தடைச்சட்டம் பிரித்தானியச் சட்டத்தின் நகல் வடிவாக 1974 ஆம் ஆண்டு ஆக்கப்பட்டு பின்னர் இரத்துச் செய்யப்பட்டு, சில திருத்தங்களுடன் 1978 ஆம் ஆண்டு மீண்டும் சட்டமாக்கப்பட்டது. அந்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டு இன்று வரை எமது நாட்டில் அமுலில் உள்ளது.

இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் முதன்முதலாக இராணுவம் தமிழர் பிரதேசங்களில் தீவிரமாக செயற்பட்டது. ஜனாதிபதியின் மருமகனான பிரிகேடியர் வீரதுங்க1979 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டார். 1979 ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன் யாழ்ப்பாணத்தில் பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டவேண்டும் என்ற ஜனாதிபதியின் உத்தரவுடன் அவர் யாழ்ப்பாணம் வந்தார்.

அவர் வந்த பின், சந்தேகத்தின் பேரில் ஆறு தமிழ் இளைஞர்களைக் கைது செய்தார். அவ்வாறு கைது செய்யப்பட்ட வர்களுக்கு பின் என்ன நடந்தது என்றும் தெரியவில்லை. கைது செய்யப்பட்டவர்களில் இன்பம், செல்வம் என்ற இரு இளைஞர்களின் சடலங்களும் யாழ்ப்பாண கடற்கரையில் காணப்பட்டன.

1981 ஆம் ஆண்டு யூலை மாதமளவில் மாவட்ட அபிவிருத்தி சபையின் தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியில் பிரதம வேட்பாளராகப் போட்டியிட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஆ. தியாகராஜா புளொட் இயக்கத்தினரால் 21 மே 1981 ஆம் ஆண்டு சுட்டுக்கொல்லப்பட்டார்.

எவ்வளவோ பிரச்சினைகளுக்கும், குழப்பங்களுக்கும் மத்தியில் நடைபெற்ற மாவட்டசபைத் தேர்தலிலே தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி எல்லா தேர்தல் தொகுதிகளிலும் வெற்றிபெற்றது.

இந்தக் காலத்தில் தான் குட்டிமணியும், தங்கத்துரையும், ஜெகனும் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

மாவட்டசபைத் தேர்தலை அடுத்து இராணுவமும், பொலிசாரும் தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டார்கள். அன்றைய காலத்தில் யாழ்ப்பாணத்தில் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட பிராந்திய தமிழ்த் தினசரியான 'ஈழநாடு' பத்திரிகை காரியாலயமும், அச்சுக்கூடமும் இராணுவத்தினரால் தீ மூட்டப்பட்டு நாசமாக்கப்பட்டது.

இக்காலத்தில் தான் தென்னாசியாவிலேயே பெரிய நூலகம் என்று கருதப்பட்ட யாழ்ப்பாணம் நூலகம் எரியூட்டப்பட்டது. அந்த நூலகத்திலிருந்த 90 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அரிய நூல்கள் எரிக்கப்பட்டன. இவ்வாறு தமிழர்களின் அரிய வரலாற்று நூல்கள் எரிக்கப் பட்டு நாசமாக்கப்பட்டதைப் பார்த்தவர்களில் பிரபாகரனும் ஒருவராவார்.

இந்தக்காலத்தில் எவ்வாறு நாட்டைவிட்டு தப்பியோடுவது என்ற தலைமிடியை பிரபாகரன் எதிர்நோக்கினார். தங்கத்துரையையும், குட்டிமணியையும் கைது செய்த பிற்பாடு அவர் வழமையாகச் செல்லும் மறைவிடங்களுக்குப் போவதைக் கைவிட்டார். பொலிசாருக்கு அந்த மறைவிடங்கள் தெரியவந்திருக்கும் என்றே அவ்வாறு செய்தார்.

நீர்வேலி வங்கிக் கொள்ளைக்குப் பிற்பாடு வன்னிப் பிராந்தியத்தினுடாக நடந்து சென்று, மன்னார் காட்டினுள் சிறிசபாரட்ணத்துடன் சிலகாலம் பிரபாகரன் மறைந்திருந்தார்.

அதையடுத்து ஒரு சில வாரங்களுக்குப் பின் மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பிவந்து பற்றைகளுக்குள்ளும், புதருக்குள்ளும் மறைந்திருந்தார். பகல் வேளைகளில் நடமாடுவதை வெகுவாக குறைத்துக்கொண்டார்.

பிரபாகரனின் வேண்டுகோளையடுத்து வரதராஜப்பெருமாள் உதவ முன்வந்தார். இதே வரதராஜப் பெருமாள் தான் பிற்காலத்தில் பிரபாகரனின் கொலைப்பட்டியலில் முதலிடம் வகித்தவர் ஆவார். இவர் பிரபாகரனுக்காக பாதுகாப்பான வீடொன்றை வாடகைக்கு எடுத்து, அங்கே தனது தாயாரையும் அங்கு கொண்டு வந்து தங்கவைத்தார். ஆனால் பிரபாகரன் அந்த வீட்டில் தங்கவில்லை. இருந்தபோதும் பிரபாகரன் விரும்பிய போது எல்லாம் அங்கு வந்து சென்றார்.

அதேநேரம், பிரபாகரன் தனது நம்பிக்கைக்குரிய ரகுவை 5 யூன் 1981 ஆம் ஆண்டு ரெலோவின் முக்கிய செயற்பாட்டு வீரராக இயங்கிக் கொண்டிருந்த அவரது உறவினரான எம்.கே.சிவாஜிலிங்கத்துடன் தொடர்பு கொண்டு பாதுகாப்பான வீடு ஒன்றை ஒழுங்கு செய்யுமாறு கேட்டுக்கொண்டார். எந்தவிதமான தாமதமும் இன்றி சிவாஜிலிங்கம் உடனடியாக பாதுகாப்பான வீடொன்றை ஏற்பாடு செய்துகொடுத்தார்.

அவ்வாறு சிவாஜிலிங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட அந்த வீடு வல்வெட்டித்துறை இறுணுவ முகாமிற்கு அருகில் அமைந்திருந்தது. அந்த வீட்டை யாருமே சந்தேகிக்கவில்லை. அந்த இரவோடு இரவாக பிரபாகரனும், அவரது 10 உதவியாட்களும் பயங்கர ஆயுததாரிகளாக அந்த வீட்டிற்கு வந்து சேர்ந்தார்கள்.

அவர்கள் ஜி – 3, ஏ.கே–47, எஸ்.எம்.ஜி. சுடுகலன் போன்ற பயங்கர ஆயுதங்களுடன் வந்து சேர்ந்தார்கள். வந்தவர்களிடம் எல்லாம் ஒவ்வொரு கைத்தூப்பாக்கிகளும் இருந்தன. சிவாஜிலிங்கம் எடுத்துக் கொடுத்த வீடு, அந்தப் 10 பேருக்கும் போதிய இடவசதியுடன் இருந்தது. குளியல் வசதிகளும் இருந்தன.

ஆனால் பிரபாகரனுக்கு அந்த வீட்டில் நீண்ட நாட்கள் தங்கும் எண்ணம் இருக்கவில்லை. மீண்டும் பிரபாகரன் தனது ஆட்கள் மூலமாக சிவாஜிலிங்கத்தை தொடர்பு கொண்டு, ஒரு படகையும், படகோட்டியையும் அமைத்துத் தருமாறு கேட்டுக் கொண்டார்.

அக்காலத்தில் படகோட்டிகள் பாக்குநீரிணையை கரைத்துக் குடித்தவர்களாக இருந்தார்கள். இரவிலும் கூட இலங்கைக் கடற்படையின் கண்ணில் மண்ணைத் தூவி விட்டு வல்வெட்டித்துறையிலிருந்து இராமேஸ்வரம் செல்வதைத் தெரிந்து வைத்திருந்தார்கள். பிற்காலத்தில் இந்தப் படகோட்டிகள் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பிரபாகரனின் வேண்டுகோளுக்கு அமைய யூன் 6 ஆம் திகதி சிவாஜிலிங்கம் படகு ஒன்றை ஏற்பாடு செய்தார். அன்று இரவு பிரபாகரனும், அவரது ஆட்களும் சிவாஜிலிங்கம் ஏற்பாடு செய்த படகுக்குச் செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்த போது, அவர்களில் ஒருவரின் துப்பாக்கி தற்செயலாக வெடித்தது. அந்த வெடி கட்டில் மெத்தையுள் வெடித்ததால் ஓசை வெளியே பெரிதாகக் கேட்கவில்லை. அருகிலிருந்த இராணுவ முகாமிற்கு துப்பாக்கிச் சத்தம் கேட்டிருக்குமோ என பிரபாகரன் கலவரம் அடைந்தார்.

பின்னர் ஓசை பெரிதாக கேட்காததால் ஒருவாறு தன்னை அசுவாசப்படுத்திக் கொண்டு வீதியில் இறங்கி நடந்து சென்றபோது, அவர்களுக்குப் பின்னால் வெளிச்சம் போடாமல் இராணுவ ஜீப் வண்டி ஒன்று மெதுவாக ஊர்ந்து வந்து கொண்டிருந்தது. வீதியோரத்தில் நிலத்தில் விழுந்து தரையோடு தரையாக ஆடாமல் அசையாமல் படுத்தார்கள். மெதுவாக ஊர்ந்து வந்த அந்த இராணுவவண்டி அவர்களைக் கடந்து சென்றது.

தலைக்கு வந்தது தலைப்பாகையுடன் போய்விட்டது என்று உணர்ந்த பிரபாகரன், அவர்களது ஆட்களையும் எழுப்பிக்கொண்டு கடற்கரைக்குச் சென்று அங்கு காத்திருந்த வள்ளத்தில் ஏறி இந்தியாவை நோக்கிப் பயணமானார்.

ஆனால் அதேநேரத்தில், உமா மகேஸ்வரனின் புதிய அமைப்பான புளொட் அமைப்பு 1981 ஆம் ஆண்டு யூலை ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையத்தைத் தாக்கியது. அதன் பின்னர் மூன்று மாதங்கள் கழித்து கிளிநொச்சியில் மக்கள் வங்கியில் கொள்ளையடித்தார்கள்.

அந்தக்காலத்தில் பிரபாகரனுக்கு அடுத்த தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய நிலையிலிருந்த சாள்ஸ் அன்ரனி இன்றேல் சீலன், பிரபாகரன் தமிழ்நாடு சென்ற பிற்பாடும், யாழ்ப்பாணத்தில் இருந்துதான் இயங்கிவந்தான்.


ஒக்ரோபர் 15 ஆம் திகதி காங்கேசன்துறையில் வைத்து ஒரு இராணுவ ஜீப் வண்டியைத் தாக்கினார்கள். அதில் இரண்டு இராணுவ வீரர்கள் இறந்தனர். இதுவே தமிழ்ப் போராளிகள் இராணுவத்தின் மீது தாக்கிய முதல் தாக்குதலாகும்.

1982 ஆம் ஆண்டு பிரபாகரனுடைய போராளிகளுக்கும், புளொட் போராளிகளுக்கும் இடையில் தீவிரமான துப்பாக்கிச் சூடுகளும், சண்டைகளும் நடந்தன. வருட ஆரம்பம் ஜனவரி 2 ஆம் திகதி புளொட்டைச் சேர்ந்த சிவசண்முகமூர்த்தி என்று அழைக்கப்பட்ட சுந்தரத்தை யாழ்ப்பாணத்திலுள்ள சித்திரா அச்சுக்கூடத்தில் வைத்து, (சீலன் என்றுதான் கூறப்படுகின்றது) அந்தச் சீலனால் சுட்டுக்கொல்லப்பட்டார். சுந்தரம் ஒரு தீவிர மாக்ஷியக் கொள்கைப் பற்றுடையவர்.

அவர் "புதிய பாதை" என்றொரு சஞ்சிகையை வெளியிட்டு வந்தார். இது அமிர்தலிங்கத்தையும், அவரது கட்சியான தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியையும் கடுமையாகச் சாடிவந்தது. அக்காலத்தில் இந்தப் 'புதிய பாதை' சஞ்சிகை 6000 பிரதிகளுக்கும் மேல் விற்பனையாகி வந்தது.

சுந்தரத்தின் கொலை உமா மகேஸ்வரனுக்கு அதிர்ச்சியை அளித்தது. இந்தக் கொலை அதிர்வலைகளை உருவாக்கிற்று. ஈரோஸ் இயக்கத்தை விட்டு விலகி ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தில் தலைமை வகித்த கந்தாமி பத்மநாதன் சுந்தரத்தின் கொலையை வன்மையாகக் கண்டித்து அறிக்கை வெளியிட்டிருந்தார்.

அக்காலத்தில் உமாமகேஸ்வரனும் தன்னுடைய இரண்டு அந்தரங்கமான உதவியாட்களான கண்ணன் என்று அழைக்கப்படும் சோமசுந்தரம் யோதீஸ்வரனுடனும், காக்கா என்று அழைக்கப்படும் துரைராஜா சிவனேஸ்வரனுடனும் இந்தியா சென்று அடைந்தார்.




தொடரும்

(கடந்தவார தொடர்ச்சி.....)

"எங்கள்பொலிசாரும் இராணுவத்தினரும் போரில் வெல்லக்கூடிய இன்னொரு நாட்டின் பெயரைச் சொல்லு பார்க்கலாம்." இவ்வாறு வேட்டியுடனிருந்த இளைஞன் நீர்கொழும்பு இளைஞனை வினவினான். சிந்தனையைச் சற்று ஓட்டம் விட்டான். எல்லோரும் அந்த நீர்கொழும்பு இளைஞன் முகத்தைப் பார்த்தனர். இவனுக்குச் சரித்திரம் அதிகம் தெரியாது. சற்றுமேலே பார்த்த வண்ணம் வாயை முணுமுணுத்தான்.

"அமெரிக்கா... ஏலாது அணுகுண்டு, ரஷ்யா.... ஏலாது அணுகுண்டு, சீனா. ஏலாது ஏகப்பட்ட சனம், இங்கிலாந்து... ஏலாது வெள்ளைக்காரன், ஆபிரிக்கா... சரி... ம்..ம்.. முதலில் இந்தியா பிடிக்கப்போய் தோற்றுவிட்டது. பிறகு இலங்கை பிடித்தது." முகம் மலர்ந்தது வாயைத் திறந்தான்.

"கச்சதீவு"

"என்ன கச்சதீவா"?

வளாக இளைஞருக்கு சிரிப்பு பொறுக்கமுடியவில்லை.அங்கிருந்த மற்ற நீர்கொழும்பு இளைஞருக்கு சிநேகிதனின் பதிலை நினைத்து தலைகுனியவேண்டிய நிலை, கோபம் வந்துவிட்டது.


"நீயொருவேடனடா, கச்சதீவில் ஆட்களாடா இருக்கினம்? நீ தோசைக்கடையில் உழுந்து அரைக்கத்தான் சரி உனக்கு இதெல்லாம் சரிவராது"

"வேட்டியுடன் இருந்த இளைஞன் கைகளை உயர்த்தி பேச்சை நிறுத்தினான்." இதற்கெல்லாம் சிரிக்கக் கூடாது. கோபப்படவும் கூடாது. எல்லோருக்கும் எல்லாம் தெரிந்திருக்க வேண்டிய அவசியமில்லை. கச்சதீவில் ஆட்கள் யாருமில்லை. அதுபோக அது ஒரு தனிநாடு அல்ல. முன்பு கச்சதீவு இந்தியாவிற்கா அல்லது இலங்கைக்கா சொந்தம் என்பது பற்றி சர்ச்சை இருந்தது. தற்போது இலங்கைக்கு சொந்தம்" நீர்கொழும்பு இளைஞனின் கோபம் தணியவில்லை. முட்டி மோதிக் கொள்பவன் போல் தோன்றினான்.

"சரி வேடன் என்றால் ஏன் கோபப்படவேண்டும் வேடு அன், வேடு என்றால் மறைந்திருந்து தாக்குதல் என்று பொருள். மறைந்திருந்து தாக்குபவன்தான் வீரன். காடுகளில் மறைந்திருந்து விலங்குகளைத் தாக்குகின்றவனைத்தான் வேடன் என்ற சொல் குறிக்கும். வேடன்தான் வீரன்."

கோபம் இன்னும் தீர்ந்ததாகத் தெரியவில்லை.

"தோசைக்கு உழுந்து அரைப்பவன் லேசானவன் அல்ல. அவன் உணவு தயாரித்துக் கொடுப்பவன். வேடனுக்கும் உணவு வேண்டும். வேடனின் வெற்றியில் உழுந்தரைப்பவனுக்கும் பங்குண்டு. அவரவர்களுக்கு ஒரு பணி இருக்கும். அவனவன் தனது பணிகளைச் சிறப்பாகச் செய்தால் எல்லாம் சிறப்பாக அமையும். தோசைக்கு அரைப்பவன் எந்நவிதத்திலும் குறைந்நவனல்ல. இதற்கெல்லாம் கோபப்படக் கூடாது." நீர்கொழும்பு இளைஞனின் கோபம் சற்று குறைந்துவிட்டது தொடர்ந்தான்.



"பெரியபடைகள் நவீன போர்க் கருவிகளுடன் போரிட்டும் சிறிய வறிய மக்களை வெல்லமுடியாமல் வல்லரசுகள் தங்கள் பாய்படுக்கைகளைச் சுருட்டிக்கொண்டு ஓடிய சரித்திரங்கள் இந்நாட்களில் ஏராளம். உண்மையிலேயே இராணுவத்தினருடனும் பொலிசாருடனும் மோதவேண்டுமானால் அவர்களைத் தோற்கடிப்பது பெரியகாரியமல்ல. ஆனால் எழுந்தமானமாக அவர்களை எங்கள் எதிரிகள் என்று நினைத்து அவர்களுடன் மோதப்படாது. அவர்கள் மத்தியில் எங்களுக்கு நண்பர்களும் இருப்பார்கள். எதற்கும் எங்கள் போராட்ட வழிமுறைகளை வகுத்துக்கொள்ளும் முன்பு நாம் எதற்காக போராடுகிறோம் என்பதில் மனக்குழப்பம் இருக்கக்கூடாது. உரிமைகளுக்காகப் போராடுகிறோம்...... என்ன உரிமைகள்? தனிநாட்டுக்குப் போராடுகிறோம்... எதற்குத் தனிநாடு?

சிங்களவர் உனது உடைமைகளைக் கொள்ளை அடித்து விட்டார்கள் என்பதாலேயோ, டாக்குத்தர் என்ஜினியராக வரமுடியவில்லை என்பதாலேயோ அரசாங்க உத்தியோகத்திற்குச் சிங்களம் படிக்க வேண்டுமென்பதாலேயோ சிங்களவன் யாழ்ப்பாணத்திலேயும் திருகோணமலையிலும் வந்து வாழ்கிறான் என்பதாலேயோ, பாட்டன் காலத்தில் கொழும்பில் கடை போட்டது மாதிரி இப்போது போடமுடியவில்லை என்பதற்காகவோ நாங்கள் தனிநாடு கேட்டு போராட வேண்டிய அவசியமில்லை. உனது சுயநலப்போக்கையும் போலிச்சிறப்பையும் பாதுகாப்பதற்காக ஒரு தனிநாடு உருவாக்கவேண்டிய அவசியமில்லை. நீ அரசாங்க உத்தியோகத்தில் இருந்துகொண்டு உன்னிடம் உதவிக்கு வரும் பாமர மக்களை எனக்கு நேரமில்லை, 'இன்றுபோய் நாளைவா' என்று ஆணையிடுவதற்குத் தேவையான அந்த மேசைக்கும் கதிரைக்கும் சிங்களவன் போட்டிபோடுகிறான் என்பதற்கு தனிநாடு கேட்டு போராட வேண்டிய அவசியமில்லை. உனது கள்ளக்கடத்தல் தோணியை கடற்கரையில் மறித்து சோதனை போடுகிறார்கள் என்பதற்காக தனிநாடு கேட்க முடியாது.

நான் தமிழன் எனக்கு ஆங்கிலம்தான் பேசத்தெரியும் சிங்களம் தெரியவேண்டியதில்லை என்பதற்காக தனிநாடு கேட்கக்கூடாது. உனது வறுமை நிலைக்கு சிங்களவன்தான் காரணம் என்று யாரோ கூறிவிட்டார்கள் என்பதற்காக தனிநாடு கேட்டு போராடக்கூடாது. உனது இலாபத்தை சிங்களவன் கெடுக்கிறான் என்பதற்காக தனிநாடு கேட்கக்கூடாது. உனது வீட்டின் பின்னாலுள்ள அரச மரத்தை புத்த கோவிலாக்கிவிட்டார்கள் என்பதற்காக தனிநாடு கேட்கக்கூடாது." இளைஞன் சற்று நிறுத்தினான். அங்கிருந்த வளாக மாணவருக்கு இவையெல்லாம் சற்று ஆச்சரியத்தைக் கொடுத்தது. இளைஞன் மீண்டும் தொடர்ந்தான். தனது குரலைத் தணித்துக் கொண்டான். அவனுடைய முகம் உணர்ச்சியில் விறுவிறுப்படைந்தது கண்கள் கலங்கின.

"இந்த நாட்டில் உள்ள தமிழ் மக்கள் வறுமையைப் போக்கி செல்வத்தை வளர்க்கவும் தங்கள் மொழியை, கலாசாரத்தை, பாரம்பரியத்தை பேணிக்காத்து வளர்க்கவும் தங்கள் நிலத்தில் ஒரு அரசை நிறுவ விரும்புகிறார்கள்.

இந்த நாட்டில் உள்ள தமிழ் மக்கள் தமிழர்கள் என்ற காரணத்தால் நாடற்றவர்களாக கருதப்பட்டு அல்லல்பட்டு, இன்னலுற்று அகதிகளாக ஆக்கப்பட்டு கப்பலில் ஏற்றப்படுகின்றனர். அவர்களுக்கு இருக்க இடமில்லை. உண்ண உணவில்லை. செய்வதற்கு தொழிலில்லை. இவர்களுக்கு இடமும் உணவும் தொழிலும் கொடுக்கவேண்டும். தமிழன் என்று தலைநிமிர வைக்கவேண்டும்.

இந்த நாட்டிலுள்ள தமிழர்கள் கட்சியென்றும், சாதியென்றும், சமயமென்றும், ஊரென்றும், தெருவென்றும் பிரிந்து சொந்த மண்ணில் சாதிக்க முடியாமல் அந்நிய மண்ணில் கையேந்தி நிற்கிறார்கள். இதையொரு முடிவிற்கு கொண்டு வர தமிழனுக்கு ஒரு அரசு வேண்டும்.

சுதந்திரம் ஜனநாயகம் என்று கூறிக்கொண்டு மனிதனை மனிதன் சுரண்டும் சுதந்திரத்தை வளர்த்துக்கொண்டு அதிகார வெறிபிடித்து சொந்த மண்ணிலேயே தமிழனை அந்நியனாக்குகிறான் தமிழன். இதை ஒரு முடிவிற்கு

> இந்த நாட்டிலுள்ள தமிழர்கள் கட்சியென்றும், சாதியென்றும், சமயமென்றும், ஊரென்றும், தெருவென்றும் பிரிந்து சொந்த மண்ணில் சாதிக்க முடியாமல் அந்நிய மண்ணில் கையேந்தி நிற்கிறார்கள். இதையொரு முடிவிற்கு கொண்டு வர தமிழனுக்கு ஒரு அரசு வேண்டும். சுதந்திரம் ஜனநாயகம் என்று கூறிக்கொண்டு மனிதனை மனிதன் சுரண்டும் சுதந்திரத்தை வளர்த்துக்கொண்டு அதிகார வெறிபிடித்து சொந்த மண்ணிலேயே தமிழனை அந்நியனாக்குகிறான் தமிழன். இதை ஒரு முடிவிற்கு கொண்டுவரவேண்டும். தமிழன் நாகரிகம் என்று கூறிக் கொண்டு வெறும் போலியான பண்பாடுகளையும் போட்டியையும் பொறாமையையும் வளர்த்து ஏகப்பட்ட பொறுப்புகளை தலையில் வைத்துக்கொண்டு மண்ணோடு அழுந்திப் போய்க்கிடக்கிறான். இதிலிருந்து அவனை விடுவித்துத் தமிழர்கள் ஒன்றுசேர்ந்து தங்கள் முன்னேற்றத்திற்காக உழைக்கும் பொருளாதாரத் திட்டத்தை அமைத்து வழிநடாத்த ஒரு சமதர்ம அரசு நிறுவ வேண்டும்.

கொண்டுவரவேண்டும்.

தமிழன் நாகரிகம் என்று கூறிக் கொண்டு வெறும் போலியான பண்பாடுகளையும் போட்டியையும் பொறாமையையும் வளர்த்து ஏகப்பட்ட பொறுப்புகளை தலையில் வைத்துக்கொண்டு மண்ணோடு அழுந்திப் போய்க்கிடக்கிறான். இதிலிருந்து அவனை விடுவித்துத் தமிழர்கள் ஒன்றுசேர்ந்து தங்கள் முன்னேற்றத்திற்காக உழைக்கும் பொருளாதாரத் திட்டத்தை அமைத்து வழிநடாத்த ஒரு சமதர்ம அரசு நிறுவ வேண்டும்.

# லங்கா ராணி

அருளர்

சமுத்திரத்தை ஆட்கொண்டு சந்திரனை வென்று அணுவைத் துளைத்து விண்ணைப் பொழிய வைக்கின்றான் மனி தன். இந்த யுகத்தை தமிழனை அடைய வைக்க அவனை வழிநடாத்த ஒரு அரசு வேண்டும். அதை நிறுவ மண் வேண்டும். பூமி வேண்டும். இதற்குத்தான் நீ போராடவேண்டும், வேலெடுக்கவேண்டும்."

வேட்டியுடன் இருந்த இளைஞன் பேச்சை நிறுத்திவிட்டு அங்கு இருந்தவர்களை நோக்கினான். அவர்கள் கேள்வி எதுவும் எழுப்பாமல் அடுத்து என்ன கூறப் போகின்றான் என்பதனை எதிர்பார்த்தனர். வேட்டியுடன் இருந்த இளைஞன் வீர உணர்வுடன் தானே கேள்வியை எழுப்பி மீண்டும் தொடர்ந்தான்.

"யார் கரங்கள் வேலெடுக்கும்?"

"உண்டு கொழுத்து திரண்டுபோய்க் கிடக்கும கரங்கள்இதைத் தொடாது: இதைத்தொடவும் முடியாது.

உழைத்து உழைத்து முறுகிப்போன கரங்கள்தான் இதை முதலில் எடுக்கும்.

ஏர் பிடித்து காய்த்த கரங்கள்தான் இதை எடுக்கும்.

பேனா பிடித்து சோற்றுக்கு ஏங்கும் வெற்றுக் கரங்கள்தான் இதை எடுக்கும்.

இனத்தின் வீழ்ச்சியை நினைத்து நினைத்து துடிக்கும் கரங்கள்தான் இதை எடுக்கும்.

நீ முதலில் அவர்களைத் தேடி அவர்களுக்கு முதலிடம் கொடு. இதற்கு சிந்தும் இரத்தம் அவர்களிடம்தான் உண்டு. இந்த அரசை நிறுவிக்காக்கும் கரங்கள் அவர்களிடம்தான் உண்டு. இந்த அரசைத் தாங்கும் இதயம் அவர்களிடம்தான் உண்டு. அவர்களுடைய எழுச்சிதான் இந்த அரசு.

ஆகவே வரப்போகும் தமிழர் சமதர்ம சமுதாயம் எப்படியானதாக இருக்கவேண்டும் என்பது பற்றி முதலில் தெரியப்படுத்து. அங்கு வரப்போகும் அமைப்புகளைப்பற்றி தெரியப்படுத்து. அவற்றின் நிழல்களை ஏற்படுத்து. கொள்கைகளை விளக்கு. அங்கு பரிணமிக்கப்போ கும் புதிய தமிழனுடைய சமுதாயத்தின் சாதனைகளைத் தெரியப்படுத்து. இதற்காக நீ யாருக்கும் கும்பிடு போடவேண்டியதில்லை. நீயும் ஓட்டுக்கேட்க வர்திருக்கிறாய் என்று நினைத்துக் கொள்வார்கள். இதுதான் வேண்டுமென்று அடித்துச்சொல்லு. நிச்சயம் ஏற்றுக் கொள்வார்கள். இதே அவர்களது எண்ணமாக இருக்கட்டும். இதை ஏற்படுத்த எந்த தியாகத்தையும் செய்யத் தயாராக இருப்பார்கள். இதுதான் எழுச்சிக்கான சந்தர்ப்பம். நீ யாருக்கும் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. கட்டுகளை அறுத்துவிடு. எதிர்ப்பவர்களின்மீது வேலைப்பாய்ச்சு. ஈழம் தானாக வெடித்துக் கிளம்பும்."

(தொடர்ச்சி 19 இல்......)

# மன்னாரில் முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் சர்ச்சைகள் தோன்றக் காரணம் என்ன?

(கடந்த வாரத்தொடர்ச்சி...)

**பகியங்கள ஆனந்த சாகரதேரர்** – இவ்வாறு இந்த வனப்பிரதேசம் வனப்பாது காப்புக்கு உரியது என அந்த வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது. அமைச்சர் அவர்களே! 2012. 10. 10ஆம் திகதி இந்த வர்த்தமானி அறிவிக்கப்படுகின்றது. ஒன்றை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள், இதனை வர்த்தமானியில் அறிவிப்பதற்கு முன்னரே இவை வனப்பாதுகாப்புக்கு சொந்தமான காணிகள். வனப்பாது காப்புக்கு உரிமையில்லாத காணிகளை வனாந்தரம் என வர்த்தமானியில் அறிவிக்க முடியாது. அதுதான் சட்டம். வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு சரணாலயங்களை சுவீகரித்துக் கொள்ளமுடியும். ஆனால் வனப்பாதுகாப்புத் திணைக்களத்திற்கு எடுக்க முடியாது. இதுதான் முதலாவது விடயம்.

அடுத்தது வனப்பாதுகாப்பு திணைக்களத்திற்கு சரணாலயம் என அறிவித்து தனியார் காணிகள், உறுதிக் காணிகளை வனஜீவராசிகளுக்கென எடுக்க முடியும். வனப்பாதுகாப்பின் கீழுள்ள அனைத்து பிரதேசங்களும் அரசுக்குச் சொந்தமான பிரதேசங்களே. அதேபோல இவ்வாறான எந்த வர்த்தமானி அறிவித்தலையும் விரும்பியவாறு செய்ய முடியாது. இந்த அமைச்சர் அவர்கள் இருக்கும் அமைச்சரவையிலிருந்து இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியாகும் போது இதற்கு இவர் உட்பட, சுற்றாடல் அமைச்சர் அநுரபிரியதர்ஷன யாப்பா உட்பட முழு அமைச்சரவையும் வகை சொல்லவேண்டும்.

**ஹிரு தொலைக்காட்சி** – மதிப்புக்குரிய தேரர் அவர்களே! மீள்குடியேற்றத்தைத் தடுப்பதற்காகவே இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெளிவாக இங்கு குறிப்பிட்டாரே?

**பகியங்கள ஆனந்த சாகர தேரர்** – இல்லை. தெளிவாகக் கூற வேண்டும். வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிட முன்னர் முதலில் பிரதேச செயலாளர்களின் தகவல்கள் பெறப்படும். இதில் மக்கள் வசித்த இடங்கள் இருக்கின்றதா, இதில் பாடசாலைகள் இருக்கின்றதா, இதில் உறுதிக்காணிகள் இருக்கின்றதா போன்ற விடயங்களைத் தேடி ஆராய்ந்த பின்னரே வர்த்தமணி அறிவித்தல் ஒன்று வெளியிடப்படும். அவ்வாறில்லாமல் வர்த்தமானி அறிவித்தல் ஒன்று நினைத்ததைப் போல வெளியிட முடியாது.

அடுத்ததாக, இங்கு மீள்குடியேற்றத்தைத் தடுப்பதற்காகவே இந்த வர்த்தமணி அறிவித்தல் வெளியிடப்பட்டிருக்கின்றது என்பது அமைச்சர் அவர்களால் முன்வைக்கப்படும் தர்க்கமாக இருக்கின்றது. 2012ஆம் ஆண்டின் பின்னரே இந்தப் பிரச்சினை எழுந்தது என்பதை நாம் அறிவோம். இங்கு தெளிவாக ஒரு அறிக்கையினை குறிப்பிட வேண்டும். இந்த அறிக்கை இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் றுவன் வணிகசூரிய அவர்களால் வெளியிடப்பட்டிருந்தது. இதில் அவர் அழகான ஒரு அறிக்கையினை வெளியிட்டிருக்கின்றார்.

**ஹிரு தொலைக்காட்சி** – எப்போது இந்த அறிக்கை வெளியிடப்பட்டது?

**பகியங்கள ஆனந்த சாகல தேரர்** – 2014.04.20ஆம் திகதி வெளியிடப்பட்ட உத்தியோகபூர்வ அறிக்கை. அதில் வில்பத்து வனாந்தரத்தில் சட்டவிரோதமான முறையில் குடியேறியிருப்பது கடற்படை முகாம் அமைக்கப்பட்டதால் அங்கிருந்து இடம்பெயர்தவர்கள் அல்ல. மரிச்சிக்கட்டு மற்றும் முள்ளிக்குளம் கடற்படை முகாம் அமைக்கப்பட்டதால் ஒரு குடும்பம் மாத்திரமே இடம்பெயர்ந்துள்ளது. வில்பத்து வனாந்தரத்தில் சட்ட விரோதமாகக் குடியேறியிருப்பவர்களுள் அந்த ஒரு குடும்பமும் இடம்பெறவில்லை. அந்த ஒரு குடும்பத்தைத் தவிர வேறு எந்தக் குடும்பமும் இப்பிரதேசத்தில் உரிமை கோரி கடற்படையினரிடம் வேண்டுகோள் விடுக்கவில்லை.

நான் முக்கியமான தர்க்கத்தை கூற விரும்புகிறேன். இதுதான் குடியேறியுள்ளவர்கள் தொடர்பான விபரம். மரிச்சிக்கட்டுவில் பதிவு செய்யப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை 499. குடியேறியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை 475. நிரந்தர வீடுகளின் எண்ணிக்கை 375. கரடிக்குளியில் பதிவு செய்யப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை 388. குடியேறியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை 325. நிரந்தர வீடுகளின் எண்ணிக்கை75.




பாலக்குளியில் பதிவு செய்யப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை 372. இவ்வாறு விபரங்கள் குறிப்பிடப்பட்டு இறுதியில் மொத்த விபரங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதன்பிரகாரம் பதிவு செய்யப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை 1684. குடியேறியுள்ள குடும்

**எம்.எஸ். முஸப்பிர்**

பங்களின் எண்ணிக்கை 1553. நிரந்தர வீடுகளின் எண்ணிக்கை 775. இந்த விபரத்தில் உள்ள எந்த ஒரு வீடும் இந்தப் பிரதேசத்தில் இருந்த வீடுகள் அல்ல. இதற்கு வாதம் ஒன்றை முன்வைக்க முடியும் அதாவது, இவ்வாறு ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இங்கு இருந்திருக்குமானால் இங்கிருந்த ஒரு பாடசாலை போதுமானதா?

**ஹிரு தொலைக்காட்சி** – அமைச்சர் அவர்கள் இங்கு பாடசாலை இருந்தது, பள்ளிவாசல் இருந்தது என்று கூறுகின்றாரே?

**பகியங்கள ஆனந்த சாகர தேரர்** – அது இந்த கல்லாறு, மரிச்சிக்கட்டு கரடிக்குளி வனாந்தரத்திற்கு வெளியே இருந்தவைகள்.

**ஹிரு தொலைக்காட்சி** – அப்படியென்றால் அந்தப் பிரதேசங்களில் மீள்குடியேற்றம் இடம்பெறுவதில் எந்தப் பிரச்சினையுமில்லை அப்படியா?

**பகியங்கள ஆனந்த சாகர தேரர்** – இல்லை அந்தப் பிரதேசங்களில் தற்சமயம் குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. அமைச்சர் அவர்கள் இந்த வர்த்தமானி அறிவித்தல் தவறானது, இது கொழும்பிலிருந்து செய்யப்பட்டது, கல்லாறு வனாந்தரம் என்பது இதுவல்ல போன்ற பல காரணங்களைக் கூறுவாராயின் இவர் ஏன் குழு அமைத்து, ஜனாதிபதி செயல்ணி ஒன்றை நியமித்து, அந்தக் குழுவின் ஊடாக காணி ஆணையாளரிடமும், பிரதேச செயலாளரிடமும் வனப்பாதுகாப்புத் திணைக்களத்திடமும் காணி கேட்டு கடிதம் அனுப்ப வேண்டும்? தமக்கு உரிமையிருந்த காணிகளுக்கு எதற்காக இவ்வாறு வேண்டுகோள் விடுக்க வேண்டும்?

**ஹிரு தொலைக்காட்சி** – சட்டரீதியான ஒரு படிமுறை இருப்பதால் அதன் பிரகாரம் அவ்வாறு கடிதம் அனுப்பியிருக்கலாம் தானே?

**பகியங்கள ஆனந்த சாகர தேரர்** – சட்டரீதியான படிமுறைதான் தாம் வசித்த பிரதேசம். இங்கிருப்பது சட்டரீதியான படிமுறையல்ல. இவை அரசுக்குரிய காணிகள். அரச காணிகளையே வர்த்தமானியில் அறிவித்து பெறப்பட்டிருக்கின்றது. விஷேடமாக அமைச்சர் அவர்களின் வாதத்திற்கு 5ன் கீழ் 2001 என்ற இலக்கமுடைய அமைச்சின் சுற்று நிருபத்திற்கு அமைய நல்லதொரு பதில் இருக்கின்றது. அரசுக்குச் சொந்தமான அனைத்து காடுகளும் முகாமைத்துவம் மற்றும் நிருவகிக்கும் பொருட்டு வனப்பாதுகாப்புக்கு வழங்குதல் என்ற அந்த சுற்று நிருபம் வெளியிடப்பட்டதன் பின்னர்தான் அமைச்சர் அவர்களே இந்தப் பணிகள் நிறுத்தப்படுகின்றது. அதாவது இந்தச் சுற்றுநிருபம் வெளியான பின்னர்தான் இந்த குடியேற்றங்களின் சட்ட முறைகள் பிரச்சினைக்குரியதாக மாறியது. இந்தச் சுற்று நிருபம் 2001.08.10ஆம் திகதி வெளியிடப்பட்டது.

இதற்குப் பின்னர் விஷேடமாகத் தெளிவு படுத்திக் கொள்ளவேண்டும் இந்த குடியேற்றங்கள் அனைத்தும் வனப்பாதுகாப்புக்குரிய காணிகளிலேயே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்தக் குடியேற்றத்தின் போது இவ்வாறு குடியேறிய எவரும் சுற்றாடல் இழப்பு அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ளவில்லை. தொல்பொருள் சட்டத்திற்கு அமைவாக தொல்பொருள் இழப்பீட்டு அறிக்கையினைப் பெற்றுக் கொள்ளவுமில்லை. அது மாத்திரமின்றி வனவிலங்கு சட்டங்கள் மீறப்பட்டிருக்கின்றது. குறைந்தது இப்பிரதேசங்களில் அமைச்சர் உட்பட இந்தப் பிரிவினர் உரிமை கோருவார்களாயின் அமைச்சர் அவர்களுக்கு இந்த பிரதேசங்களின் இறுதி ஊர் வரைபடத்தையாவது காட்ட முடிந்திருக்க வேண்டும். இதன் இறுதி ஊர் வரைபடம் எங்குமில்லை. இவைகள் முற்றிலும் பெய்யானவையே. இவை 1907ஆம் ஆண்டிலிருந்து வனப்பாதுகாப்பு திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகள். இதன் சரியான அளவுகள் இந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

**ஹிரு தொலைக்காட்சி** – அமைச்சர் அவர்களே! நீங்கள் காட்டிய புகைப்படங்கள் தொடர்பில், அந்தப் படங்களிலுள்ள பிரதேசங்கள் அந்த மக்களுக்குரியவையே. அங்கு மீள்குடியேற்றம் செய்யப்பட்டிருக்கின்றது என்ற விடயத்தை மதிப்புக்குரிய தேரர் அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். அதற்கு அப்பால் சென்றுதான் வனாந்தரத்தை ஆக்கிரமித்திருப்பதாக கூறப்பட்டிருக்கின்றது. இப்போது உங்களுக்கான சந்தர்ப்பம்.

**அமைச்சர் ரிசாத் பதியுதீன்** – உண்மையிலேயே இவ்விடயத்தில் மதிப்புக்குரிய தேரர் அவர்கள் குழப்பிக் கொள்கிறார்கள். அவர் ஒரு சுற்றுநிருபத்தைக் காட்டி இந்தப் பிரச்சினை 2001. 08. 01ஆம் திகதிதான் வந்தது என்று கூறினார். ஆனால் இந்தப் பிரச்சினை 2012ஆம் ஆண்டின் பின்னர்தானே எழுந்தது. 2009, 2012ஆம் ஆண்டுகளில்தானே எமக் குத் தெரியாமல் கொழும்பிலிருந்து கொண்டு ஜீ. பி. எஸ் தொழில்நுட்பத்தைப் பாவித்து இந்தக்காணிகள் வர்த்தமானியில் அறிவிக் கப்பட்டது.

**ஹிரு தொலைக்காட்சி** – அமைச்சர் அவர்களே நாம் கேட்ட கேள்விக்கு பதில் தாருங்கள். நீங்கள் காட்டிய புகைப்படங்களில் அந்தப் பாடசாலை அமைந்துள்ள பிரதேசம் உட்பட அனைத்து பிரதேசங்களிலும் மீள்குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளதை மதிப்புக்குரிய தேரர் ஏற்றுக் கொள்கிறார். அதில் எந்தப் பிரச்சினையுமில்லை என அவர் தெரிவிக்கின்றார். அவர் குறிப்பிடுவது அதற்கு அப்பால் வனாந்தரத்திற்கு ஏற்பட்ட தாக்கம் பற்றியதே.

**அமைச்சர் ரிசாத் பதியுதீன்** – நான் நன்றாகவே புகைப்படங்களில் உங்களுக்கு காட்டினேன். எமது மக்களின் அனைத்து

(தொடர்ச்சி 14 இல்......)

# சேர்.பொன் இராமநாதனும் அவரது மலேயா விஜயமும்

1924 ஆம் ஆண்டு சேர்.பொன்னம்பலம் இராமநாதனுடைய மலேயா விஜயம் ஒரு மறக்கமுடியாத நிகழ்ச்சியாக அமைந்தது.

மலேயாவில் வாழும் இலங்கையர்களின் நீண்டகால ஆவலைப் பூர்த்தி செய்யும் விதமாகவே சேர். பொன்னம்பலம் இராமநாதன் அங்கு விஜயம் செய்தார்.

இந்தக் காலத்தில் தான் மலேயாவின் வரலாற்றிலேயே முதன்முதலாக இங்குள்ள இலங்கையர்கள் பொது நிர்வாகத்தின் முதுகெலும்பாக இருந்தார்கள். அங்கு வாழ்ந்த இலங்கை மக்களின் பொதுநிர்வாக சேவை பிரித்தானிய ஆட்சியில் குறிப்பிடத்தக்கதாக இருந்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மலேயாவை ஆட்சி புரிந்த பிரித்தானிய காலணித்துவ அரசுக்கு, மலேயா ஒரு நீண்ட காடுகள் கொண்ட நாடாகவும், ஆங்காங்கே சில நகரங்களும், கிராமங்களும் உள்ளதாகவும் அமைந்திருந்தது.

அக்காலத்தில் மலேயாவில் மலேரியா நோயும், வனவிலங்குகளும் நிறைந்திருந்தன. மலேயாவின் இயற்கை வளங்களை பிரித்தானியர் நல்லமுறையில் பயன்படுத்த முன்வந்தார்கள்.

ஆனால் மலேயாவில் இந்த அபிவிருத்தி வேலைகளையும், நிலத்தைப் பயன்படுத்தும் திட்டங்களையும் செயற்படுத்தத் தேவையான ஆட்கள் கிடைக்கவில்லை.

அக்காலத்து மலேயா மக்கள் கல்வியறிவு அற்றவர்களாகவும், கிராமப்புறங்களிலேயே வாழ்ந்தும் வந்தார்கள். எனவே, அந்த நாட்டை அபிவிருத்தி செய்யும் பணிகளில் மலேயர்கள் பிரயோசனமற்றவர்களாக இருந்தார்கள். இதனால் மலேசியாவிலுள்ள பிரித்தானிய ஆட்சியாளர்களுக்கு பெரும் சங்கடம் ஏற்பட்டது. அதையடுத்து, அபிவிருத்தித் திட்டங்களில் ஈடுபட வேறு இடங்களிலிலிருக்கும் மக்களை எடுப்பது என முடிவு செய்தார்கள்.


அந்த முடிவின் பிரகாரம் மலேயாவின் பிரித்தானிய ஆட்சியாளர்களின் கவனம் இலங்கையின்பால் திரும்பிற்று. கல்வியறிவு வாய்ந்த பெருமளவு இளைஞர்களை மலேயாவிற்கு வழங்குமாறு இலங்கை அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்தார்கள்.

அந்தக் காலத்தில் தான் மலேயாவில் இருந்த இலங்கைச் சமூகத்தினர் சேர். பொன்னம்பலம் இராமநாதனை அங்கு வருமாறு அழைப்பு விடுத்தனர். இலங்கை மக்களுக்கு அவர் செய்த சேவைகள் பற்றிய விபரங்கள் எல்லாம் அங்கும் போய்ச் சேர்ந்தது. இராமநாதனின் புகழ் எல்லை கடந்து மலேயாவிற்கும் பரவியிருந்தது.

அக்காலத்தில் மலேயாவில் வாழ்ந்த தமிழ் மக்களின் மனித உரிமைகள் எல்லாம் பறிக்கப்பட்டிருந்தன.

எனவே, அந்த மக்களின் கோரிக்கைகளுக்கு மதிப்பளித்து மலேயா செல்ல சம்மதம் தெரிவித்தார். சேர். பொன்னம்பலம் இராமநாதன்அவர் மலேயாவர சம்மதித்ததை கேள்வியுற்ற மக்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள்.

இலங்கையின் பெரிய தேசியத் தலைவரை வரவேற்பதற்கு பிரமாண்டமான ஏற்பாடுகள் எல்லாம் செய்தார்கள்.



கே.ரி.இராஜசிங்கம்

மலேயாவின் தலைநகரான கோலாலம்பூரில் உள்ள நகர மண்டபத்தில் வரவேற்பதற்கான பிரமாண்டமான முதல் கூட்ட ஏற்பாடுகள் நடைபெற்றன.

பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி 1924ஆம் ஆண்டு, சேர். பொன்னம்பலம் இராமநாதனும் அவரது மனைவியாரும், மகளும் கப்பலில் கொழும்பிலிருந்து மலேயாவிற்குப் புறப்பட்டார்கள்.

அவர் சிங்கப்பூர் துறைமுகத்தைச் சென்றடைந்தவுடன், அங்கு வைத்து பிரித்தானிய ஆட்சியிலுள்ள உயர் உத்தியோகத்தர்கள் மற்றும் அங்கு வாழ்ந்த பல்லினத் தலைவர்களும், அவரை சிறப்பாக வரவேற்று, ஊர்வலமாக விக்ரோறியா ஞாபகார்த்த மண்டபத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அங்குவைத்து பிரமாண்டமான வரவேற்பு வழங்கினார்கள்.

அதையடுத்து, சேர். பொன்னம்பலம் இராமநாதன் மலேயாவிற்குச் சென்றார். அங்கே அவர் மலேயா நாட்டின் ஆளுநர் மற்றும் பல மாநிலத்தின் அரசர்கள் (சுல்தான்) எல்லோரினதும் கௌரவ விருந்தினராக இருந்தார். அவர்களுடன் இராமநாதன் இலங்கை மக்களின் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் பற்றி எல்லாம் கலந்துரையாடினார். இலங்கை மக்கள் மலேயா நாட்டின் அபிவிருத்திக்குச் செய்த அளப்பரிய சேவைகளையும் எடுத்துக் கூறினார்.

மேலும், ஆரம்பகாலத்திலிருந்து இலங்கைமக்கள் மலேயாவிற்குச் செய்த தியாகங்களையும், அளப்பரிய சேவைகளையும் மறக்க வேண்டாம் என்று இடித்துக் கூறினார்.

அவர் ஆளுநர், மற்றும் மன்னர்கள், உயர் அதிகாரிகள்

சேர். பொன் னம்பலம் இராமநாதன் மலேயாவிற்குச் சென்றார். அங்கே அவர் மலேயா நாட்டின் ஆளுநர் மற்றும் பல மாநிலத்தின் அரசர்கள் (சுல்தான்) எல்லோரினதும் கௌரவ விருந்தி னராக இருந்தார். அவர்களுடன் இராமநாதன் இலங்கை மக்களின் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்கா லம் பற்றி எல்லாம் கலந்துரையா டினார். இலங்கை மக்கள் மலேயா நாட்டின் அபிவிருத்திக்குச் செய்த அளப்பரிய சேவைகளையும் எடுத் துக் கூறினார்.

இலங்கை மக்கள் மீது அக்கறைப்படும் விதத்தில் தனது நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

அன்று, 1922 ஆம் ஆண்டில் பல நூற்றுக்கணக்கான இலங்கையர்களை மலேயா சேவையிலிருந்து வேலைநீக்கம் செய்திருந்தது. அவர்களை மீண்டும் வேலையில் சேர்க்கவும் அவர் நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

அவரின்அந்த மறக்கமுடியாத விஜயத்தின் போது மலேயாவில் இருந்த இலங்கை வாழ் மக்களுக்குச் செய்த அரும்பெரும் சேவையை கூறாமல் இருக்க முடியாது.

சேர். பொன்னம்பலம் இராமநாதன் மலேயாவிலுள்ள பல மாநிலங்களுக்கு பயணம் செய்ய வசதியாக ஒரு விசேட புகையிரதம் அவருக்கு வழங்கப்பட்டது. இராமநாதன் அவர்கள் பல நகரங்களுக்கும், பட்டணங்களுக்கும் சென்று பிரசாரங்கள் செய்தார். அவரது பேச்சை மக்கள் மிகவும் கவனத்துடனும், ஆர்வத்துடனும் கேட்டார்கள்.

மலேயாவில் வாழ்கின்ற இலங்கைமக்கள் உட்பட எல்லா இனத்தவர்களும், சகோதரர்கள் போல இணைந்து வாழ வேண்டும் என்று எடுத்துக் கூறினார்.

அங்கு வாழ்ந்த சீன மக்களின் உயர்ந்த பண்புகளை எடுத்துக் கூறினார். சீனர்கள் நற்பண்புள்ளவர்கள், கருணையுள்ளவர்கள் மற்றும் தாராள மனப்பான்மையுள்ளவர்கள் என்று வானளாவில் புகழ்ந்தார். அந்த நாட்டில் வாழ்ந்த சீனப் பெண்கள் பற்றியும், அவர்களுடைய பெருமைகளையும், அவர்களது மத ஈடுபாடுகளையும் பெருமையாக விளக்கிக் கூறினார்.

கூட்டங்களில் பேசும் பொழுது, சகல இனங்களுக்கிடையிலான உறவு, ஐக்கியம் என்பவையே அவரது பேச்சின் மூலமந்திரமாக அமைந்திருந்தது. சேர். பொன்னம்பலம் இராமநாதனுக்கு வெள்ளியிலான கைத்தடி ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது. அந்த அன்பளிப்பு அருமையானதும், விலைமதிப்பற்றதும் என சேர். பொன்னம்பலம் இராமநாதன் புகழ்ந்து பாராட்டினார்.

ரெய்பிங்கில் சேர்.பொன்னம்பலம் இராமநாதன் பெராக் மாநிலத்தில் சுல்தானின் அரண்மனைக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். கீழைத்தேய மேளதாளங்கள் முழங்க அவர் அழைத்துச் செல்லப்பட்டார்.

அவருடைய மலேயா விஜயம் குறுகிய காலமாக அமைந்திருந்த போதிலும் பயனுடையதாக இருந்தது.

மலேயாவில் அவர் இருந்த போது இலங்கை மக்களுக்கு அரசாங்கத்தின் நன்மதிப்பையும் ஆதரவையும் பெற்றுக் கொடுத்தார். மேலும் அங்கு வாழ்ந்த பல இனங்களின் மத்தியில் ஒற்றுமையையும் வளர்த்தார்.

அவருக்கு அரசர்களாலும், இளவரசர்களாலும் அரண்மனையில் வழங்கப்பட்ட உபசரிப்புக்களை எல்லாம் இங்கே ஒவ்வொன்றாக எடுத்துக் கூறமுடியாது. அந்த உபசரிப்புக்கள் என்றுமே மறக்க முடியாதவை. இதற்கு முன்னர் மலேயாவிற்கு விஜயம் செய்த எந்தத் தலைவர்களுக்கும் அதுவரை கிடைக்கவில்லை என்பது தான் உண்மை.

சேர். பொன்னம்பலம் இராமநாதன் 1924 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இறுதி வாரத்தில் மலேயாவை விட்டு இலங்கைக்குத் திரும்பினார்.

அவ்வாறு மலேயாவை விட்டு இராமநாதன் திரும்பும் போது அங்கு வாழ்ந்த இலங்கைத் தமிழ் மக்கள் யாழ்ப்பாணம் சுன்னாகத்தில அமைந்திருந்த இராமநாதன் கல்லூரிக்கு 52 ஆயிரம் டொலர்களை அன்பளிப்பாக வழங்கினார்கள். ஆனால் சேர்.பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் வழங்கிய பண அன்பளிப்பை வாங்க மறுத்துவிட்டார்.

அவ்வாறு அவர்கள் சேர்த்த பணத்தை வைத்து மலேயாவில் தமிழ் மக்களுக்கான ஒரு பத்திரிகையை ஆரம்பித்து நடாத்துவதற்குப் பயன்படுத்துமாறு அவர்களிடம் சேர். பொன்னம்பலம் இராமநாதன் கேட்டுக்கொண்டார்.

(தொடரும்)




## பாலாவும் குற்றப்பரம்பரையும்

தமிழ் சினிமாவிற்கு தொடர்ந்து தரமான படங்களை கொடுப்பவர் பாலா. இவர் இயக்கத்தில் இந்த பொங்கலுக்கு தாரை தப்பட்டை படம் திரைக்கு வந்துள்ளது..இப்படத்தை தொடர்ந்து இவர் குற்றப்பரம்பரை கதையை படமாக்கவிருக்கின்றாராம். இக்கதையை பல வருடங்களாக பாரதிராஜா இயக்க விருப்பப்பட்டு முடியாமல் போனது குறிப்பிடத்தக்கது.மேலும், இப்படத்தில் விஷால், ராணா, அதர்வா, அரவிந்த் சாமி, மனிஷா கொய்ராலா, அனுஷ்கா ஆகியோர் நடிக்கவுள்ளார்களாம். இப்படத்தில் பணியாற்றிய அனைவரும் குற்றப்பரம்பரை கதையை படிக்க வேண்டும் என்று அன்பு கட்டளை விடுத்துள்ளாராம் பாலா.





## வதந்திக்கு முற்றுப்புள்ளி

கடந்த ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற தேர்தல் பிரச்சாரத்தின்போது பிரதமர் வேட்பாளராக இருந்த நரேந்திரமோடி தமிழகத்தில் தேர்தல் பிரசாரம் செய்ய வந்தபோது சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் மற்றும் இளையதளபதி விஜய் ஆகியோர்களை சந்தித்து ஆதரவு கேட்டார். இந்நிலையில் தமிழகத்தில் சட்டமன்ற தேர்தல் நெருங்கி வரும் நிலையில் பிரதமர் மோடி, அஜித்தை சந்திக்கவுள்ளதாகவும், அஜித் விரைவில் பா.ஜ.க.வில் இணையவுள்ளதாகவும் ஒருசில இணையத்தளங்களிலும், சமூக வலைத் தளங்களிலும் பரபரப்பாக செய்திகள் வெளியாகியிருந்தன..இந்நிலையில் இந்த செய்திக்கு அஜித் தரப்பில் இருந்து மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது. பல அரசியல் கட்சிகள் அஜித்தை தங்கள் கட்சியில் சேருமாறு அழைப்பு விடுப்பது உண்மைதான் என்றும், ஆனால் அஜித் தற்போது எந்த அரசியல் கட்சியிலும் சேரப்போவதில்லை என்றும், அவர் எந்த பிரமுகர்களையும் சந்திக்கும் திட்டத்தில் இல்லை என்றும் கூறப்பட்டுள்ளது. இதனால் அஜித் பா.ஜ.க.வில் இணையப்போகிறார் என்ற வதந்திக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.





## சந்திரமுகியாக தமன்னா

ரஜினிகாந்த் நடித்த சந்திரமுகி படத்தை பி.வாசு இயக்கினார். ஆவி சம்பந்தப்பட்ட கதையாக உருவான இதில் சந்திரமுகியாக ஜோதிகா நடித்திருந்தார். ஏற்கனவே இப்படத்தை கன்னடத்தில் ஆப்தமித்ரா என்ற பெயரில் இயக்கி இருந்தார். இதில் விஷ்ணுவர்தன் நடித்திருந்தார். இப்படத்தைத்தான் தமிழில் சந்திரமுகி என்ற பெயரில் ரீமேக் செய்தார். இப்படம் திரைக்கு வந்து வெற்றி பெற்றது. இதையடுத்து கன்னடத்தில் ஆப்தமித்ராவின் 2ஆம் பாகமாக 'ஆப்தரக்ஷகா' உருவாக்கினார்.

இதையே சந்திரமுகி 2ஆம் பாகமாக தமிழில் இயக்க முடிவு செய்திருந்தார் பி.வாசு. ஆனால் ரஜினி நடிக்காமல் மவுனம் சாதித்தார். தற்போது இந்த முயற்சியை மீண்டும் தூசி தட்டி இருக்கிறார் பி.வாசு. சந்திரமுகி 2ஆம் பாகத்தில் தமன்னாவை ஹீரோயினாக்க எண்ணி உள்ளார். இதுதொடர்பாக அவரிடம் கால்ஷீட் பி.வாசு தரப்பில் கேட்கப்பட்டுள்ளது.

டதற்போது பாகுபலி 2 உள்பட 3 படங்களில் தமன்னா நடித்து வருவதால் அது முடிந்தபிறகு கால்ஷீட் பற்றி பரிசீலிப்பதாக அவர் தரப்பில் பதில் தரப்பட்டுள்ளதாம். இதையடுத்து புதிய சந்திரமுகியாக வலம் வர தயாராகிறார் தமன்னா. கபாலி, 2.0 படங்களில் ரஜினி நடித்து வருவதால் அவரை சந்திரமுகி 2ஆம் பாகத்தில் நடிக்க கேட்டு விரைவில் பி.வாசு அணுக உள்ளாராம்.





ங்களூர் நாட்கள்

## வருத்தத்தில் ஜோ

குஷி, காக்க காக்க, மொழி ஆகிய படங்களின் மூலம் ரசிகர்களை கவர்ந்தவர் ஜோதிகா. இவர் தமிழ் சினிமாவில் தொடர்ந்து 12 வருடங்களுக்கு மேல் நம்பர் 1 நடிகையாக சிம்மாசனம் போட்டு அமர்ந்திருந்தார். பின் நடிகர் சூர்யாவை திருமணம் செய்துகொண்டு சினிமாவை விட்டு விலகியிருந்தார். நீண்ட இடைவேளைக்கு பிறகு 36 வயதினிலே படத்தில் நடித்து மீண்டும் ரசிகர்களை கவர்ந்தார்.இந்நிலையில் தற்போது திரையில் வெற்றி நடைபோடும் பசங்க-2 படத்தில் அமலா பால் நடித்த கதாபாத்திரத்தில் முதலில் நடிக்கவிருந்தது ஜோதிகா தானாம். அவர் அதில் நடிக்க மறுத்து விட்டாராம்.ஆனால், எல்லோரும் அந்த கதாபாத்திரத்தை புகழ, "அந்த வாய்ப்பை ஏன் மறுத்தோம்" என எண்ணி வருத்தப்படுகிறாராம்.



## ர்யாவின் தாராளம்

சூர்யா, அமலாபால், பிந்துமாதவி நடித்த "பசங்க 2" திரைப்படம் சூப்பர் ஹிட் ஆனதைத் தொடர்ந்து இந்தப் படத்தின் இயக்குனர் பாண்டிராஜ்க்கு நடிகர் சூர்யா கார் ஒன்றை பரிசாக அளித்தநிலையில் இந்தப் படத்தில் இசையமைப்பாளராக பணிபுரிந்த அரோல் கரோலியும் சூர்யாவிடம் இருந்து பரிசு பெற்றுள்ளார்.ஏற்கனவே மிஷ்கின் இயக்கிய "பிசாசு" படத்திலேயே கோலிவுட் ரசிகர்களை அசர வைத்த இசையமைப்பாளர் அரோல் கரோலி, "பசங்க 2" படத்திற்கு அருமையான பாடல்களையும் அற்புதமான பின்னணி இசையையும் அமைத்து அனைவரின் நன்மதிப்பைப் பெற்றார். இந்நிலையில் இசையமைப்பாளர் அரோல் கரோலிக்கு இந்தப் படத்தின் தயாரிப்பாளரான சூர்யா தங்கச்சங்கிலி ஒன்றை பரிசாக வழங்கியுள்ளார். அதுமட்டுமின்றி அரோல் கரோலியுடனான உறவு நீண்ட காலத்திற்கு தொடரும் என்றும் சூர்யா கூறியுள்ளார்.

மோகினி றவுஸ்



## நீலாம்பரியான த்ரிஷா




தனுஷ் நடிப்பில் கொடி படத்தின் படப்பிடிப்பு தொடங்கிவிட்டது. இதில் இவருக்கு ஜோடியாக ஷாம்லி நடித்து வருகின்றார். மேலும், முதன் முறையாக இப்படத்தில் தனுஷ்டன் இணைந்து த்ரிஷா நடிக்கவுள்ளார். இப்படம் அரசியல் சார்ந்த கதை என கூறப்படுகின்றது.கொடி படத்தில் த்ரிஷா படையப்பா நீலாம்பரி போல் வில்லி கதாபாத்திரத்தில் நடிக்கவுள்ளாராம். இதில் தனுஷ்டன் இவர் மோதுவது போல் பல காட்சிகள் இருக்குமாம்.



## கெத்து

# மன்னாரில்...



(10 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

காணிகளும், சுமார் ஆயிரம் ஏக்கர் பரப்பளவு காணி முள்ளிக்குளம் முகாமுக்காக எடுக்கப்பட்டிருக்கின்றது. அதில் கத்தோலிக்க மக்களினது அதிகமான காணிகள் தான் சென்றது. மரிச்சிக்கட்டு முஸ்லிம் பிரதேசத்திலிருந்து சிறிய பகுதியும் சென்றது. வயல் காணிகள் அதிகமாகச் சென்றது. அதற்காக அபூசாலிபு என்றவர் மாத்திரம்தான் சென்று தமது காணிக்காக உரிமை கோரினார். ஏனையவர்கள் தமக்கு பாதுகாப்பு மிக முக்கியம், கடற்படை முகாம் கண்டிப்பாகத் தேவை, புலிகள் எங்களை இருக்க விடாமல் போனதால்தானே நாங்கள் அகதியாக்கப்பட்டோம், இந்த நேவியும், இராணுவமும், பொலிசும் எமக்கு சமாதானத்தைப் பெற்றுத் தந்ததால்தானே எம்மால் மீண்டும் செல்ல முடிந்தது எனத் தெரிவித்து அம்மக்கள் முகாம் அமைக்கப்பட்ட தமது காணிகளை வழங்குமாறு கேட்டுப் போகவில்லை.

அடுத்து ஒரு விடயத்தைக் கூறவேண்டும்.2012ஆம் ஆண்டில் நானல்ல மீள்குடியேற்ற அமைச்சர். அப்போது நான் கைத்தொழில் அமைச்சர். வனஜீவராசி காணிகளை மாத்திரம்தான் வனப்பாதுகாப்புக்கு வர்த்தமானியில் அறிவிக்க முடியும் என தேரர் அவர்கள் இங்கு குறிப்பிட்டார்கள். சாதாரண அரச காணிகளை அவ்வாறு செய்ய முடியாது என்றும் கூறினார். 1979ஆம் ஆண்டின் காட்டுச் சட்ட 56ஆம் பிரிவின் மூன்றாவது உப பிரிவின் பிரகாரம் அமைச்சருக்கு எந்த ஒரு காணியையும் வனப்பாதுகாப்புக்காக எடுக்க முடியும், சுவீகரிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இவைகளிலிருந்து எல்லா விடயங்களும் பொய்யானவை என்பது உறுதியாகின்றது. எனவே இந்த சுற்றுநிருபத்தின் பிரகாரம் அமைச்சருக்கு முழுமையான அதிகாரம் இருக்கின்றது. வனஜீவி காணிகள் மாத்திரமல்ல உங்களது வீட்டுக்காணியை வேண்டுமானால் வனப்பாதுகாப்பு அமைச்சருக்கு எடுக்க முடியும். பின்னர் நீங்கள் சென்று இது எனது காணி என்று அதற்குரிய ஆவணங்களை காட்டி தெளிவுபடுத்தி அக்காணியை மீளப் பெற்றுக் கொள்ள முடியும்.

**ஹிரு தொலைக்காட்சி**–அமைச்சர் அவர்களே 1907ஆம் ஆண்டிலிருந்து இவை வனப்பாதுகாப்புக்கு உரிய காணிகள் என்று மதிப்புக்குரிய தேரர் குறிப்பிட்டார்.

**அமைச்சர் ரிசாத் பதியுதீன்** – இது அப்பட்டமான பொய்யல்லவா. 1907ஆம் ஆண்டில் வில்பத்துவும் கூட வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டிருக்கவில்லையே. 1938ஆம் ஆண்டில்தானே வில்பத்து வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. வில்பத்து வர்த்தமானியில் பிரசுரித்து அதற்கு எல்லைகள் குறிப்பிடப்பட்டது. இதற்கு முன்னர் இப்பிரதேச மக்கள் வில்பத்தினுள் விவசாயம் செய்தார்கள், சேனைப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டார்கள், மிருக வளர்ப்பில் ஈடுபட்டார்கள். வில்பத்துக்கான எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டதன் பின்னர் இதன் பின்னர் இதனுள் வரவேண்டாம் என அந்த மக்களுக்கு கௌரவமாக அறிவிக்கப்பட்டது. தற்போதும் வில்பத்துவினுள் பூக்குளம் என்ற சிங்கள கிராமம் ஒன்றும் உள்ளது. இன்னமும் இருக்கின்றது. அந்த மக்கள் இன்னமும் வசிக்கின்றார்கள். அவர்களுக்கு தற்காலிக வீடுகளை அமைத்துக் கொள்ள முடியும், நிரந்தர வீடுகள் அமைத்துக் கொள்ள முடியாது. அவ்வாறு சிங்கள மக்கள் இன்னமும் அதனுள் வசிக்கின்றார்கள்.

**அமைச்சர் ரிசாத் பதியுதீன்** – எனினும் முஸ்லிம் மக்கள் தங்களது ஊருக்குச் சென்று அவர்கள் முன்னர் விவசாயம் செய்தது வில்பத்துவின் கீழ் பகுதிகளில், அவர்கள் 1938இன் பின்னர் வில்பத்து வனாந்தரத்தின் வடக்குப் பகுதிக்குச் சென்றார்கள். அந்தப் பகுதிதான் எப்போதும் வான் புகைப்படங்கள் மூலம் காட்டப்படும் பகுதியாகும். அதுதான் கரடிக்குளி என்பதும், கொண்டச்சி என்பதும், மரிச்சிக்கட்டு என்பதும் பாலக்குளி என்பதும், முள்ளிக்குளம் என்பதும் அனைத்துமே வடக்கு பிரதேசங்கள். இந்த மக்கள் அங்கு சென்று குடியேறினர்கள். இங்கு கூறப்பட்ட விடயங்கள் அப்பட்டமான பொய்களே. பௌத்தசமயத்தின் பிர காரம்பொய் கூறுவது தவறுதானே? எனவே இந்நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருக்கும் மக்களிடம் கேட்டுக்கொள்கிறேன். தயவு செய்து இதன் உண்மைத் தன்மையினை விளங்கிக் கொள்ளுங்கள். இந்தச் சட்டத்தின் பிரகாரம் எந்த ஒரு காணியையும் வனப்பாதுகாப்புக்காக பெற்றுக் கொள்ளமுடியும். அதேபோல அந்த சட்டத்தின் ஒரு பிரிவில் அவ்வாறு பெறப்பட்ட காணிகளை விடுவிக்கவும் முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அமைச்சருக்கு எவ்வாறு எந்த ஒரு காணியையும் வனப்பாதுகாப்புக்குப் பெற்றுக்கொள்ள அதிகாரம் உள்ளதோ அதேபோல அந்தக் காணியை விடுவிக்கவும் அமைச்சருக்கு அதிகாரமிருக்கின்றது. எனவே எமக்குரிய காணிகளை, எமது மக்களின் பாரம்பரிய காணிகளை எமக்குத் தெரியாமல் எமது மக்கள் அகதி முகாம்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற போது 2009ஆம் ஆண்டு கொழும்பிலிருந்து ஜீ. பி. எஸ் தொழில்நுட்பத்தின் ஊடாக வனப்பாதுகாப்புக்காக வர்த்தமானியில் அறிவித்தார்கள். 2012ஆம் ஆண்டும் இந்த மக்கள் வாழ்ந்த பிரதேசங்கள் வர்த்தமானியில் அறிவித்தார்கள். இவ்வாறான காணிகளையே 2013 ஆம் ஆண்டு அந்த மக்கள் குடியேறுவதற்காக வழங்குமாறு அரசாங்க அதிபர் ஊடாக வேண்டுகோள்விடுக்கப்பட்டது.

**ஹிரு தொலைக்காட்சி**–அமைச்சர் அவர்களே! அவ்வாறான கிராமப் பகுதிகளின் கடைசி கிராம வரைபடங்களை பிரதேச செயலாளர்கள் மூலம் பெற்றுக் காட்ட உங்களால் முடியும்தானே? குறைந்தது நீங்கள் குறிப்பிடும் பிரதேசங்களின் கிராம வரைபடங்களை யாவது காட்டுமாறு மதிப்புக்குரிய தேரர் கேட்டுள்ளார். உங்களால் அவ்வாறு காட்ட முடியுமா?

**அமைச்சர் ரிசாத் பதியுதீன்** – நீங்கள் கேட்டது நல்ல விடயம். இதைக் கூறி முடித்துக் கொள்கிறேன். வனப்பாதுகாப்புக்குரிய காணிகள்விடுவிக்கப்பட்டுச் செல்வது அரசாங்க அதிபருக்கல்ல. அது பிரதேச செயலாளருக்கே செல்லும். எனவே முசலி பிரதேச செயலாளர் 2014.06.09ஆம் திகதி கடிதம் ஒன்று ஊடாக இவ்விடயத்தில் எந்தவித தவறுகளும் இடம்பெறவில்லை. முன்னர் வசித்த மக்களையே குடி யேற்றியிருப்பதாக அறிவித்திருக்கின்றார். அந்தக் கடிதத்தில் இடம் பெயர்ந்த அனைத்து சமூகங்கள் தொடர்பிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. முஸ்லிம் மக்களை மாத்திரமல்ல இங்கு முஸ்லிம் மக்களை மீள்குடியேற்றுவதற்கு என்று அரசாங்க அதிபர் தெரிவித்திருப்பது தவறானது எனக் கூறப்பட்டது. அரசாங்க அதிபர் முஸ்லிம் மக்கள் என்று ஏன் குறிப்பிட்டார் என்றால் முஸ்லிம் மக்களை மாத்திரமே விடுதலைப் புலிகள் ஒரேயடியாக விரட்டிவிட்டனர். சிங்கள மக்கள் புலிகள் விரட்டிவிட முன்னரே அங்கிருந்து வெளியேறிவிட்டனர். ஆனால் ஒரு இலட்சம் முஸ்லிம் மக்கள் மாத்திரமே ஒரே நாளில் இரண்டு மணி நேர கால அவகாசத்தில் புலிகளால் விரட்டப்பட்டனர். அதனால்தான் எல்.எல்.ஆர்.சி அறிக்கையில் இந்த மக்களை மீள் குடியேற்றுவதற்காக குழு ஒன்றை நியமிக்குமாறு அந்தக் குழுதான் நியமிக்கப்பட்டது. அதற்காகத்தான் அந்தக் கடிதத்தில் முஸ்லிம் மக்களை மீள்குடியேற்றுவது தொடர்பில் கூறப்பட்டது. இந்தக் கடிதத்தில் அங்கிருந்த சகல கிராமங்கள் தொடர்பில் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இங்கு மதிப்புக்குரிய தேரர் குறிப்பிட்டார்தானே நான் பொய் கூறுகிறேன், அங்கு அவ்வாறான எந்தக் கிராமமும் இருந்திருக்கவில்லை என்று. அந்தக் கடிதத்தில் பிரதேச செயலாளர் கூறியிருப்பதைப் பாருங்கள். மீள்குடியேற்றத்திற்காக சிலாவத்துறை வீதியின் மரிச்சிக்கட்டி, பாலக்குளி, கரடிக்குளி, முள்ளிக்குளம், மலன் கண்டு, தம்பட்டை முசலிக்கட்டு, கூழான்குளம், புதுவெளி, முசலி, முள்ளிக்குளம், சாயாக்குளி. முள்ளிக்குளம் என்பது தமிழ் கத்தோலிக்க மக்கள் வாழும் கிராமம். இப்பிரதேசம் முகாமுக்காக எடுக்கப்பட்டதால் அது இரண்டாக பிரிபட்டது. ஒரு பகுதியினர் முகாமுக்கு அருகாமையில் உள்ளனர். இன்னும் சிலர் கல்லாறு பகுதியில் கிராமம் ஒன்றை அமைத்துக் கொண்டு இருக்கின்றார்கள்.

**ஹிரு தொலைக்காட்சி** – தற்போது முள்ளிக்குளம் பிரதேசத்தில் யார் குடியேற்றப்பட்டிருக்கிறார்கள்?

**அமைச்சர் ரிசாத் பதியுதீன்** – முள்ளிக்குளம் கிராமத்தில் தமிழ் கத்தோலிக்க மக்களின் ஒரு பகுதியினர் முகாமுக்கு அண்மையில் வசிக்கின்றார்கள். மற்றொரு பகுதியினர் கல்லாறு பகுதியில் புதிய கிராமம் ஒன்றை அமைத்துக் கொண்டு வாழ்கின்றார்கள். அடிக்கடி வான் படங்கள் ஊடாகக் காட்டப்படும் பகுதியினுள் அம்மக்கள் வாழ்கின்றார்கள். அதேபோல 69 சிங்களக் குடும்பங்களும் வசிக்கிறார்கள். கஜூவத்தை என்ற பிரதேசத்தில் அந்தக் காலத்தில் சிங்களக் குடும்பங்களும் வாழ்ந்தார்கள். தற்போது கஜூவத்தை பகுதிக்குப் போக முடியாது. எனவே சிங்கள மக்களை வீதியின் அருகில்தான் குடியமர்த்தியிருக்கின்றோம். இப்பகுதிகளில் முஸ்லிம் சமூகம் மாத்திரம் குடியமர்த்தப்படவில்லை. இங்கு தெரிவிக்கப்படுவது மிகப் பொய்யான குற்றச்சாட்டுக்களல்லவா. இங்கு சுற்றாடலியலாளர்கள் எனக் கூறிக் கொள்ளும் ஒரு சிறு குழுவினர் இருக்கின்றனர். எமது மதிப்புக்குரிய தேரர் அவர்கள் இங்கு விடயங்களைக் குறிப்பிடுவது தெரிந்து கொண்டல்ல. நான் இவ்விடத்தில் அனைத்தையும் தெளிவுபடுத்துகிறேனே. 2009ஆம் ஆண்டில் வர்த்தமானியில் அறிவிததார்கள், 2012ஆம் ஆண்டில் வர்த்தமானியில் அறிவித்தார்கள். வனஜீவிக்குரிய காணிகளை மாத்திரமே வர்த்தமானியில் அறிவிக்க முடியும் என்றார், அவ்வாறில்லை என நான் நிரூபித்தேன். அமைச்சருக்கு வனப்பாதுகாப்புக்கு காணிகளை எடுக்கவும் அதிகாரமிருக்கின்றது, விடுவிக்கவும் அதிகாரமிருக்கின்றது என நான் நிரூபித்தேன்.

**ஹிரு தொலைக்காட்சி**–அமைச்சர் அவர்களே! எனது கேள்விக்கு பதில் தாருங்கள். இங்கு நீங்கள் குறிப்பிட்டீர்கள். கஜூவத்தை கிராமத்திற்கு தற்போது சிங்கள மக்களால் போக முடியாது என்று. ஏன் அவ்வாறு போக முடியாது?

**அமைச்சர் ரிசாத் பதியுதீன்** – அப்படியில்லை. அங்கு வாழ்ந்த மக்கள் எங்கு போனார்கள் என்று தெரியவில்லை. தற்போது அங்கிருந்த 69 குடும்பங்கள் அளவில் மீண்டும் குடியேறுவதற்காக வந்தார்கள். அந்த மக்கள்தான் சொன்னார்கள் எங்களுக்கு கஜூவத்தை ரொம்பத் தூரம், அங்கு வாழ்வாதார வசதிகள் இல்லை, எனவே எமக்கு இப்பிரதேசத்தில் காணிகளைத் தருமாறு அவர்கள் பிரதேச செயலாளருக்கு வேண்டுகோள் விடுத்தார்கள். எனவே பிரதேச செயலாளரும், அரசாங்க அதிபரும் வீதியின் அருகில் சுத்தப்படுத்தப்பட்ட பிரதேசத்தில் அவர்களைக் குடியேற்றுவதற்கு தீர்மானித்தார்கள்.

**ஹிரு தொலைக்காட்சி** – உண்மையாகவே அந்த மக்கள் அங்கு செல்ல முடியாது, அது தூரம், கஷ்டம் என்று கூறினார்களா? அல்லது போக முடியாத வகையில் ஏதாவது செய்யப்பட்டதா?

**அமைச்சர் ரிசாத் பதியுதீன்** – அந்தப் பிரதேசத்தில் தற்போது ஒருவருமில்லையே.

(தொடர்ச்சி 23 இல்......)

# அதிமதுர கவிராயப் புலலவரின் ஆணவம் அடக்கிய காளமேகம்

அதிமதுரக் கவிராயர் தம்புலமையால் எளிய மக்களையும் அதிகம் கல்லாதவரையும் மனம் போனபடி மட்டம் தட்டி தம் பட்டம் அடித்துக் கொள்பவராக வாழ்ந்து வருபவராக வாழ்ந்து வருகிறார் என்பதை கேள்விப்படக் கேள்விப்பட காளமேகப் புலவருக்கு கவிராயரின் கொட்டத்தை அடக்க வேண்டும் என்ற ஆவல் மேலிட்டது. அதனால் அரச சபைக்கே சென்று அதிமதுரத்தைச் சந்தித்து தம்புலமையின் ஆற்றலை வெளிப்படுத்துவது எனத் தீர்மானித்து அரச சபைக்கே நேரடியாகச் சென்றார்.

அங்கு சென்ற அவர் அரசனுக்கு மரியாதை செலுத்திவிட்டு மரியாதைக்கு ஒரு எலுமிச்சம்பழத்தை எடுத்து நீட்டினார். அரசன் கவிராயர் முகத்தைப் பார்த்தான். கவிராயர் முகத்தில் வெறுப்புத் தெரிந்தது. உடனே அரசனும் அதை வாங்க மறுத்து அலட்சியம் செய்தான். அதற்குள் காளமேகப்புலவர் உட்கார முடியாதபடி இருக்கைகள் எதுவும் இல்லாவண்ணம் புலவர்களைக் கொண்டு நிரப்பித்து மிகுதியைக் கவிராயர், சேவகர்கள் மூலம் அவ்விடத்திலிருந்து அகற்றிவிட்டார். காளமேகப் புலவர் சுற்றும் முற்றும் பார்த்தார். இருக்கைகள் எதுவும் இல்லை. உடனே அங்கிருந்த புலவர்களைப் பார்த்து "நீவிர்யாரோ?" என்று மெதுவாகக் கேட்க நாங்கள் கவிராயர்கள் என்று உரத்துக் கூறினார்கள். உடனே காளமேகப் புலவருக்கு சிரிப்பு வந்தது. என்ன ஏன் சிரிக்கிறீர்கள் எனக் கவிராயர் கேட்க, என்ன நீங்கள் கவிராயர்களா? கவி என்றால் குரங்கு, ராயர் என்றால் அரசர் குரங்கு அரசர்களா? அப்படி என்றால் வால் எங்கே? நீண்ட வயிறு எங்கே? முன் இரண்டு கை எங்கே? உட்குழிந்த கண் எங்கே என்ற பொருள் தொனிக்க

**வால்எங்கே நீண்ட வயிறு**
**எங்கேமுன் இரண்டு**
**கால் எங்கே உள்குழிந்த**
**கண் எங்கே?**
**சாலப் புவிராயர் போற்றும் புலவீர்காள்**
**நீவிர் கவிராயர் என்றிருந்தக் கால்**

என காளமேகப் புலவர் பாட

கவிராயருக்கும் அங்கிருந்த புலவர்களுக்கும் வெட்கமும் கோபமும் ஒன்றுசேரவர ஆத்திரத்தோடு அவரைப் பார்த்தார்கள். அவர்களைப் பரிதாபமாகவும் பரிகாசமாகவும் காளமேகப் புலவர் பார்த்தார். இப்படி அவர் பார்த்துக் கொண்டிருக்கையில் அதி மதுரத்தார் காளமேகப் புலவரைப் பார்த்து உறுமியபடி "நீர் யார் என்றார்"?

நான் கவிக்கானமேகம் என்று காளமேகப் புலவர் கூறியதும் ஏற்கனவே திருமலைராயர் உலா வரும்போது சேவகன் அதிமதுரத்தாருக்கு வணக்கம் செலுத்துமாறு காளமேகப் புலவரிடம் கூற அதற்கு காளமேகப்புலவர்

**"அதிமதுரம் என்றே அகிலம் அறியத்**
**துதிமதுரமாய் எடுத்துச் சொல்லும்–புதுமையென்ன**
**காட்டுச் சரக்கு உலகில் காரமில்லாச் சரக்குக்**
**கூட்டுச் சரக்கதனைக் கூறு"**

என இகழ்ந்து பாடிய பாடல் நினைவுக்கு வந்தது. இந்த காளமேகத்தை சபையில் எப்படியாயினும் இகழ்ந்துபாட வேண்டுமென கவிராயர் முடிவு செய்கிறார். தன்னை மற்றவர்கள் துதிக்கும் (உயர்த்திப் பேசும் அளவுக்கு) காரமில்லாத சரக்கு எனக் கூறிய காளமேகத்தை இகழ எண்ணி மூச்சுவிடும் முன்னே முன் நூறு, நானூறு பாடல் பாடியவரே சரியென்றால் ஆயிரம் பாட்டுப் பாடும் உமக்கு இங்கு கவிபாட அருகதை இல்லை. ஒன்றுமில்லாத வெள்ளை நிறமுடைய மழை பொழியும் மேகமே இங்கு உனக்கு பேசுவதற்கு என்ன வேண்டி இருக்கிறது. உனக்கு இருப்பதற்கே இடமில்லை மெல்ல நடையைக் கட்டும் எனும் அர்த்தம் வெளிப்படும் வகையில்


**"மூச்சுவிடும் முன்னே முந்நூறும் நானூறும்**
**ஆச்சுது என்றால் ஆயிரம் பாட்டு ஆகாதோ? பேச்சு என்ன**
**வெள்ளைக் கவிகாளமேகமே நின்னுடைய**
**கள்ளக் கவியைக் கட்டு"**

என்று சினத்தை வெளிப்படுத்தி அதிமதுரப் புலவர் பாட காளமேகப் புலவர் அவரைப் பார்த்து நக்கல் சிரிப்பொன்று சிரித்துவிட்டு கலைமகளை நன்கு தன்மனதிலே உருகி வேண்டி ஆதிபராசக்தியான அம்பிகையின் அருளால் தனக்கு இருப்பிடம் அரசனுக்கு சரியானதாக இருக்க அருள்புரிய வேண்டுமென நினைக்கிறார். உடனே சரஸ்வதியை போற்றி அதிமதுரத்தார் சொன்ன வெள்ளை கானமேகம் என்ற சொல்லில் வெள்ளை என்ற சொல் தொனிக்க பின்வருமாறு சரஸ்வதியை வேண்டிப் பாடுகிறார்.

**வெள்ளைக்கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு**
**வெள்ளை கமலத்து வீற்றிருப்பாய் –**
**வெள்ளை அரியாசனத்து அரசரோடு என்னைச்**
**சரியாசனம் வைத்த தாய்**

என அவர் பாடியதும் ஆதி பரா சக்தியாக உலகத்தை ஆளும் சரஸ்வதியாக கல்வித் தெய்வமாக உறையும் அம்பிகை காளமேகப் புலவருக்கு உடனே மலையை ஆட்சி செய்யும் திருமலை ராயன் என்ற அரசன் இருக்கும் இருக்கைக்கு நிகரான அரச இருக்கையை அரசனுக்கு முன்னே தோற்றுவித்தார். இதைப் பார்த்ததும் அதிமதுர கவிராயருக்கும் அங்கிருந்த புலவர்களுக்கும் காளமேகப் புலவர் மீது பயம் வந்தது. ஆனாலும் அவர்களது ஆணவம் அவர்களை விடவில்லை.காளமேகப் புலவர் ஏதோ மாயாஜால வித்தை கற்று வந்து தங்களுக்கு முன்னே நிகழ்த்திக் காட்டி தம்மை பயமுறுத்துவதாகக் கருதினார்கள். அதனால் அதிமதுரக விராயர் தன்னுடைய இஸ்ட தெய்வமான கிருஸ்ணரின் புகழ் மணக்கும் வகையிலே பாட வைத்து அதில் விஸ்ணுவின் அவதாரங்கள் பத்தும் அடங்கும் படி பாடக் கேட்டு காளமேகப் புலவரின் கவியாற்றலை பரிசோதிக்க விரும்பினார்.

அதனால் காளமேகப் புலவரைப் பார்த்து உமது பரம்பரைக்குரிய தெய்வம் எது என வினவினார். காளமேகப் புலவர் அதற்கு தன் குலதெய்வம் விஸ்ணு என்றார். தன் பிரச்சினை மிக இலகுவாகத் தீர்கிறது என நினைத்து சிரித்துக் கொண்டே "அப்படியென்றால் திருமாலுடைய அவதாரம் பத்தும் அடங்கும் வண்ணம் ஓர் வெண்பா பாடும் என அதிமதுரகவிராயர் கூற சிலேடையிலே பத்து அவதாரம் வெளிப்பட புகழ்மிக்க வேங்கடவனான திருமாலைப் பற்றி நான் வெண்பாவில் பாடுவதா பாதி என் விருப்பமாகவும் மீதி விருப்பம் உன் விருப்பமாகவும் எடுக்கவா மச்ச கூர்ம அவதாரங்கள் பற்றி மகா அசிங்கமாக நான் பாடினால் நீ கோபமடை வாய் என வெளிப்படையில் தொனிக்கவும் பொருள் பிரித்து பார்த்தால் திருவேங்கடத்தில் பிறர் போற்றி புகழும் படியாய் இருக்கும் வேங்க டவா (கிருஸ்ணா) வெண்பாவில் பாதியில் உன் புகழை விருப்பம் போல பாடுவேன். நீ மச்சா (மச்சாவதாரம்) கூர்மா (கூர்ம அவதாரம்) கோலா (வாரக அவதாரம்) சிங்கா (நரசிங்க அவதாரம்) வாமா (வாமன அவதாரம்) ராமா (பரசுராமா) ராமா (ராமஅவதாரம்) ராமா (பலராமா) கோபாலா (கிருஸ்ணா அவதாரம்) மா ஆவாய் (குதிரை வீரனாய் கல்கி அவதாரமாய் வருவாய்) என பொருள்படும் வகையிலே



**"மெச்சுபுகழ் வேங்கடவா வெண்பாவிற் பாதியிலென்**
**இச்சையிலுன் சென்ம(ம்) மெடுக்கவா–மச்சாகூர்**
**மாகோலா சிங்காவா மராமா ராமாரா**
**மாகோபா வாமாவா வாய்"**

என பொருள் விளங்க பாடலைப் பாடி முடித்தார். (தொடரும்...)

பாரதி மோகன்

காளமேகம் 15 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு தமிழ்ப் புலவர் ஆவார். சமண சமயத்தில் பிறந்த இவர், திருவானைக்கா கோவிலைச் சேர்ந்த மோகனாங்கி என்பவளிடம் ஆசை கொண்டார். இதனால் தனது சமயத்தை விட்டு மோகனாங்கி சார்ந்திருந்த சைவ சமயத்துக்கு மாறினார். இவர் வசைப் பாடல்கள் பாடுவதில் வல்லவர் என்று கூறப்படுகின்றது. ஆனாலும் இவர் பல சிறந்த நயம் மிகுந்த பாடல்களையும் பாடியுள்ளார். இவர் பாடிய சிலேடைப் பாடல்களும், நகைச்சுவைப் பாடல்களும் பல உள்ளன. சமயம் சார்ந்த நூல்களையும் இவர் இயற்றியுள்ளார்.

திருவானைக்கா உலா, சரஸ்வதி மாலை, பரப்பிரம்ம விளக்கம், சித்திர மடல் முதலியவை இவர் இயற்றிய நூல்களாகும்.

*பிறப்புற்றேன் காளியிடம் பேரன்புற்றேன்.*
*பேச்செல்லாம் கவிமழையாய்ப் பெருகும் ஞானம்,*
*வரப்பெற்றேன், செல்வத்தின் வளமும் பெற்றேன்,*
*மன்னருடன் சரிசமமாய் மகிழும் வண்ணம் சிறப்புற்றேன்...*

என்று மஹாகவி காளிதாசனுக்காகக் கவிஞர் கண்ணதாசன் எழுதிய பாடல் வரிகளுக்கொப்ப, காளிதேவியின் அருளால் கவிபாடும் திறம்பெற்றுத் தமிழிலே கவிமழை பொழிந்த மாபெரும் கவி காளமேகம் ஆவார். இவரது இயற்பெயர் வரதன் என்பதாகும். வரதன் ஒரு சமணனானாலும் மோஹனாங்கி எனும் சைவ சமயத்தைச் சேர்ந்த நடனமாது ஒருத்தியை அவன் மனதாரக் காதலித்தான். அவளும் அவன்மேல் தீராத மோஹம் கொண்டிருந்தாள்.

*ஒரு முறை நாட்டிய நிகழ்ச்சியொன்றில் மோஹனாங்கி*
*உங்கையிற்பிள்ளை உனக்கே அடைக்கலமென்று*
*அங்கப் பழஞ்சொல் புதுக்குமெம் அச்சத்தால்*
*எங்கள் பெருமான் உனக்கொன்றுரைப்போம் கேள்*
*எங்கொங்கை நின் அன்பரல்லார்தோள் சேரற்க*
*எங்கை உனக்கல்லாதெப்பணியும் செய்யற்க*
*கங்குல் பகல் எங்கண் மற்றொன்றும் காணற்க*
*இங்கிப்பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்*
*எங்கெழிலென் ஞாயிறு எமக்கேலோரெம்பாவாய்.*

என்ற திருவெம்பாவைப் பாடலுக்கு அபிநயம் பிடித்து ஆடுகையில் அவளது தோழிமார்கள், இப்படிப்பட்ட சைவசமயப் பாடலுக்கு ஆடும் அவள் ஒரு சமணனைக் காதலிப்பது குறித்து கேலியாகப் பேசவே அவள் மனம் வேதனைப்பட்டாள். அன்று தன்னைக் காணத் தன் வீட்டிற்கு வந்த வரதனுக்குக் கதவைத் திறக்காமலேயே இருந்துவிட்டாள். அவள் தான் சமணனாக இருப்பது குறித்து இவ்வாறு பிணங்குகிறாள் என்பதைத் தெரிந்துகொண்ட வரதன் அக்கணமே சைவசமயத்தில் சேர்ந்தான்.

அதன்பின் ஒரு நாள் இரவில் வரதன் திருவானைக்கா கோவிலில் தங்கி உறங்கிக் கொண்டிருந்தான். அதே கோவிலில் நீண்டகாலமாகக் காளியின் அனுக்கிரஹம் வேண்டி வேறொரு அந்தணன் தவம் செய்துகொண்டிருந்தான். அவனும் அன்றிரவு கோவிலிலேயே உறங்கிக் கொண்டிருந்தான். காளிதேவி அவன் தவத்துக்குப் பலனளிக்க ஒரு சிறுமியாக உருவெடுத்து, தன் வாயில் தாம்பூலம் தரித்துக்கொண்டு அவ்வந்தணனை எழுப்பி அவனது வாயில் தாம்பூலத்தைத் துப்ப எத்தனித்தாள்.

**"யாரடி எச்சிற்றம்பலத்தை என் வாயில் உமிழ்வது?"**

என்று அவ்வந்தணன் கோபம் கொண்டுரைக்கவே அவள் அருகில் படுத்திருந்த வரதனை எழுப்பி அவன் வாயில் தாம்பூலத்தை உமிழ முயற்சிக்கையில், அவன் அவள் மோஹனாங்கி என்று எண்ணி, எங்கே தான் வாய் திறவாவிடில் மறுபடியும் கோபித்துக்கொள்வாளோ என்றெண்ணி வாயைத் திறந்தான். அன்னையின் எச்சில் தாம்பூலத்தை உண்ட வரதன் கவிபாடும் புலமை பெற்றான். வாயைத் திறந்து சொல்லும் சொற்களனைத்தும் கவிமழையாய்ப் பொழிந்ததால் வரதனை அனைவரும் காளமேகம் என்று மரியாதையுடன் அழைக்கலாயினர்.


## குட்டீஸ் பக்கம்



# எறும்பும் வெட்டுக்கிளியும்

ஓர் ஊரில் பனிக்காலம் என்பது ஒரு தொல்லையாக அங்கே காணப்பட்டது. அப்பொழுதுதான் ஒரு வயல் வெளியில் அதிகமான நெற்கதிர்கள் காணப்பட்டது.

அங்கே ஒரு சிறிய எறும்பும் ஒரு வெட்டுக்கிளியும் வாழ்ந்து வந்தன. அப்போது வெட்டுக்கிளி எப்போதும் விளையாடும் குணத்தை விடுவதில்லை. அப்போது எறும்பு நல்ல சுறுசுறுப்பாக வேலை செய்துகொண்டே தனக்குத் தேவையான உணவை அது சேகரித்து வந்தது. அப்பொழுது ஏளனமாக வெட்டுக்கிளி கேட்டது. சுறுசுறுப்பான எறும்பே வேலை செய்வதைவிட்டு விட்டு வா என்னுடன் விளையாடு வா எறும்பே விளையாடலாம். இல்லை நண்பரே நான் பனிக்காலத்துக்காக உணவு சேமிக்கின்றேன் இல்லாவிட்டால் உன்னைப் போல் நான் விளையாடிக் கொண்டிருந்தால் என்னால் உணவு சேகரிக்க முடியாமல் போயிருக்கும் அதேவேளை நீ எந்த வேலையும் இல்லாமல் என்னால் இருக்க முடியாது. அப்படி அந்த எறும்பு ஒவ்வொரு நாளும் இரவு பகல் பாராமல்



வேலை செய்து வந்தது.

இதை வெட்டுக்கிளி பார்த்துக் கொண்டிருந்தது. ஒரு நாள் நல்ல பனிக்காலம் வந்தது. வெட்டுக்கிளிக்கு நடுக்கமும் பசியும் ஏற்பட்டது. அப்போது அது பசியால் எறும்பை தேடிப்போனது. அந்த எறும்பை உணவு தருமாறு கேட்டுப் பார்த்தது. எறும்பு முடியாது எனக் கூறியதுடன் நான் உணவு சேகரித்த நேரம் என்னைப்பார்த்து ஏளனமாக சிரித்த நேரம் உணவு தேடி இருக்கலாமே எனவும் கூறியது . கவலையுடன் வெளியேறிய வெட்டு க்கிளி சோர்ந்து உணவு ஒன்றும் இல்லாமல் இறந்துவிட்டது.

எனவே ஒருவரையும் நாம் ஏளனம் செய்யக்கூடாது.

*பவிசாத், தரம் - 07*
*யா/சிறுப்பிட்டி அ.த.க.பாடசாலை*

# வாரமொரு குறள்



*ஏரின் உழாஅர் உழவர் புயல்என்னும்*
*வாரி வளங்குன்றிக் கால்.*

**பொருள் : பொருள்**
**மழை என்னும் வருவாய் வளம் குன்றிவிட்டால், உழவுத் தொழில் குன்றி விடும்**

# தாய்மையின் சிறப்பு

உலகிற்கு என்னை அறிமுகம் செய்தாய்
உளமார என்மேல் அன்பைப் பொழிந்தாய்
மலர் கரங்களாய் என்னை அணைத்தாய்
என் மழலை மொழி கேட்டு மகிழ்ந்தாய்

பசியால் நான் அழுதால் – என்
கண்ணீர் கண்டு நீ அழுவாய்
நிலத்தில் நான் விழுந்தால்
நொடிப்பொழுதில் நீ விரைவாய்



ஓடி ஓடி உணவூட்டினாய்
ஆடிப்பாடி மகிழ்வித்தாய்
தேடிப் பிடித்து விளையாடினாய்

உன் கண்ணின் கனவுகள் நான்
உன் வாழ்வின் வானவில் நான்
எனக்கென வாழ்கின்றாய் தாயே
என் உயிரில் கலங்கிட்டாய் நீயே

அறிவுரை அளித்தாய் அன்னையாக
கலைகளைக் கற்பித்தாய் குருவாக
தோள் தட்டிக் கொடுத்தாய் தோழியாக

மணம் கமழும் பூவே
மனம் கவரும் ரதியே
வாழ்வளித்தாய் எனக்கு
வாழ்வை அர்ப்பணித்தேன் உனக்கு

**அ.லதாங்கினி**
**யா/வேம்படி உயர்தர பாடசாலை**

# மரம் ஏறலாம்

தென்னை மரத்தில்
ஏறலாம்
தேங்காயை பறிக்கலாம்
மாமரத்தில் ஏறலாம்
மாங்காயை பறிக்கலாம்
நெல்லி மரத்தில் ஏறலாம்
நெல்லிக்காயை
பறிக்கலாம்
புளிய மரத்தில் ஏறலாம்
புளியங்காயைப் பறிக்கலாம்
வாழை மரத்தில் ஏறினால்
வழுக்கி வழுக்கி
விழுகலாம்.

**பா.தமிழ்க்கனி**
**தரம் –04**
**யா/புத்தூர் இந்து ஆரம்ப பாடசாலை**

# உங்களுக்குத் தெரியுமா?

01. இதயத்தின் சராசரி எடை 300 கிராம்கள்.
02. நமது மூளை ஒரு சிறந்த கணிப்பொறியைவிட நுட்பமானது. அதில் சுமார் 100 மில்லியன் நரம்பு செல்கள் உண்டு.
03. நீங்கள் உங்கள் விரல்களை நெட்டி முறிக்கும் போது ஏற்படும் சத்தத்திற்கு காரணம் நமது உடலில் உள்ள நைட்ரஜன் வாயுக் குமிழ்கள் உடைவதே.
04. ஒரு மனிதன் இறக்கும் போது முதலில் செயல் இழக்கும் உறுப்பு காதுகள்
05. மனித உடலில் உள்ள நீளமான எலும்பு தொடை எலும்பு.
06. உலகின் அதிகளவு மனித உயிர்கள் பலியாக காரணமான உயிரினம் நுளம்பு.

# விடுகதைகள்

விடிய விடிய பூந்தோட்டம் விடிந்து பார்த்தால் வெறுந்தோட்டம் அது என்ன?
*நட்சத்திரங்கள்*

சித்தூர் சிறு மணலிலே காய்க்கும் கத்தரிக்காய் கூட்டிப்பார்த்தால் கொம்புக்கு முப்பது காய் அது என்ன?
*காப்பிச்செடி*

அத்துவானக் காட்டுக்குள்ளே குடை பிடிக்கிறார் அவர் யார்?
*காளான்*

பாய் சுருட்டவும் முடியாது, பாக்கு எண்ணவும் முடியாது அது என்ன?
*வானம், நட்சத்திரம்*

கிண்ணத்து நிறையத் தண்ணீர் இருக்கு, குருவி குடிக்க வழியில்லை அது என்ன?
*இளநீர்*

இரத்தத்தில் வளர்வது ஆனால் கடிக்கத் தெரியாது அது என்ன?
*நகம்*

பற்கள் பல உண்டு ஆனால், கடிக்கத் தெரியாது அது என்ன?
*சீப்பு*

ஆடையில்லாத கறுப்பழகி ஆடிச்சென்று பாடுகிறாள் அவள் யார்?
*தவளை*

குளப்படிச் சத்தக்காரன் போருக்கு கெட்டிக்காரன் அவன் யார்?
*குதிரை*




# My Self

My name is Keram. I am grade four. My school name is J/Puttur Hindu Primary School. My father name is Anapayaseelan. He is a post master. My mother name Sujani. She is house wife. my elder sister name is lathanhini. She is jaffna Vembadi Girl's High School student. My favourite colour is pink. My favorite subject is maths. My favourite food is noodles. My ambition is became a doctor.

**த.அகீசியன்**
**யா/புத்தூர் இந்து ஆரம்ப பாடசாலை**

# ஈழத்துத் தமிழ் சிறுகதை வளர்ச்சி

பா.மகாலிங்கசிவம்,
ஆசிரிய ஆலோசகர் (தமிழ்)
வலிகாமம்கல்வித்திணைக்களம்.

ஆங்கிலமொழிச் செல்வாக்கினாலே தமிழில் அறிமுகமாகிய நவீன இலக்கிய வடிவங்களாக நாவல், சிறுகதை என்பன விளங்குகின்றன. தமிழின் முதல் நாவலான பிரதாபமுதலியார் சரித்திரம் 1879 ஆம் ஆண்டிலேயே வெளிவந்துவிட்டபோதிலும் தமிழ்ச் சிறுகதைகளின் வருகை 1920களிலேயே இடம்பெறுகிறது.

ஆங்கில மொழிக்கல்வியினூடாக ஆங்கிலம் முதலிய மொழிகளிலுள்ள சிறுகதைகளை வாசித்தவர்கள் தாமும் அவைபோலத் தமிழில் எழுத முயன்றமையே தமிழ்ச் சிறுகதைகளின் தோற்றத்திற்கு முக்கிய காரணமாகிறது. இவ்வகையிற் பாரதியார், வ.வே.சு.ஐயர், மாதவையர் ஆகிய மூவரும் சிறுகதை என்னும் இலக்கிய வடிவத்தை தமிழுக்கு அறிமுகப்படுத்தினர். இதனால் இம் மூவரும் தமிழ்ச்சிறுகதை முன்னோடிகளாக கருதப்படுகின்றனர். இவர்களுள் வ.வே. சு. ஐயரே ஓரளவிற்கேனும் தரமான சிறுகதைகளை எழுதினார்.

தமிழ்ச்சிறுகதை வளர்ச்சி 1920 களில் ஆரம்பித்து விட்ட போதிலும் முப்பதுகளிலேயே உருவத்திலும் உள்ளடக்கத்திலும் பரிசோதனை முயற்சிகள் கொண்ட சிறுகதைகள் வெளிவரத் தொடங்கின. இக்காலத்தில் வெளிவந்த மணிக்கொடி சஞ்சிகை இத்தகைய முயற்சிகளுக்கு இடமளித்து சிறுகதை வளர்ச்சியை ஊக்குவித்தது. இதனால் மணிக்கொடிக்காலம் தமிழ்ச் சிறுகதையின் பொற்காலம் எனப்போற்றப்படுகிறது. இக்காலச் சிறுகதை எழுத்தாளர்களிலே தமிழ்ச் சிறுகதையின் முடிசூடாமன்னன் எனக் கருதப்படும் புதுமைப்பித்தன், கு.ப. ராஜகோபாலன், பிச்சமூர்த்தி மௌனி ஆகியோர் முக்கியமானவர்கள்.

இவ்வாறு தமிழகத்தில் சிறுகதை வளர்ச்சி ஏற்பட்டுக்கொண்டிருந்த வேளை இதன் பாதிப்பினால் ஈழத்தவர்களும் சிறுகதைகளை எழுதத் தொடங்கினர். முப்பதுகளின் பின் அரைப் பகுதியிலிருந்து இலங்கையர் கோன், சிவ.வைத்திலிங்கம், சம்பந்தர் ஆகிய மூவரும் சிறுகதைகளை எழுதத் தொடங்கினர். இம்மூவரையும் ஈழத்துச்சிறுகதை முன்னோடிகள் என்று போற்றும் மரபு உள்ளது. இதேவேளை இவர்களுக்கு முன்னர் 1931இல் கோ. நடேசையர் எழுதிய 'திரு. இராமசாமி சேர்வையின் சரிதம்' என்னும் சிறுகதை தற்போது கிடைத்துள்ள நிலையில் இவரும் ஈழத்துச் சிறுகதை முன்னோடிகளில் ஒருவராக கொள்ளப்படுகின்றார்.

இலங்கையர்கோன், சி.வைத்திலிங்கம், சம்பந்தன் ஆகிய மூவரினதும் சிறுகதையாக்க முயற்சிகளுக்கு இலட்சியக் கனவுகளும் எதையாவது எழுதவேண்டுமென்ற உள்தூண்டலும் காரணமாக அமைந்தன. ந.சிவஞானசுந்தரம் என்ற இயற்பெயர் கொண்ட இலங்கையர்கோன் முப்பது சிறுகதைகள்வரை எழுதியுள்ளார். இவரது 15 சிறுகதைகளடங்கிய தொகுப்பு நூல் வெள்ளிப்பாதரசம் என்ற பெயரில் வெளிவந்துள்ளது. கு.ப.ராஜகோபாலனைத் தமது ஆதர்ச எழுத்தாளராகக் கொண்ட இவர் பாலியல் சித்திரிப்புக்களைக் கொண்ட கதைகளையும் எழுதினார். இவரது வெள்ளிப்பாதரசம், முதற்சம்பளம் முதலிய கதைகள் சமூகக் கதைகளாகவும் மேனகை, தாய், யாழ்பாடி, மரியாமதலேனா, முதலிய கதைகள் வரலாற்றுக் கதைகளாகவும் அமைந்துள்ளன.

சி.வைத்திலிங்கம் 25 கதைகள் வரை எழுதியுள்ளார். கிராமியச் சூழலைத் தமது கதைகளிற் கொண்டுவருவதிலும் மென்மையான மனஉணர்வுகளை சித்தரிப்பதிலும் இவர் வல்லவராக விளங்கினார். மூன்றாம்பிறை, கங்காகீதம், பாற்கஞ்சி, பிச்சைக்காரன், என்பவை இவர் கதைகளிற் சிறந்தவைஆகும். கங்காகீதம் இவரது கதைகளின் தொகுப்பு நூலாகும்.

1940களில் ஈழத்துச் சிறுகதைகள் புதிய வளர்ச்சிகளைப் பெறும் காலமாக உள்ளது. 1943ஆம் ஆண்டு வரதர் முதலியோரது ஒத்துழைப்புடன் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. இச்சங்கத்தவர்கள் மறுமலர்ச்சி எனும் சஞ்சிகையை வெளியிடத் தொடங்கினர். இவர்கள் நவீன இலக்கிய வளர்ச்சியில் ஆர்வம் செலுத்தியதால் ஈழத்து சிறுகதைத் துறையிலும் வளர்ச்சி ஏற்பட்டது. ஈழகேசரிப் பத்திரிகையும் இக்கால எழுத்தாளர்களுக்குகளம் அமைத்துக்கொடுத்தது. வரதர், அ.செ. முருகானந்தன், அ.ந.கந்தசாமி, தாளையடி சபாரத்தினம், சு.வேலுப்பிள்ளை, ஆகியோர் இக்கால எழுத்தாளர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர்களுள் அளவெட்டியைச் சேர்ந்த அ.செ.முருகானந்தன் தனக்கென்த் தனியானதோர் இடத்தினைப்பெற்றுக்கொண்டவர். தமது கதைக்கான களமாக யாழ்ப்பாணத்தை மட்டும் கொள்ளாது திருகோணமலை, கொழும்பு, மலையகம் என பல பகுதிகளையும் அமைத்துக் கொண்டவர். நூற்றுக்கு மேற்பட்ட கதைகளை எழுதியுள்ள இவரது கதைகளில் மனிதமாடு, பழையதும் புதியதும், வண்டிச் சவாரி, என்பவை குறிப்பிடத்தக்கவையாகும். மனிதமாடு, அ.செ.முருகானந்தத்தின் கதைகள் என்னும் இரு தொகுதிகளாக இவரது கதைகள் வெளிவந்துள்ளன.

ஈழத்து தமிழ் சிறுகதை உலகில் முதன்முதலில் மாக்ஸிஸக் கண்ணோட்டத்தைப் புகுத்தியவர் அளவெட்டியைச் சேர்ந்த அ.ந. கந்தசாமியே. இவரது கதைகளில் நாயினும் கடையர், இரத்தஉறவு, சந்திப்பு, நள்ளிரவு முதலியன குறிப்பிடத்தக்கவையாகும். வரதரின் சிறுகதைகள் கயமை மயக்கம் எனும் தொகுதியாக வெளிவந்துள்ளன.

1950கள் ஈழத்து அரசியல், சமுதாய வரலாற்றில் முக்கியமான காலகட்டமாகும். சிங்களம் மட்டும் சட்டத்தால் உருவான இன ரீதியான முரண்பாடுகளும் சாதீய அடிப்படையில் அமைந்த சமூக ரீதியானமுரண்பாடுகளும் முனைப்பு பெற்றகாலமாக இக்காலம் உள்ளது. 40 களில் எழுதிய எழுத்தாளர்கள் இக்காலத்தில் வளர்ச்சிபெறு வதுடன் அகஸ்தியர், காவலூர் இராசதுரை, ஈழத்துச்சோமு, நீர்வை பொன்னையன், நந்தி, அ.முத்துலிங்கம் முதலிய புதிய எழுத்தாளர்களும் சிறுகதைத் துறைக்கு அறிமுகமாகின்றனர்.

50களின் சிறுகதைப்போக்குகள் 60களிலும் தொடர்ந்து வளர்ச்சியடைகின்றன. இக்காலத்தில் இலங்கைப் பல்கலைக் கழகங்களிலிருந்து புதிய எழுத்தாளர்கள் சிறுகதை உலகிற்கு வந்தது இன்னொரு முக்கிய அம்சமாகும். தாய்மொழிமூலம் பல்கலைக்கழக கல்வியைப் பெறத் தொடங்கிய இப் புதிய பரம்பரையினர் கல்வி கற்றுக்கொண்டிருந்த வேளையிலேயே சிறுகதைத்துறையிலும் ஈடுபாடு கொள்கின்றனர். செ.கதிர்காமநாதன், செ.யோகநாதன், செம்பியன் செல்வன், செங்கை ஆழியான், யோ.பெனடிக்ற்பாலன் முதலியோர் இவ்வகையில் குறிப்பிடத்தககவர்கள். இவர்களிற்பலர் அண்மைக்காலம் வரை ஈழத்தின் முக்கிய சிறுகதை எழுத்தாளர்களாக இருந்ததும் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

> 80களின் பின்னர் ஈழத்து தமிழ் சிறுகதைகளிற் புதிய போக்குகளும் வளர்ச்சிகளும் ஏற்படத்தொடங்கின. இனப்பிரச்சினை முறுகலடைந்து இனப்பிரச்சினையாக மாற்றமடைந்ததும் மக்கள் அகதிகளாக்கப்பட்டு நாட்டினுள்ளேயும் புலம்பெயர் தேசங்களுக்கும் செல்லவேண்டி ஏற்பட்டது. இயக்க போராட்டங்கள், இராணுவ ரீதியிலான அடக்கு முறைகள் என்பன வலிமை பெற்றதுடன் சாதிபோராட்டங்களும், பெண்ணிய சிந்தனைகளும் இக்கால இலக்கியங்களை புதிய பாதையில்திருப்பிவிட்டன.

1970கள் மேலும் பல புதிய அனுபவங்களைச் சுமந்து கொண்டு சிறுகதை வளர்ச்சியின் புதிய கட்டமாக விளங்குகின்றது. இன்னுமொரு புதிய பரம்பரை இத்துறையில் பிரவேசித்தது. தெணியான், முருகபூபதி, சட்டநாதன், உமாவரதராஜன், அ.யேசுராஜா, திக்குவல் லைகமால் ஆகியோர் இக்கால சிறுகதை எழுத்தாளர்களிற் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியோராவர். இவர்களுள் சட்டநாதன் உலா, சட்டநாதன் கதைகள், புதிய பார்வைகள் ஆகிய சிறுகதைத்தொகுதிகளை வெளியிட்டுள்ளார். அ.யேசுராஜா தமிழக எழுத்தாளரான லா.ராமாமீரதத்தைப்போலத் தனித உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் கதைகளை எழுதினார்.

80களின் பின்னர் ஈழத்து தமிழ் சிறுகதைகளிற் புதிய போக்குகளும் வளர்ச்சிகளும் ஏற்படத்தொடங்கின. இனப்பிரச்சினை முறுகலடைந்து இனப்பிரச்சினையாக மாற்றமடைந்ததும் மக்கள் அகதிகளாக்கப்பட்டு நாட்டினுள்ளேயும் புலம்பெயர் தேசங்களுக்கும் செல்லவேண்டி ஏற்பட்டது. இயக்கப் போராட்டங்கள், இராணுவ ரீதியிலான அடக்குமுறைகள் என்பன வலிமை பெற்றதுடன் சாதியபோராட்டங்களும், பெண்ணிய சிந்தனைகளும் இக்கால இலக்கியங்களை புதிய பாதையில் திருப்பிவிட்டன. இக்கால பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் பெருந்தொகையான சிறுகதைகள் வெளிவருவதற்கு களம் அமைத்துக் கொடுத்தன.

இக்கால எழுத்தாளர்களுள் டொமினிக்ஜீவா,தெணியான், நந்தி, வ.அ.இராசரத்தினம், தெளிவத்தை ஜோசப், செ.குணரத்தினம், ரஞ்சகுமார், தாமரைச்செல்வி, கோகிலா மகேந்திரன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். திருமதி.கோகிலா மகேந்திரன் பெண்ணியம்சார்பான, பெண்கள் சமூகத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பான கதைகளையே அதிகம் எழுதியுள்ளார். இக்காலப்பிரிவில் இனப்பிரச்சினை தொடர்பாக வெளிவந்தமுதலாவது கதையாக 1+1=2:1-1=2 என்ற வ.அ. இராசரத்தினத்தின் கதையைக் குறிப்பிடலாம். கண. மகேஸ்வரனின் எல்லை வேம்பு, ச.முருகானந்தனின் ஒரு கிராமத்தின் கதை, என்பன தமிழ்ப்பிரதேசங்களில் நிறுவப்பட்ட சிங்களக் குடியேற்றங்களைப் பற்றிக் கூறுகின்றன.

எண்பதுகளுக்கு பிற்பட்ட சிறுகதை ஆசிரியர்களில் முக்கியமான ஒருவர் பொ.ரஞ்சகுமார். அவரது சிறுகதைகள் மோகவாசல் எனும் தொகுதியாக வெளிவந்துள்ளன. இவரது கோசலை எனும் சிறுகதை விடுதலைப் போராளி ஒருவரது கதையை இராமனின் கதையுடன் தொடர்புபடுத்தி எடுத்துக் காட்டுகிறது. கபரகொய்யாக்கள் மக்கள் விடுதலை முன்னணியினரின் புரட்சி தொடர்பானதாக உள்ளது. ஒட்டமாவடி அறபாத், ஆண்மரம், நினைந்தழுதல் ஆகிய இரு சிறுகதைத்தொகுதிகளை வெளியிட்டுள்ளார்.

இலங்கையிலே மலையகப் பகுதி தனக்கென தனியான பிரதேசத்தையும் பண்பாட்டம்சங்களையும் கொண்டுள்ளது. இதனால் மலையக இலக்கிய வரலாற்றை தனித்து ஆராயும் வழக்கம் உள்ளது. மலையகத்தில் சிறுகதைத்துறையில் ஈடுபட்டவர்களை இரு வகையினராகப் பிரிக்கலாம்.

மலையகத்தையே பிறப்பிடமாகக் கொண்டவர்கள் என்.எஸ்எம். ராமையா, தெளிவத்தை ஜோசப், சாரல்நாடன், பொ.கிருஷ்ணசாமி ஆகியோர் இப்பிரிவில் அடங்குவர்.

வேறிடங்களை பிறப்பிடங்களாக கொண்டிருந்ததுடன் தொழில் நிமித்தமாக மலையகத்திற்கு சென்றவர்கள் நந்தி, தி.ஞானசேகரன், செ. கணேசலிங்கன், வ.அ. இராசரத்தினம், புலோலியூர் சதாசிவம் போன்றோர் இப்பிரிவினர்.

இவர்களது சிறுகதைகள் தோட்டத் தொழிலாளர்களின் வறுமை, அறியாமை, இருப்பிடவசதிக் குறைவு, அதிகாரிகளின் கெடுபிடி, என்பவற்றை சித்தரிப்பவையாக அமைந்தன.

ஈழத்துச் சிறுகதைகளின் ஒரு பிரிவாக புலம்பெயர் சிறுகதைகளும் அடங்குகின்றன. இந் நாட்டில் இடம்பெற்ற இராணுவத் தாக்குதல்கள் பொருளாதார நிலையை வலுப்படுத்திக் கொள்ளும் நோக்கோடும் ஈழத்தமிழர்களிற் பெருந்தொகையினர் கனடா, பிரிட்டன், பிரான்ஸ், சுவிஸ், அவுஸ்ரேலியா முதலிய பல நாடுகளுக்கும் தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து சென்றுள்ளனர். இவர்கள் கவிதை, சிறுகதை, நாவல் முதலிய இலக்கியத் துறைகளிலே தமது பங்களிப்பை நல்கி வருகின்றனர். இவர்களின் இலக்கியங்களிலே இழந்துபோன தமது தாய்த்தேச வாழ்க்கையை எண்ணிய ஏக்கங்கள் புதிய பண்பாட்டுச் சூழலில் தாம் எதிர்கொண்ட பிரச்சினைகள் தொடர்பான அதிர்வுகள் என்பன பொதுவாகச் சித்தரிக்கப்பட்டன. புலம பெயர் எழுத்தாளர்களில் அ.முத்துலிங்கம், சக்கரவர்த்தி, ஷோபா சக்தி,ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இதுவரை இருந்துவந்த சிறுகதை மரபில் புதிய வளர்ச்சியை பிரதிபலிப்பதாக உள்ளது பொ.கருணாகரமூர்த்தியின் அகதி உருவாகும் நேரம் றியாஸ் குரானாவின் பெருவெளி, திசேரவின் கபாலபதி, வெள்ளைத் தோல், சக்கரவர்த்தியின் யுத்தத்தின் 2ஆம் பாகம், விமல் குழந்தைவேலின் அகதி, குமார் மூர்த்தியின் குமார்மூர்த்தி கதைகள், அம்ரிதா ஏஜத்தின் விலங்குகள் தொகுதி ஒன்று அல்லது விலங்கு நடத்தைகள் எனும் சிறுகதைத் தொகுதிகள் முக்கியமானவையாகும்.

எனவே 1930களில் சிறுகதை பற்றிய தெளிவான பிரக்ஞையுடன் ஆரம்பித்த ஈழத்து சிறுகதை வரலாறு இன்று உருவத்திலும் உள்ளடக்கத்திலும் பல்வேறு புதிய பரிமாணங்களைப் பெற்றபடி வளர்ச்சியடைந்து செல்வதைக் காணலாம்

# நீரிழிவு, இருதய நோயாளிகளும் உருளைக்கிழங்கும் பாவனையும்

உருளைக்கிழங்கை விரும்பி உண்ணாதவர்கள் எவருமே இருக்கமாட்டார்கள். சுவையில் மட்டுமல்ல போசணையிலும் உருளைக்கிழங்கு சிறந்த உணவாகும். நீரிழிவு மற்றும் இருதய நோய் உடையவர்களும் உடல் எடையைக் குறைக்க விரும்புவோரும் உருளைக் கிழங்கு ஒரு எட்டாக் கனியாக இருப்பதாக எண்ணி வருந்தத் தேவையில்லை. நீங்களும் உங்கள் உணவில் உருளைக்கிழங்கைச் சேர்த்துக் கொள்ளலாம். எவ்வாறு?

எமது பிரதேசத்தின் பிரதான உணவான அரிசியைச் சோறாகவும், அதன் மாவினைப் பிட்டு, இடியப்பமாக ஆக்கியும் நாம் உண்கிறோம். அரிசியிலுள்ள பிரதான உணவுக் கூறு காபோவைதரேற்று. உருளைக்கிழங்கிலுள்ள பிரதான உணவுக்கூறும் காபோவைதரேற்றே ஆகும்.

ஒருவர் ஒரு நேர உணவின் போது சராசரியாக உண்ணும் அவித்த உருளைக்கிழங்கிலுள்ள காபோவைதரேற்றின் அளவான 1/3 டம்ளர் சமைத்த குத்தரிசிக்கு அண்ணளவாகச் சமனாகிறது. எனவே, நாம் உருளைக் கிழங்குக் கறியை எமது உணவில் சேர்க்க விரும்பினால் 1/3 டம்ளர் சோற்றைக் குறைத்து அல்லது ஒரு இடியப்பத்தைக் குறைத்து உண்ணலாம். இதன்மூலம் நாம் மேலதிகமாக எடுக்கும் காபோவைதரேற்றுத் தவிர்க்கப்படுகிறது.

Dr.யசோஜினி லக்ஸ்மன்,
நீரிழிவு சிகிச்சை நிலையம்,
யாழ். போதனா வைத்தியசாலை

மேலும், அவித்த உருளைக்கிழங்கிற்கும் குத்தரிசிச் சோறு மற்றும் தீட்டாத அரிசி மா போன்றவற்றிற்கும் கிளைசீமிக் இன்டெக்ஸ் (Glycaemic index) என்று சொல்லப்படுகின்ற அதாவது, உண்டபின் குருதியில் குளுக்கோஸ் அதிகரிப்பு ஏற்படும் வீதம் அண்ணளவாகச் சமனாக உள்ளது. இது நீரிழிவு நோயாளிகளுக்கு உகந்ததாக உள்ளது. கிளைசீமிக் இன்டெக்ஸைக் குறைப்பதற்கு நீரிழிவு நோயாளிகள் இவ்வுணவுடன் மரக்கறி வகைகள் மற்றும் இலைக்கறி வகைகளையும் சேர்த்துக் கொள்ளலாம். தீட்டாத, அரிசியுடன் (Brown rice) ஒப்பிடும் போது உருளைக்கிழங்கு குறைந்தளவு கொழுப்புச்சத்தைக் கொண்டுள்ளது. அரிசியில் காணப்படாத சில கனியுப்புக்களைக் கொண்டுள்ளது. இவற்றைவிட உருளைக் கிழங்கு மிகவும் குறைந்த அளவிலேயே சோடியத்தைக் கொண்டுள்ளது. எமது குருதியமுக்கத்தைச் சரியான முறையில் பேணுவதற்கு சோடியம் உப்புக் குறைவான உணவுகளும் உதவிபுரிகின்றன.



இவ்வாறு பல நன்மைகள் அவித்த உருளைக்கிழங்கில் இருப்பினும் கறியாகச் சமைக்கும் போது அதில் சேர்க்கப்படும் தேங்காய்ப் பால், உப்பு, எண்ணெய் என்பன உருளைக்கிழங்கின் ஆரோக்கியமான போசணைக் கூறுகளை மாற்றியமைத்து விடுகின்றன. எனவே, உருளைக்கிழங்கை உணவில் சேர்த்துக்கொள்ளும்போது மேற்கூறப்பட்ட விடயங்களைக் கருத்திற் கொண்டால் சுவையாக உண்டு ஆரோக்கியமாக வாழலாம்.

# கட்டுப்பாடற்ற நீரிழிவால் ஏற்படும் பாதிப்புக்கள்

நீரிழிவு நோயாளிகள் கட்டுப்பாட்டுடன் இருக்கவேண்டியது அவசியம். அக்கட்டுப்பாடு இழக்கப்படுமிடத்து பாதிப்புகள் அதிகம் ஏற்படும்.

**1. குருதிக் குழாய்களில் ஏற்படும் பாதிப்புகள்**

ஒரு வாகனம் சரியாக இயங்குவதற்கு அதற்குரிய எரிபொருள் விநியோகம் சரியான முறையில் இருக்க வேண்டும். அதேபோன்று எமது கால்களும் சரியாக இயங்க அதற்குரிய குருதி விநியோகம் சிறப்பாக அமைதல் வேண்டும்.

நீரிழிவு நோயாளிகளின் நாள்பட்ட நிலைமையில் அவர்களது நாடிகளில் கொழுப்பு படிவங்கள் ஏற்படும். அந்த நாட்களில் உட்பகுதி தடிப்படைந்து குருதி விநியோகிக்கும் அளவு குறைவடைகின்றது. குருதி விநியோகம் குறைவடையும் போது காலில் ஏற்படும் தொற்றுகளுக்கு எதிராகப் போராடும் வெண்குருதிச் சிறுதுணிக்கைகள் காலைச் சென்றடையும் அளவு குறைவடைகின்றது. இதனால் தொற்று ஏற்படும் சந்தர்ப்பம் அதிகரிக்கின்றது. மேலும், காலில் நகத்துக்கும் தோலுக்கும் போதிய குருதி விநியோகம் கிடைக்காமலும் போகிறது.

இதனால் நகங்கள் மஞ்சள் நிறமாக மாறுவதுடன் இலகுவில் உடைந்தும் விடுகின்றன. இவ்வாறான நகங்கள் வெட்டுவதற்கும் கடினமானவையாகின்றன. கால் பாகத்தில் உள்ள தோற்பகுதி பளபளப்பானதாக மாற்றமடையும் கால் பகுதியில் காணப்படும் சிறிய குருதிக் கலனிலும் பாதிப்புகள் ஏற்படுகின்றன.

இக்குருதிக் கலனின் சுவர்ப் பகுதி பலவீனமடைவதுடன் சில சமயங்களில் உடைந்தும் விடுகின்றது. இத்தகைய சிறிய குருதிக் கலன்களும் காலின் பகுதிக்கு வேண்டிய போசனைப் பதார்த்தங்களை வழங்குவதில் முக்கிய பங்காற்றுகின்றன. இவ்வாறான சந்தர்ப்பத்தில் தொற்றுக்கள் ஏற்படின் அவை இலகுவில் குணமடையாது.

**2. நரம்புத் தொகுதியில் ஏற்படும் பாதிப்புக்கள்**

கால் பகுதிக்கான நரம்பு விநியோகத்திலும் சில பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. சிறிய குருதிக் கலனில் ஏற்படும் பாதிப்பால் நரம்புகளுக்கான குருதி விநியோகம் குறைவடையும். இதனால் நரம்புகளுக்கு வேண்டிய போசணையும் குறைவடையும். இதனால் கலன்களில் உணர்ச்சிக் குறைவு ஏற்பட்டுக் காயங்கள் இலகுவில் ஏற்படலாம். எனவே இதில் ஏற்படும் சிறிய புண்கள் பெரிதாகப் பெரிதாக கால் விரல்களை அகற்ற வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஏற்படலாம். எனவே இவ்வாறான நோயாளிகள் தங்கள் பாதங்களை அடிக்கடி ஒழுங்காக அவதானித்து சரியான பராமரிப்பை வழங்குவதன் மூலமும் நீரிழிவைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலமும் காலில் ஏற்படும் பாதிப்புகளை குறைத்துக் கொள்ளலாம்.

- கோ.நந்தகுமார்-
விரிவுரையாளர்,
தாதியர் பயிற்சிக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

# கேள்விக்கு என்ன பதில்

**எனது உறவினர் ஒருவர் தமக்கு நீரிழிவு நோய் உண்டென அறிந்ததுமே கரட், பூசணி, பீற்றூட் என்பவற்றை உள்ளெடுப்பதைத் தவிர்த்துவிட்டார். இது சரியா?**

இல்லை கரட், பூசணி, பீற்றூட் என்பவற்றை முற்றாகத் தவிர்ப்பதன் மூலம் நீரிழிவைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாக நினைக்கும் பலர் நம்மில் இருக்கிறார்கள். கரட் மிக அதிகளவில் பீற்றாகரட்டீன் எனப்படும் விற்றமின் யுக்குரிய முற்பொருளைக் கொண்டுள்ளது மேலும் இதில் விற்றமின் B,C போலிக்கமிலம், மக்னீசியம், பொற்றாசியம் என்பன நிறைந்துள்ளன. நார்ப்பொருள் தேவையான அளவில் உள்ளது. இதைவிட பல்கறினோல் (Falcarinol) எனப்படும் புற்றுநோய் வராமல் தடுக்கும் பதார்த்தமும் நிறைந்துள்ளது. இப்பதார்த்தமானது கரட்டினை நறுக்கிக் கழுவும்போது வீணாகிவிடும். எனவே கரட்டினை முழுமையாக அவிப்பதே பொருத்தமானது. இதில் சீனியின் அளவு மிகக் குறைவு. எனவே நீரிழிவு நோயாளிகளும் உட்கொள்ளலாம். பீற்றூட், உணவுக்கு நிறமூட்டுவது மட்டுமன்றி அதில் உள்ள பீற்றைன் (Betaine) என்ற அமினோ அமிலம் புற்றுநோயைத் தடுக்கும் அதில் நார்ப் பொருள் நிறைந்துள்ளது. இதில் சீனியின் அளவு மிகக்குறைவே (100 கிராமுக்கு 6 கிராம் என்ற வீதத்தில்) மேலும் இது உயர் இரத்த அழுத்தம் இரத்த அழுத்தம், இரத்தக் குழாய்களில் கொழுப்பு படிதல் என்பவற்றைத் தடுக்கும் ஆற்றல் உடையது. பூசணி ஒரு சுவையான உணவு மட்டுமல்லாமல் இதில் விற்றமின் A,B என்பன உள்ளன. இதிலுள்ள சீனியின் அளவு மிகக் குறைவு( 100g இல் 1.36g அளவே உண்டு) எனவே, கரட், பூசணி, பீற்றூட் ஆகிய மூன்றையும் நீரிழிவு நோயாளிகள் மாத்திரமல்ல சுகதேகியாக உள்ள அனைவரும் போதுமான அளவில் உணவிற் சேர்த்துக்கொள்ளலாம்.

* * *

**கடந்த ஒரு வருட காலத்தில் 3 தடவைகள் எனது சலத்தில் கிருமித் தொற்று ஏற்பட்டது. 3 தடவையும் நான் வைத்தியசாலையிலிருந்து சிகிச்சை பெற்று வந்தேன். இது ஏன் ஏற்படுகிறது? இதைத் தடுக்க நான் என்ன செய்ய வேண்டும்?**

உங்களுக்கு ஏற்பட்டது சலத்தில் அடிக்கடி ஏற்படும் கிருமித் தொற்றாகும். 2 தடவைகளுக்கு மேல் சலத்தில் கிருமித் தொற்று ஏற்பட்டால் 80 வீதம் ஆன பெண்களில் மீண்டும் இவ்வாறு ஏற்படுவதற்கான சாத்தியக்கூறு அதிகம். சலரோக நோயாளிகள், கர்ப்பிணிப் பெண்கள், சிறுநீரகக் கற்களால் பாதிக்கப்பட்டோர், சிறுநீரக வழியில் ஏற்படும் சுருக்கம், சிறுநீரகத் தொகுதியின் கட்டமைப்பில் VwgLk; ghj gG> GwVNehaf s >HIV நோயாளிகள் (எயிட்ஸ்) ஆகியோரின் சலத்தில் கிருமித் தொற்று ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம். உங்களுக்கு அடிக்கடி கிருமித் தொற்று ஏற்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றமையால் பெரும்பாலும் எல்லாப் பரிசோதனைகளும் செய்யப்பட்டிருக்கும். எனவே நீங்கள் எக் காரணத்தால் இந்நிலை ஏற்பட்டது என்பதை அறிந்து கொள்ள வேண்டும். இந்நிலை ஏற்படுவதைத் தடுக்க நீங்கள் செய்ய வேண்டியவை

போதுமான அளவு நீர் அருந்தவேண்டும் ( 2- 3 L / day)

சலத்தைக் கட்டுப்படுத்தக் கூடாது. சலம் கழிக்க வேண்டும் என்ற உணர்வு ஏற்படும் போது சலம் கழிக்க வேண்டும்

மலம் கழித்தபின் முன்பக்கமிருந்து பின்பக்கமாக்க கழுவ வேண்டும்.

உடலுறவிற்கு முன் பெண்ணுறுப்பைக் கழுவி சுத்தமாக பேண வேண்டும்.

சுத்தமான உள்ளாடைகளை அணிதல் வேண்டும்.

- நன்றி -
நீரிழிவு சிகிச்சை நிலையம்

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

# லங்கா ராணி ...

மற்றவர்கள் கேள்விகள் கேட்க முனைந்தனர் அவற்றை அவனே யூகித்துக்கொண்டு தொடர்ந்தான்.

“யார் தலைவன் என்று நினைத்துக் கொண்டு மண்டையை உடைத்துக்கொள்ளாதே. உன்னிடமிருந்துதான் இத்தலைமை எதிர்பார்க்கப்படுகிறது. இங்கு தலைவர்கள் வித்தைக்காரர்களாக இருக்கமாட்டார்கள். சமுதாயத்தில் உள்ள எல்லோருக்கும் பொதுவான கோட்பாடுகள் இருக்கும். இலட்சியம் இருக்கும். திட்டங்கள் இருக்கும். தலைவர்கள் மக்களின் பிரதிபலிப்பாகவே இருப்பார்கள்.

இவ்வெண்ணங்களை உன் மனதில் எடுத்துக்கொண்டு இந்தப்புதிய சமுதாயத்தை நிர்மாணிக்க நீ புறப்படவேண்டும். நீ எதிர் நோக்கும் பிரச்சினைகள் உனது வீட்டுக்குள் இருந்துதான் முதலில் வரும். உனது அம்மா நீ எங்கு போகிறாய் என்று கேட்பாள். உனது தங்கைமாரின் கண்கள் கலங்கும். அயலவர்கள் எனக்கு வேலையில்லையா என்று கேட்பார்கள். சீதனம் கொடுக்கவேண்டும் என்று உனது காதில்விழ கதைகள் கூறுவார்கள். நீ எப்படியாவது உன்னைப் பார்த்துக்கொண்டால் போதும். மற்றவர்களைப்பற்றிக் கவலை வேண்டாம் என்று அம்மா கூறுவாள். இவ்வாறான சமுதாயத்தில்தான் இருக்கிறோம். இதற்காக யாரையும் குறை சொல்லக்கூடாது. புதிய சமுதாயத்தில் இந்தக் கவலைகள் எங்களுக்கு இருக்காது என்று கூறிவிட்டு புறப்படு.

விடுதலை விடுதலை என்று கூறிக் கொண்டு பலர்நிற்பார்கள். தமிழனைத் தமிழன் சுரண்டும் சுதந்திரம் அங்கு இருக்குமா? என்றுகேள். அதைப் பிறகு பார்த்துக்கொள்வோம் என்று கூறுவார்கள். அவர்களையிட்டு நீ மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். தம் சுயநலன்களைப் பாதுகாக்க உன்னைக் கருவியாகப் பாவிக்க முயல்வார்கள். அவர்களை ஒரு பக்கத்தில் தள்ளி வைத்து விடு. ஆறுதலாகப் பார்த்துக் கொள்வோம்.”

இவ்வாறு வேட்டியுடன் இருந்த இளைஞன் பேச்சை நிறுத்தியதும் இதுவரை பேச்சில் ஒன்றிப்போயிருந்த இளைஞர்கள் இளைஞனின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். இச்சமயத்தில் அங்கு தேவன் வந்து மேல்தளத்தில் நின்றுகொண்டு படங்கை உயர்த்தி உள்ளே தலையைவிட்டு இளைஞர்களை நோக்கி கைகளை அசைத்தான். இளைஞர்களும் அவன் ஏதோ கூறப்போகின்றான் என்பதால் மேலே நோக்கினர். “மட்டக்களப்பு மட்டக்களப்பு என்று கைகளை அசைத்தவாறே கத்தினான்.” இளைஞர்கள் எழுந்து படிகளில் வேகமாக ஏறி மேல் தளத்திற்கு வந்தனர். அங்கிருந்த பலரும் ‘என்ன? என்ன? என வினாவினர். “மட்டக்களப்பு தெரிகிறதாம் மட்டக்களப்பு...” என்று வளாக மாணவன் ஒருவன் கூறிக்கொண்டு மேலே ஏறினான். வேறு பலரும் அவர்களுடன் சேர்ந்து கொண்டனர்.

நேரம் மாலை ஆறு மணியாகி இருந்தது. மழைக்கோலம் நீங்கவில்லை. இருட்டாக இருந்தது. மழை பெய்திருந்தது. கடலின் தூரத்தில் இரண்டு மின்சார வெளிச்சங்கள் தெரிந்தன. அதுவும் ஒன்று அணைந்துவிடும்போல் மின்னிக்கொண்டிருந்தது.


“ஆக இரண்டுவெளிச்சந்தானா?” அங்கு நின்றவர்கள் ஆச்சரியத்துடன் கேட்டுக்கொண்டிருந்தனர்.

“மழைக்கோலம் மப்பும் மந்தாரமுமாக இருப்பதால் அப்படித் தெரிகிறது.” யாரோ கூறினார்கள்.

அங்கு நின்ற நாகலிங்கம் இதை நம்ப முடியாமல் ‘பொத்துவிலத்தான் பொடியள் பிழையாக சொல்லுகிறான்கள்’ என்று கூறிக் கொண்டார்.

தேவன் ஒவ்வொரு தளமாக தலையை நீட்டி மட்டக்களப்பு மட்டக்களப்பு என்று கத்திவிட்டிருந்தான். பலர் மேல்தளத்திற்கு வந்திருந்தனர். அங்கு மடடக்களப்பைச் சேர்ந்தவர்களும் இருந்தனர். மட்டக்களப்புக்கு நேராக போக வசதியில்லாததால்கப்பலில் யாழ்ப்பாணம் போய்க் கொண்டிருந்தனர்.

மட்டக்களப்புத்தான் கிழக்கு மாகாணத்தின் தலைநகர். இது தமிழருடைய பூமி. கப்பலின் ஒரு பக்கமாக பாதுகாப்புக்காக போடப்பட்டிருந்த கம்பியில் பிடித்துக் கொண்டு பலர் பார்த்துக்கொண்டு நின்றனர். அங்குமிங்குமாக வேறு வெளிச்சங்களும் தெரியத் தொடங்கின.அங்கு கைகளைக்காட்டி மகிழ்ச்சியோடு கதைத்துக் கொண்டிருந்தனர்.




லங்காராணி வடக்கு நோக்கி நகர்ந்து கொண்டிருந்தாள். படங்குகளை எடுத்துவிட்டிருந்தனர். மாலையாகிவிட்டதால் பலர் காற்றுவாங்க மேல்தளத்திற்கு வந்திருந்தனர். அங்கு மட்டக்களப்பைச் சேர்ந்தவர்களும் இருந்தனர். அங்குமிங்குமாக நின்று கதையில் ஈடுபட்டனர். கப்பல் மட்டக்களப்பைத் தாண்டிவிட்டதால் கதைக்கும் சத்தம் சற்று உரத்துக்கேட்டது. யாழ்ப்பாணம் கப்பல் தமிழ்ப்பிரதேசத்தை அண்டியே போய்க்கொண்டிருக்கும்.

ஒரு முதியவருக்கு தொய்வு ஏற்பட்டு சுவாசிக்க முடியாமல் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தார். அவரை டாக்டர் நற்குணம் சென்று பார்த்துவிட்டு தனது அறைக்கு கையைப்பிடித்து கூட்டிக் கொண்டு போனார். சரவணன், குமார் டாக்டர் திருமுருகன் சமையலறைக் கதவுக்கு முன்னால் நின்று கதைத்துக்கொண்டிருந்தனர். நாகலிங்கமும் கொழும்பு வியாபாரியும் அங்கு நின்று மட்டக்களப்பை பற்றி பேசிக் கொண்டிருந்தனர். ராணி அடிக்கடி வந்து சரவணனை அழைத்து பேசிவிட்டுப் போனாள்.

தேவன் வந்து மேல்தளத்தில் நின்றுகொண்டு படங்கை உயர்த்தி உள்ளே தலையைவிட்டு இளைஞர்களை நோக்கி கைகளை அசைத்தான். இளைஞர்களும் அவன் ஏதோ கூறப்போகின்றான் என்பதால் மேலே நோக்கினர். “மட்டக்களப்பு மட்டக்களப்பு என்று கைகளை அசைத்தவாறே கத்தினான்.” இளைஞர்கள் எழுந்து படிகளில் வேகமாக ஏறி மேல் தளத்திற்கு வந்தனர். அங்கிருந்த பலரும் ‘என்ன? என்ன? என வினாவினர். “மட்டக்களப்பு தெரிகிறதாம் மட்டக்களப்பு...” என்று வளாக மாணவன் ஒருவன் கூறிக்கொண்டு மேலே ஏறினான். வேறு பலரும் அவர்களுடன் சேர்ந்து கொண்டனர்.

முத்தையா சமையலறையில் இரவு உணவைத் தயாரித்து முடித்து பரிமாறுவதற்கான ஆயத்தங்களை செய்து கொண்டு நின்றார். கப்பலின் மேல் பகுதியில் மின்சார வெளிச்சம் போடப்பட்டிருந்தது. தமிழர் விடுதலைக் கூட்டணியில் உள் பிரச்சினைகள் பற்றி காரசாரமான வாதங்கள் நடைபெற்றன. இதில் மட்டக்களப்பு பிரச்சினை பற்றி ஒரு இளைஞன் கடுமையாக பலரை விமர்சித்துக்கொண்டிருந்தான். மட்டக்களப்பில் கூட்டணியின் பேரில் இராசதுரையையும் காசி ஆனந்தனையும் போட்டியிட வைத்தனர். இந்தவேலை இராசதுரையை வீழ்த்துவதற்கு அமிர்தலிங்கம் செய்தது என்பது அவனது வாதம் அங்கிருந்த வேறொருவன் இராசதுரையின் மேல் குறைகூறினான்.

டாக்டர் திருமுருகனும் குமாரும் ஆங்கிலத்தில் பேசிக்கொண்டு நின்றனர். டாக்டர் திருமுருகன் நாங்கள் எப்படி தனிநாடு கேட்கமுடியும் என்று குமாரைக் கேட்டிருந்தார். அதற்கு குமார் நாங்கள் ஒரு தேசிய இனம். எங்களின் அடிப்படை உரிமைகளை வழங்காவிட்டால் எங்கள் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டித் தனிநாடு கேட்கலாமென்றும் இதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் அடிப்படை உரிமைகளை மேற்கோள் காட்டியும் பேசிக்கொண்டு நின்றான். சரவணன் அந்த ஆங்கிலக் கலந்துரையாடலில் பங்கு கொள்ள முடியாததனால் நடந்து தளத்தின் முன்பகுதிக்கு வந்தான்.

லங்காராணியின் முன்பகுதியில் வெளிச்சம் குறைவாகவே இருந்தது. மட்டக்களப்பைப் பார்க்க வந்தவர்கள் சிறிது சிறிதாக உள்ளே போய்க் கொண்டிருந்தனர். குளிர் காற்று வீசத் தொடங்கியிருந்தது. வேட்டியுடன் இருந்த அந்த இளைஞனைச் சுற்றி மற்றவர்கள் நின்று கொண்டிருந்தனர். அங்கு சரயணன் வந்துசேர்ந்தான். அவன் அந்த வேட்டியுடன் இருந்த இளைஞனின் பக்கத்தில் போய் நின்றுகொண்டிருந்தான். அங்கு நின்ற மற்றொருவன் சரவணனைப் பார்த்து “உனக்கு ஒரு செய்தி தெரியுமா” என்று கேட்டான். அதற்கு சரவணன்“என்ன செய்தி” என்று கேட்டான்.

“இலங்கைப்படையினர் பிடித்து வெல்லக்கூடிய நாடு கச்சதீவாம்”

“பிறகென்ன? இப்பிடியாக உண்மைகளை தெரிந்து வைத்திருப்பவர்களை ஜனாதிபதி ஆக்கவேண்டும். யார் சொன்னது?”

“இவன்!இவன்!இவன்!” என்று பல குரல்கள்

“இல்லை நான் சும்மா சொன்னனான்.” என்று அந்த நீர்கொழும்பு இளைஞன்கூறி மழுப்பிக்கொண்டான். பின்பு அவனே வேட்டியுடன் இருந்த இளைஞனைப்பார்த்துக் கேட்டான்.

“அண்ண சமதர்ம அரசு என்றால் என்ன?”

நீர்கொழும்பு இளைஞனுக்கு இதை விளங்க வைப்பது சற்று கடினமான வேலை தான். சிறிது நேரம் சிந்தித்துவிட்டு அந்த வேட்டியுடன் இருந்த இளைஞன் கூறத்தொடங்கினான்.

“சமுதாய ஆட்சி முறையென்று உலகில் இரண்டுபிரதான கோட்பாடுகள் உண்டு. ஒன்று முதலாளித்துவம் மற்றயது சமதர்மம். முதலாளித்துவத்தில் முதலாளி இருப் பான். எல்லோருக்கும் சுதந்திரம் உண்டு என்று கூறுவார்கள். யாருடைய வறுமைக்கும் யாரும் பொறுப்பல்ல. ஏழைகளும் தங்கள் சொந்த முயற்சியால் பணக்காரராக முதலாளிகளாக வரலாம். இதற்கு சுதந்திரம் உண்டு. ஆனால் வறியவர்கள் எல்லோரும் முதலாளிகளாக வரமுடியாது ஏன்? அப்படியான நிலையில் முதலாளிகள்தான் முதலாளிகளுக்கு கூலிவேலை செய்ய வேண்டும். இப்படியான நிலை ஒரு போதும் இருக்க முடியாது. முதலாளி இருந்தால் கூலியாள் இருப்பான். ஒரு முதலாளி எவ்வளவு பெரிய முதலாளியாக இருக்கிறானோ அவ்வளவுக் கதிகமான கூலியாட்கள் அவனிடம் இருக்க வேண்டும். இதே அளவுக்கு அவனிடம் பணம் இயந்திரங்கள் இருக்கும். பணம் பெருகும். மேலும் இயந்திரங்களை, நிலத்தை, உற்பத்தி சாதனங்களை வாங்குவான். கூலியாள் கூடிக்கொண்டே போவார்கள்.

அதேநேரத்தில் கோழிமுட்டை விற்றவன் கோடீசுவரன் ஆகின்றான். கச்சாங் கொட்டை விற்றவன் ஜனாதிபதியாக வந்திருக்கிறான். நீயும் வரலாம் என்று முதலாளி கூறுவான். நீயும் முதலாளியைப்போல் வரலாம் என்று நினைத்து உழைப்பாய். முதலாளி மேலும் பணக்காரனாவான். அன்றைய செலவுக்கும் உன்னுடைய ஊதியம் போதாமலிருக்கும். அதற்கு மேல் பணமிருந்தால் நீ வேலைக்குப் போகமாட்டாய் என்று கருதி கணக்குப்பார்த்து குறைத்துக்கொடுப்பான். உன்னால் பொறுக்கமுடியாது. உனக்கு பேசுவதற்கு சுதந்திரம் இருக்கும். நீ சத்தம் போடுவாய். அதை யாரும் காதில் போடடுக் கொள்ளமாட்டார்கள். வேலை செய்யமாட்டேன் என்று கூறுவாய். முதலாளி கொஞ்சம் காசை கூட்டித் தருவான். நீ அதை வாங்கிக் கொண்டு கடைக்கு ஓடுவாய். முதலாளி உனக்கு காசை கூட்டித்தரு முன்பே விலையைக் கூட்டியிருப்பான். நீ மீண்டும் வந்து உழைப்பாய்.

உனக்கு முதுகு உளையும் மனம் உளையும் பைத்தியம் பிடிப்பதுபோல் இருக்கும். சினிமாவுக்குப்போவாய் அங்கு முதலாளி கொடை வள்ளலாய் வந்து தாண்டவம் போடுவான்.

(தொடரும் .....)

# பெண்கள் மீதான வன்முறை

## ஒரு நோக்கு

**இலங்கையில் ஆட்கடத்தலின் பொதுவான வடிவங்களின் உதாரணங்கள்**

தனிப்பட்டவர்களின் அடையாளத்தைப் பாதுகாப்பதற்காக பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன.

***தொழிலொன்று சமன்மல்லிக்கு வாக்களிக்கப்பட்டது ஆனால், பாலியல் தொழில் விடுதிக்குக் கொண்டு செல்லப்பட்டார்.***

கலேவலவில் வாழும் ஓர் இளம் பெண்பிள்ளையே சமன்மல்லி. அவருக்கு ஒரு தொழிலை நகரத்தில் பெற்றுத்தருவதாக அவரின் மாமா ரூபரத்ன அவருக்குக் கூறுகின்றார். பின்னர் அவரது பெற்றோரின சம்மதத்துடன் அவரைக் கொழும்புக்கு கூட்டிச் செல்கிறார். கொழும்பில் சேனசிங்கவின் வீட்டில் அவரை அவரின் மாமா வைத்திருக்கின்றார். தனது நண்பர்களுடன் பாலியல் உடலுறவை வைத்துக்கொள்ளும்படி அவரை சேனசிங்க கட்டாயப்படுத்துகின்றார். பின்னர் தனது மாமா தன்னை சேனசிங்கவுக்கு 25,000 ரூபாவுக்கு வழங்கியிருப்பதாகவும், சேனசிங்கவின் வீடு ஒரு பாலியல் தொழில் விடுதி எனவும் சமன்மல்லி அறிகின்றார்.

***கட்டாயப்படுத்தப்பட்ட பாலியலுக்காக சட்டவிரோதமாகத் தத்தெடுத்தல்***

இளம் பெண்பிள்ளையான சுமுதுக்கு பெற்றோர் இல்லை என்பதுடன், அவர் தனது மாமியுடன் வாழ்கின்றார். அவரது மாமிக்கு தெரிந்த ஒருவர் தத்தெடுப்பதற்காக வெளிநாட்டுக்காரர் ஒருவரிடம் சுமுதுவை அழைத்துச் செல்கின்றார். பின்னர் பெண் ஒருவரிடம் சுமுதுவை அவர் கையளிக்க, அப்பெண் இன்னொரு கிராமத்திற்கு சுமுதுவை அழைத்துச் சென்றார். அங்கு சுமுது வீடொன்றில் மறைத்து வைக்கப்படுவதுடன், அங்குவரும் ஆண்களுடன் பாலியலை மேற்கொள்ளும்படி அவர் கட்டாயப் படுத்தப்பட்டார்.

***சீமாட்டியாக மாறிய சிறந்த கருணையுள்ளம் கொண்டவர்***

ரூபாவின் தாயார் வீட்டில் இருந்து வெளியேறியபோது தனது சகோதரனுடன் விடப்பட்ட ரூபாவுக்கு பதினொரு வயது மட்டுமே. அவரது சகோதரனினாலும், அவரது மனைவியினாலும் ரூபா தொடர்ச்சியாக தொந்தரவு செய்யப்பட்டார். 'நம்பிக்கையற்ற நிலையில் எனது அம்மாவைத் தேடி வீட்டை விட்டுச் சென்றேன். பஸ் தரிப்பிடத்தில் ஓர் அன்பான பெண்மணி என்னுடன் பேசினார். நான் ஏன் அங்கு நிற்கிறேன் என அவரிடம் கூறினேன். அவர் தன்னால் எனக்கு உதவி செய்ய முடியும் என்று கூறவே, நான் மகிழ்ச்சியுடன் அதை ஏற்றுக் கொண்டேன். அவர் என்னை ஓர் இடத்திற்கு கூட்டிச் சென்றார். அங்கு வெளியார்களுடன் பாலியலை வைத்துக்கொள்ளும்படி என்னைப் பலாத்காரப்படுத்தினார்கள்.'

***அடிமைத்தனத்திற்கு சகோதரிகள் கடத்தப்பட்டனர்***

பாடசாலையில் படித்துக் கொண்டிருந்த இரு இளம் பெண்பிள்ளைகளான கிஷானியும், ஷானிகாவும் தமது பெற்றோரின் நிதிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக தொழிலொன்றைப் பெறுவதில் ஆர்வங்காட்டினர். பெற்றோருக்கு தெரிந்த அயலவர் ஒருவர் ஆடைத் தொழிற்சாலையொன்றுக்கு அவர்களைக் கூட்டிச் செல்வதாகக் கூறினார். அவர்களை அவர் கொழும்புக்கு கூட்டிச் சென்று, ஓர் இரவுக்கு தனது வீட்டில் அவர்களை தங்க வைத்தார். கொழும்பில் அவரது உறவினர்களினால் அவர்கள் நன்கு கவனிக்கப்பட்டார்கள். அடுத்தநாள் அவர்கள் கட்டுநாயக்கவுக்கு செல்ல வேண்டும் என்று கூறி அயலவ்ரினால் பஸ் ஒன்றில் அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்களது பயணம் வீடொன்றில் முடிவடைந்தது. அங்கு சகல வீட்டு வேலையையும் செய்வதற்காக வீட்டின் உள்ளே பூட்டி வைக்கப்பட்டார்கள். ஒவ்வொரு இரவும் நான்கு மணித்தியாலங்களுக்கே நித்திரை கொள்வதற்கு அவர்கள் அனுமதிக்கப்பட்டனர். வெளியே செல்வதற்கு ஒருபோதுமே அனுமதிக்கப்படவில்லை.

***ஏமாற்றப்பட்ட புலம்பெயர் ஊழியர்***

மூன்று வருடங்களுக்கு தனியார் நிறுவனமொன்றில் சுத்திகரிப்பாளராக கவிதா பணியாற்றினார். மைக்கேல் என்ற உல்லாசப்பயணியை 29 வயதாக இருந்த போது கவிதா சந்தித்தார். சிங்கப்பூரில் மாதமொன்றுக்கு 200 அமெரிக்க டொலரைக் கொண்ட சம்பளமொன்றுக்கு தனது வீட்டில் வேலையொன்றைத் தருவதாக மைக்கேல் கூறினார். ஒவ்வொரு வாரமும் ஒரு நாள் லீவு வழங்கப்படும் என்றும், அவர் தனது நண்பர்களைச் சந்திக்கலாம் என்றும், தனது குடும்பத்தினருடன் பிரயாணம் செய்யலாம் என்றும் மைக்கேல் வாக்குறுதி அளித்தார். கவிதாவுக்கான விசா ஒன்றை மைக்கேல் ஒழுங்கு செய்ததுடன், அவரது டிக்கெட்டுக்காக கொடுப்பனவும் செய்தார். விரைவிலேயே மைக்கேல் பொய் கூறியுள்ளதாக கவிதா உணர்ந்து கொண்டார். வாரமொன்றுக்கு ஏழு நாட்களும், நாளொன்றுக்கு குறைந்தபட்சம் 12 மணித்தியாலங்களும், சில வேளைகளில் நாளொன்றுக்கு 16 மணித்தியாலங்களும் வேலை செய்யுமாறு மைக்கேல் நிர்ப்பந்தித்தார். அதிகளவு மணித்தியாலங்கள் அவர் வேலை செய்த போதிலும், அவருக்கு மாதமொன்றுக்கு 100 அமெரிக்க டொல்ரகள் மட்டுமே கொடுப்பனவு செய்யப்பட்டதுடன், அவருக்கு விடுமுறைகள்கூட கிட்டவில்லை. கவிதாவின் கடவுச் சீட்டை மைக்கேல் எடுத்து வைத்திருந்தார். சுகவீனமுற்றபோது கூடவேலை செய்யுமாறு அவர் நிர்ப்பந்திக்கப்பட்டார்.

**ஆட்கடத்தலை முறையிடுதல்**

அங்கீகாரம் பெற்ற மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து விரைவிலேயே மருத்துவப் பரிசோதனையை மேற்கொள்ளுங்கள். ஏதாவது தலைமயிர், உடல் திரவங்கள், தசைநார்கள் மற்றும் வேறு சான்று இருந்தால், அவற்றைச் சேகரிப்பதற்கான கடமையொன்றை மருத்துவ உத்தியோகத்தர் கொண்டுள்ளார். ஏதாவது சந்தேகிக்கப்படுகின்ற ஆட்கடத்தல் இருந்தால் சட்ட மருத்துவ உத்தியோகத்தருக்கும், பொலிசுக்கும் அறிவிப்பதற்கான கடமையொன்றை மருத்துவ உத்தியோகத்தர்கள் கொண்டுள்ளார்கள்.

அண்மையில் உள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைச் செய்யுங்கள்.

பாதிக்கப்பட்ட, தப்பிப்பிழைத்தவர் 18 வயதுக்கு குறைந்தவர் என்றால், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு (தொடர்பு) சம்பவம் முறையிடப்பட வேண்டும்.

**"பெருமளவு உயிர்களில் நிலவுகின்ற மறைந்துள்ள இரகசியமே பெண்களுக்கு எதிரான வன்முறையாகும். ஏதாவது சமூகத்தின் சேமநலனுக்கு பெண்களுக்கு எதிரான வன்முறையில் நிலவும்போது அது கெடுதலாக விளங்குவதனால் ஏனையவற்றுக்கு மத்தியில் இலக்கியத்தினதும் விழிப்புணர்வுத் திட்டங்களினதும், இன்டர்நெற்றினதும் ஊடாக பெண்களும், ஆண்களும் அறிவூட்டப்படுவது அவசியமாகும். சட்டங்களால் அன்றி ஆனால் அதன் மறைமுகத் தன்மையினாலும், அதை சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளதனாலும் ஒரு நாட்டின் சனத்தொகையில் அரைவாசியை நோக்கி வன்முறை கவனியாமல் விடப்பட்டுள்ளதாலும், சட்டபூர்வமாக்கப்பட்டுள்ளதாலும் அந்த நாடு எந்தளவு நாகரீகமடைந்ததாக இருக்கும்?"**



அமீனா ஹீசெயின்

பொலிஸ் முறைப்பாடொன்றைச் செய்வதற்கு முன், பொலிஸ் நிலையத்தில் பெண்கள், சிறுவர் பிரிவொன்று (தொடர்பு) உள்ளதா என விசாரியுங்கள் அல்லது ஆண் கான்ஸ்டபிள் ஒருவருக்குப் பதிலாக பெண் கான்ஸ்டபிள் ஒருவருடன் பேசுவதற்கு விரும்பினால் பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரைக் கேளுங்கள். சம்பவத்தின் சகல விபரங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.

வாக்குமூலத்தில் கைச்சாத்திடுவதற்கு முன் அதை வாசிப்பதை உறுதிசெய்யுங்கள்.

வாக்குமூலமொன்றைப் பெறுவதற்கு மேலதிகமாக, உடல் ரீதியிலான சான்றினைப் பொலிசார் சேகரிப்பதுடன், யாரேனும் சாட்சிகள் இருந்தால் அவர்களுடனும் பேசுவார்கள்.

உங்கள் விடயத்தின் சூழ்நிலைகளைப் பொறுத்து, அதிகளவு மணித்தியாலங்களைப் பொலிசாரின் விசாரணை எடுக்கும். சில கேள்விகள் எல்லை மீறுவதாக இருக்கும் என்பதுடன், உங்கள் மீதான தாக்குதல் பற்றிய விபரங்களை அந்த உத்தியோகத்தர்கள் பல தடவைகள் விசாரிப்பார்கள். குற்றமிழைத்தவருக்கு எதிரான மிகப் பலமான சாத்தியத்திலான வழக்கை தாக்கல் செய்வதற்காக துல்லியமாக ஒவ்வொரு விபரத்தையும் பெறுவதற்கான அவசியம் இருப்பதனால், விரிவான விதத்தில் விசாரணை இடம்பெற்றாலும், அது அனேகமாக நியாயப்படுத்தப்படு கின்றது.

இது சாத்தியமான விரைவில் உங்களால் நினைவில் வைத்திருக்கக்கூடிய ஒவ்வொரு விபரத்தையும் எழுதுவதற்கு உதவுகின்றது. இதனால் நீங்கள் விபரங்களைப் பொலிசாருக்கு பரிமாறிக் கொள்ளலாம்.

முறையிடும் நடைமுறையின் ஊடாக சில தாபனங்கள் ஆதரவை வழங்குகின்றன. உங்கள் சந்தேகங்களையும், கேள்விகளையும் அவை தெளிவுபடுத்தும். சேவை வழங்குநர்கள் சட்டங்கள் பாதுகாப்பு திட்டங்கள் ஊடாக)

**நபர்களில் ஆட்கடத்தல் மீதான சட்டம்**

2006இன் 16ஆம் இலக்க தண்டனைச் சட்டக்கோவை (திருத்தம்) சட்டத்தின் பிரிவு 360C இல் பிரதான ஆட்கடத்தல் சட்டம் காணப்படுகின்றது.

**தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு *360C* இன் பிரகாரம்:**

பணத்திற்காக அல்லது ஏதாவது வேறு நன்மைக்காக இன்னொரு நபரை வாங்கும், விற்கும் அல்லது பண்டமாற்று செய்யும் யாரேனும் ஒருவர் ஆட்கடத்தலின் குற்றவியல் குற்றத்தை இழைக்கின்றார்.

யாரேனும் நபரை வாங்குவதற்கு, விற்பதற்கு அல்லது பண்டமாற்று செய்வதற்கு இன்னொரு நபரைத் தூண்டுகின்ற அல்லது அவருக்கு உதவுகின்ற நபர் ஒருவரும் ஆட்கடத்தலின் குற்றத்திற்கு குற்றவாளியாவார்.

யாரேனும் நபரை வாங்குதலை, விற்பனை செய்வதை அல்லது பண்டமாற்று செய்வதை முன்னேற்றுவதற்கு, வசதிப்படுத்துவதற்கு அல்லது தூண்டுவதற்கு ஏதாவது செய்தல் ஒரு குற்றமாகும்.

நிர்ப்பந்திக்கப்பட்ட உடலுழைப்புக்காக, அடிமைகளாக, அவர்களது உறுப்புக்களுக்காக, பாலியல் தொழிலுக்காக அல்லது பாலியல் சுரண்டலின் ஏதாவது வேறு நடவடிக்கையின் பொருட்டு ஆட்களைப் பயன்படுத்துவதற்காக ஆட்சேர்த்தல், ஏற்றி இறக் குதல், இடமாற்றுதல், தஞ்சம் அளித்தல் அல்லது ஏற்றுக்கொள்ளுதல் ஆகியன ஒரு குற்றமாகும்.

நிர்ப்பந்திக்கப்பட்ட உடலுழைப்பு, அடிமைத்தனம், பாலியல் தொழில், ஒருவரின் உறுப்புக்களை விற்றல் ஆகியவற்றினுள் யாரேனும் ஒருவரைத் தள்ளுமுகமாகப் பயமுறுத்துதல், கட்டாயப்படுத்தல், தவறாக வழிநடத்துதல் அல்லது ஊறுபடுந் தன்மையைச் சுரண்டுதல் ஒரு குற்றவியல் குற்றமாகும்.

சிறுவர்கள் என்று வரும்போது, சிறுவர் இணக்கத்தை வழங்கியிருக்கிறாரா அல்லது இல்லையா என்பது அற்பமானதாகும்.

மேலதிக விதிகள் என அறியப்பட்ட சர்வதேச கருவியின் மொழி மீது தண்டனைச் சட்டக்கோவைக்கான 2006 திருத்தம் ஈர்த்தெடுக்கின்றது. எனினும், மேலதிக விதியின் வரைவிலக் கணம் பரந்ததாகும். வயது வந்த ஒருவரைப் பொறுத்தளவில், இணக்கம் சம்பந்தப்பட்டதல்ல என இலங்கையின் தண்டனைச் சட்டக்கோவை குறிப்பிடவில்லை.

2005இன் 30ஆம் இலக்க பாலியல் தொழிலுக்காக பெண்களையும், சிறுவர்களையும் ஆட்கடத்துவதை தடுக்கின்ற தும், எதிர்க்கின்றதுமான சமவாயத்தை இலங்கைப் பாராளுமன்றம் நிறைவேற்றியுள்ளது. இச் சட்டம் இன்னுமே அமுலுக்கு வராத அதேவேளை, அது வரும்போது SAARC சமவாயத்திற்கு பலனை வழங்கும். வெற்றிகரமான வழக்குத் தொடர்தலுக்கு ஆதரவளிப்பதற்கும், பாதிக்கப்பட்ட, தப்பிப்பிழைத்தவர்களைப் பாதுகாப்பதற்கும் புலம்பெயர்வுக்கான சர்வதேசத் தாபனத்துடனான கூட்டுடன், மனித ஆட்கடத்தல் மீதான ஒரு தேசிய செயலணி உருவாக்கப்பட்டுள்ளது

**ஆட்கடத்தலைத் தடைசெய்யும் சர்வதேச சட்டங்கள்**

உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனம் (1948). இது அடிமைத்தனம், மட்டற்ற கீழ்ப்படிவு, அடிமை வர்த்தகம் அத்துடன் சித்திரவதை அல்லது கொடூரமாக, மிருகத்தனமாக அல்லது தரக்குறைவாகக் கருதுதல் அல்லது தண்டித்தல் ஆகியனவற்றைத் தடைசெய்கின்றது.

நபர்களின் ஆட்கடத்தலின் அடக்கு முறைக்கும், ஏனையோரின் பாலியல் தொழிலின் சுரண்டலினதும் ஐ.நா. சமவாயம் (1949) இது பெண்களில் ஆட் கடத்தலினதும், பாலியல் தொழிலின் சுரண்டலினதும் சகல வடிவங்களுக்கு எதிரான பலதரப்பட்ட நடவடிக்கைகளை வழங்குகின்றது. இந்த சமவாயத்தை 1958 ஒகஸ்ட் 7 அன்று இலங்கை உறுதிப்படுத்தியது.

தொடரும்

# சண்முகா சிறுவர் இல்லமும் நம்பிக்கை நிறுவனமும்

திருகோணமலை தம்பலகாமம் கிராமத்தைச் சேர்ந்த பூர்வீககுடிமகனான சிறீமான். சண்முகம் அவர்களின் வாரிசற்ற திரண்ட சொத்துக்களை உடமையாகக் கொண்டு உருவாக்கப்பட்டதுதான் சண்முகா நம்பிக்கை நிறுவனம். சிறீமான் சண்முகம் அவர்களின் மறைவையடுத்து, அவரின் துணைவியாரான திருவாட்டி. தங்கம்மா வாரிசற்ற தங்களது நினைவு குறிப்பாக தனது கணவரின் நினைவு தமது பூர்வீக மண்ணில் நிரந்தரமாக நிலைநிறுத்தப்பட வேண்டும் என்ற நோக்கில் தனது கணவரால் இந்துசமய மக்களின் நலன்கருதி உருவாக்கிய அநாதரவானவர்களும், வறுமை காரணமாக கல்வி கற்பதில் சிரமங்களை எதிர்கொள்ளும் ஏழைச் சிறார்களின் நலன் கருதியும் ஆண் பெண் சிறுவர்களுக்கு தனித்தனியாக உருவாக்கிய சிறுவர் இல்லங்களையும் அவற்றை நிர்வகிப்பதற்கு தேவையான நிதியை பெற்றுக்கொள்ள வசதியாக நிலபுலங்களையும், ஏனைய இந்துசமய மக்களின் நலன் கருதி உருவாக்கிய தர்மஸ்தாபனங்களையும் ஒன்றிணைத்து சண்முகா நம்பிக்கை நிறுவனமாக (SHANMU GA TRUST) திருவாட்டி தங்கம்மாள் சட்ட பூர்வமாக உயில் எழுதி வைத்துள்ளார். அத்துடன் இந்த நம்பிக்கை நிறுவனத்தை நிர்வகிக்கவும், பாதுகாக்கவும் நம்பிக்கை பொறுப்பாளர் சபையொன்றையும் நியமித்திருந்தார்.

திருவாட்டி தங்கம்மாள் சண்முகா நம்பிக்கை நிறுவனத்தை ஸ்தாபித்த நோக்கத்துக்கு முற்றிலும் எதிர்மாறாகவும், சட்டத்திற்கு முரணாகவும் திருகோணமலை வித்தியாலயம் வீதியிலும் உப்புவெளியிலும் சண்முகா நம்பிக்கை நிறுவனத்துக்கு சொந்தமான சிறுவர் இல்லங்கள் அமைந்திருந்த நிலப்பரப்புகள் விற்பனை செய்யப்பட்டுவிட்டன. தற்போது இந்த சிறுவர் இல்லங்கள் தமிழ் பல்கலைக்கழக இயக்கத்திற்கு சொந்தமானதும் தமிழ் பல்கலைக் கழகத்திற்கு அத்திவாரக்கல் நாட்டப்பட்ட இடமான உள்துறைமுக வீதியில் அமைந்துள்ள ஐந்தேக்கர் நிலத்தில் கிட்டத்தட்ட ஒரு ஏக்கர் நிலப்பரப்பை சட்டத்திற்கு முரணாக கையாடி சிறுவர் இல்லங்கள் நிர்மாணிக்கப்பட்டு சண்முகா சிறுவர் இல்லத்தில் தஞ்சமடைந்திருந்த சிறார்கள் தங்கவைக்கப்பட்டுள்ளார்கள். இந்தப் புதிய சிறுவர் இல்லம் திருகோணமலை "லயன்ஸ் கிளப்பினரால்" பராமரிக்கப்படுகிறது. இங்கு இரண்டு மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக கருதலாம்.

1. ஒன்றுடன் ஒன்று தொடர்பற்ற நம்பிக்கை நிறுவனத்தின் சொத்து சட்டத்திற்கு முரணாக மற்றுமொரு நம்பிக்கை நிறுவனத்துக்காக கையாடப்பட்டுள்ளது.

2. சண்முகா நிறுவனத்தின் சொத்துக்களை கையாடிய நம்பிக்கை பொறுப்பாளர் சபையினரின் சட்டத்துக்கு முரணான நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் விதத்தில் சண்முகா சிறுவர் இல்லத்தை "லயன்ஸ் கிளப்" பொறுப்பேற்றமை.

3. "லயன்ஸ் கிளப்புடன்" எதுவித தொடர்புமற்ற சண்முகா நம்பிக்கை நிறுவன ஸ்தாபகர் திருவாட்டி தங்கம்மாள் அவர்களின் நம்பிக்கைக்கு துரோகமிழைக்க உடந்தையாக இருந்தமை.


மேற்படி குற்றச்சாட்டுகளுக்கு "லயன்ஸ் கிளப்பின்" திருகோணமலை கிளை பகிரங்கமாக பதில் சொல்லவேண்டும்.



சண்முகா நம்பிக்கை நிறுவன ஸ்தாபகர் தங்கம்மாள்

உங்கள் ஊரிலுள்ள பிரச்சினைகள் தொடர்பாக 500 சொற்களுக்கு மேற்படாமல் தபாலில் எழுதி அனுப்புங்கள் தினச்செய்தியில் பிரசுரிப்பதற்கு நாம் தயாராகவே உள்ளோம்.

**முகவரி : தினச்செய்தி**
**தில்லைகட்டி லேன்,**
**சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.**





No-05, NC Road, Trincomalee.
TP- 026 2222298, Fax- 0262221179.
www.jewellanka.8m.com

# அமெரிக்க துப்பாக்கிகளை விடவும் பயங்கரமானது ஒபாமாவின் கண்ணீர்

ஜனநாயகத்தை மறுதலித்து ஆயுதம் ஏந்தும் பயங்கரவாதிகள் ஒரு நாளும் தங்களுடைய தவறுகளுக்காக கண்ணீர் விடுவது கிடையாது. அவர்களைப் பொறுத் தவரை தாம் செய்வது தவறு என்று உலகத்திற்குத் தெரிந்திருந்தாலும். தங்கள் கொள்கைகளை அவர்கள் மாற்றிக்கொள்வது கிடையாது. பயங்கரவாதிகளிடம் இருக்கும் அந்த குறைந்தபட்ச நேர்மையைக் கூட, ஜனநாயகத்தை உலகத்திற்கே கற்றுக் கொடுக்க கடவுளால் படைக்கப்பட்ட தேசமான அமெரிக்கா கடைப்பிடிப்பது இல்லை. உலகம் பூராவும் தனக்கு அடிமைப்பட்டு கிடக்க வேண்டும். அனைத்து நாட்டு பிரதமர்களும், அதிபர்களும் தங்களின் காலில் விழுந்து வணங்க வேண்டும். இந்த உலகில் உள்ள அனைத்து வளங்களும் தனக்கே சொந்தம். தான் தின்றது போக மிச்சம்தான் மற்ற நாட்டு மக்களுக்கு எனக் கருதிவந்த அமெரிக்கா இன்று தனது சொந்த நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல், பொருளாதார, கலாசார நெருக்கடியால் தத்தளித்துக் கொண்டு இருக்கின்றது.

அமெரிக்க வெள்ளை மாளிகையில் துப்பாக்கி வன்முறையைக் குறைப்பது தொடர்பாக நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா அவர்கள் துப்பாக்கிச் சூட்டில் பலியான குழந்தைகளை நினைத்து கண்ணீர்விட்டு அழுதுள்ளார். இந்தச் செய்தியை நாளிதழ்களில் படித்தபொழுது கடும் அதிர்ச்சி ஏற்பட்டது. உலகையே ஆட்டிப் படைக்கும் ஒரு நாட்டின் அதிபர் பொது மேடையில் கண்ணீர்விட்டு அழுகின்றார் என்றால் அதிர்ச்சி ஏற்படாமலா இருக்கும்? தமிழ் சினிமாவில் நாய்கள் அழுவதையும், யானைகள் அழுவதையும் பார்த்த போதெல்லாம் ஏற்படாத அதிர்ச்சி ஒபாமா அழுதபொழுது ஏற்பட்டது.

துப்பாகிச் சூட்டில் பலியான 20 குழந்தைகளுக்காக மனம் வெதும்பி ஒபாமா அழுகின்றார் என்றால், அவர் எவ்வளவு நல்ல மனிதாபிமானம் உள்ள அதிபர். இவரைப் பொய்யாக உலகம் அயோக்கியன், மொள்ளமாரி என்றெல்லாம் சொல்கின்றது!.

ஜோர்ஜ் புஷ்ஷிற்குப் பின் பதவியேற்ற ஒபாமா அமெரிக்காவின் மேலாதிக்க வெறிபிடித்த முகத்தை நிச்சயம் மாற்றியமைக்கப் போகின்றார் என்று சில முற்போக்கு அறிவு ஜீவிகள் சோதிடம் சொன்னார்கள்.. ஆனால் அமெரிக்கா தன்னை ஆட்சி செய்ய தேர்ந்தெடுக்கும் யாரும் எந்தக் காலத்திலும் யோக்கியன்களாக இருந்தது இல்லை என்பதை ஒபாமா உடனே நிரூபித்தார். அமெரிக்க செவ்வியந்தியர்களின் இரத்தத்திலும், ஆபிரிக்க கறுப்பு இனத்தவர்களின் இரத்தத்திலும் உருவாக்கப்பட்ட அமெரிக்கா என்ற தேசம் தன்னை எப்போதும் மனித முகத்துடன் வெளிக்காட்டிக் கொண்டது கிடையாது. செப்டம்பர் 11 சம்பவத்திற்குப் பின் தீவிரவாதத்தை ஒழிக்காமல் விடமாட்டேன் என்று சொல்லி ஆப்கானிஸ்தான், ஈராக் போன்ற நாடுகளின் மீது படையெடுத்து ஏறக்குறைய 2 லட்சத்து 25 ஆயிரம் பேரைக் கொன்று போட்டிருக்கின்றது. 200 லட்சம் கோடி மதிப்பிலான சொத்துக்களை அழித்திருக்கின்றது.

பதவியேற்ற உடன் 30000 இராணுவ வீரர்களை ஆப்கானுக்கு அனுப்பி இதுதான்டா அமெரிக்கா என்று காட்டினார் ஒபாமா. அத்தோடு நிற்கவில்லை ஈராக்கிலும், சிரியாவிலும் ISISக்கு எதிராக போர் தொடுக்கப் போகின்றோம் என்ற பெயரில் மீண்டும் மனித வேட்டையைத் தொடங்கியுள்ளார். ஜோர்ஜ் புஷ்க்கு ஈராக்கின் மீது படையெடுக்க பேரழிவு ஆயுதங்கள் என்ற பொய் தேவைப்பட்டது. அதுவே ஒபாமாவிற்கு ISIS அவ்வளவுதான்.


உலக எண்ணை வளத்தை தனது பிடிக்குள் வைத்திருக்க இன்னும் எத்தனை இலட்சம் மனித உயிர்களைப் பலியிட்டாலும் அந்த அமெரிக்க கொடிய மிருகத்தின் பசி அடங்குவது கிடையாது.

அமெரிக்காவில் உள்ள 89சதவீதம் மக்கள் துப்பாக்கிகளை வைத்திருப்பதாக சொல்கின்றார்கள். அங்கே சிறுவர்கள் துப்பாக்கிகள் வைத்திருக்கக்கூடாது என்ற எந்தக் கட்டுப்பாடும் கிடையாது என்பதால் அவர்களால் மிக எளிதாக துப்பாக்கிகளை வாங்க முடிகின்றது. அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக நிறைய பயிற்சி நிலையங்கள் அமெரிக்கா முழுவதும் உள்ளன. தொடர்ச்சியாக திரைப்படங்கள், வீடியோ கேம்ஸ் போன்றவற்றின் மூலம் வன்முறையாளர்களாக வளர்க்கப்படும் அமெரிக்க குழந்தைகள், தாம் பார்க்கும் திரைப் படங்களிலும், வீடியோ கேம்ஸ்களிலும் சர்வ சாதாரணமாக இரத்தம் தெறிக்கக் கொல்லப்படும் எதிரிகளைப் போலவே தமக்கும் தம்முடைய எதிரிகளை கொல்வதற்கு உரிமை உண்டு என்று நினைக்கின்றன. விளைவு அவர்களது எதிரிகள் துப்பாக்கிகளுக்கு பலியாகின்றனர்.

எந்த ஒரு பிரச்சினையும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண எப்படி அமெரிக்க ஆளும் வர்க்கம் விரும்புவது இல்லையோ அதே போன்ற ஏகாதிபத்திய மனநிலையே அமெரிக்க குடிமக்களிடமும் இருக்கின்றது. சின்ன சின்ன பிரச்சினைகளுக்குக்கூட துப்பாக்கியைத் தூக்கும் போக்கு அங்கே பெருமளவிற்கு வளர்ந்துவிட்டது. பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள், வழிபாட்டுத்தளங்கள் என அனைத்து இடங்களிலும் இந்த வன்முறை அரங்கேற்றப்படுகின்றது. உலகில் மற்ற நாடுகளை ஒப்பிடும்போது அமெரிக்காவில் தான் துப்பாக்கிச் சூட்டிற்கு இறப்பவர்கள் எண்ணிக்கை மிக அதிகம். அமெரிக்காவில் ஒவ்வொரு நாளும் 88 பேர் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியாகின்றனர் என்பதில் இருந்தே அதன் தீவிரத்தை நாம் உணரலாம்.

உலகம் பூராவும் தனக்கு வேண்டாத நாடுகளில் உள்நாட்டு கலவரங்களைத் தனது சி.ஐ.ஏ மூலம் தூண்டிவிட்டு அங்கு இருக்கும் அடிமைகளுக்குத் தனது ஆயுதங்களை கொடுத்து தனது சொந்த நாட்டு மக்களைக் கொன்று போடுவதற்கு உதவும் அமெரிக்கா இன்று தன் சொந்த நாட்டு மக்களின் ஆயுதக் கலாசாரத்தால் அலங்கோலமாகிக் கிடக்கின்றது. உலகின் ஆயுத விற்பனையில் 20 சதவீத பங்கை தன் பிடிக்குள் அமெரிக்கா வைத்திருக்கின்றது. உலகின் 10 முன்னணி ஆயுத உற்பத்தி நிறுவனங்களில் 7 நிறுவனங்கள் அமெரிக்காவில் தான் உள்ளன. உலகில் பல நாடுகளின் மக்கள் தங்களுக்குள் ஒருவரை ஒருவர் தன்னுடைய துப்பாக்கிகளால் சுட்டுக்கொண்டு சாவதைப் பார்த்து மகிழ்ச்சியடைந்த அமெரிக்க ஆளும் வர்க்கம் இன்று தன்னுடைய சொந்த நாட்டு மக்களே சுட்டுக்கொண்டு சாகும்போது துடிக்கின்றது.

ஏகாதிபத்தியம் என்பது தான் அடிமைப்படுத்தும் நாடுகளை மட்டும் நாசம் செய்வது கிடையாது. அது தனது சொந்த நாட்டு மக்களையே நாசம் செய்கின்றது என்பதற்கு அமெரிக்காவே சிறந்த உதாரணம்.



செ.கார்கி


## தினச்செய்தி விளம்பரக் கட்டணம்

**Thinacheithi Weekly Newspaper Advertisement Rate Card**

| PagesSizes | (col /cm) | Black & White | Color |
|---|---|---|---|
| Full page | 08x40 | 40000 . 00 | 50000 . 00 |
| Half page | 08x20 | 20000 . 00 | 25000 . 00 |
| Qatar page | 04x20 | 10000 . 00 | 12500 . 00 |
| Per col /cm | 01x01 | 95 . 00 | 160 . 00 |
| **Front Page** | | | |
| Front strip ad | 10x5 | | 10000 . 00 |
| Front height ad | 4x15 | | 12000 . 00 |
| Per col /cm | 8x8 | | 15000 . 00 |
| **Ear space** | | | |
| Front Page | 8x8 cm | | 25000 . 00 |
| Back page | 8x8 cm | | 20000 . 00 |

**Obituary/ Death notice / Birthday greeting/ Wedding notice & greeting/ Invitation**

**Per col/cm 1x1 Black&White 60.00 Color 110.00**

**Election Notice & Meeting**

**Per col/cm 1x1 Black&White 120.00 Color 200.00**

**Classified Advertisement:**

***First 20 words 150.00 Additional word 10.00***

தினச்செய்தி என்றும் உங்களுடன்

T.P : 021 7539300
Fax : 021 2242139
E-mail : thinacheithiadvt@gmail.com
Web : www.thinacheithi.com / lk

# யாழ் – கொழும்பு சொகுசு பேருந்தில் கஞ்சாப்பொதி; நடந்தது என்ன?


கடந்த 28.11.2015 ஆம் திகதி யாழ்–கொழும்பு பி.பி.ரி. சொகுசு பேருந்து கொழும்பு பயணத்துக்கு தாயாராக நிற்கிறது. முன் பதிவு செய்த பயணிகள் தத்தமது பொதிகளுடன் பேருந்தில் தமது இருக்கைகளில் பயணப்பொதிகளை வைத்துவிட்டு பேருந்துக்கு அருகே சாவகாசமாக நிற்கிறார்கள்

பேருந்து உரிமையாளருக்கு தொலைபேசி அழைப்பு வருகிறது. இந்த அழைப்பு பி.பி.ரி நிறுவன உரிமையாளருடன் நீண்ட காலம் தொடர்பற்ற நண்பரான மற்றுமொரு யாழ்–கொழும்பு போக்குவரத்து பேருந்து சேவையில் ஈடுபடும் துவாரகேஸ்வரனிடமிருந்து அந்த அழைப்பு வந்திருந்தது.

கொழும்பு செல்லத் தயாராக நிற்கும் பி.பி.ரி சொகுசு பேருந்தில் கஞ்சாபொதி இருப்பதாகவும் பேருந்தை சோதனை செய்துபார்க்கும்படி துவாரகேஸ்வரனிடமிருந்து அறிவுறுத்தல் கிடைக்கிறது.

உடனடியாக பி.பி.ரி உரிமையாளர் பேருந்தின் நடத்துனர், சாரதி, ஏனைய உதவியாளர்களுக்கும் பேருந்தில் கஞ்சாபொதி இருப்பதாக தகவல் கிடைத்திருப்பதாகவும், எனவே பேருந்தை சோதனை செய்யும்படி அறிவுறுத்தல் விடுக்கிறார். சோதனை செய்ததில் பேருந்தில் கஞ்சாபொதி காணப்படவில்லை என்ற தகவல் உரிமையாளருக்கு தெரியப்படுத்தினர்.

மீண்டும் துவாரகேஸ்வரனிடமிருந்து பி.பி.ரி உரிமையாளருக்கு தொலைபேசி அழைப்பு வருகிறது கஞ்சாபார்சல் அகப்பட்டதா? என விசாரிக்கிறார். பேருந்தில்




கஞ்சா பார்சல் எதுவும் அகப்படவில்லை என்ற தகவல் சொல்லப்படுகிறது.

இல்லை உமது பேருந்தில் இரண்டு முஸ்லிம்கள் எறியிருக்கிறார்கள் அவர்கள் அணிந்திருந்த ரீசேட்டின் அடையாளத்தையும் கூறியதுடன் குறிப்பிட்ட இருநபர்களும் அருகேயுள்ள பனைமரத்தடியில் நிற்பதாக தெரிவித்தார். இத்தகவலைத் தொடர்ந்து, மீண்டும் நடத்துனர், சாரதி மற்றும் ஏனைய ஊழியர்களிடம் விடயத்தைக் கூறி பயணிகள் அனைவரதும் பயணப்பொதிகளை சோதித்து பார்க்கும்படி கூறப்பட்டது. பயணப் பொதிகளை சோதனை செய்தபோது ஒரு பயணப் பொதியில் கஞ்சாபொதி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

துவாரகேஸ்வரனால் அடையாளம் காட்டப்பட்ட முஸ்லிம் பயணி சம்மந்தப்பட்ட பயணப்பொதி தன்னுடையது என பொறுப் பேற்றுக் கொண்டார். இதனையடுத்து பேருந்து உரிமையாளர் தரப்பால் 119 அவசர பொலிசுக்கும், பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கும் தகவல் சொல்லப்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணை நடாத்திவிட்டு சந்தேகநபரை கைதுசெய்ததுடன் கஞ்சா பொதியையும் தடயப்பொருளாக எடுத்துச் சென்றனர்.

இவ்வாறாக விடயங்கள் நடந்து கொண்டிருக்கையில் இரவு 8.51மணிக்கு துவாரகேஸ்வரனின் வைபர் மூலம் பி.பி.ரி நிறுவன உரிமையாளரின் வைபருக்கு பேருந்தில் கைப்பற்றப்பட்ட பயணப்பொதியில் கஞ்சாபொதி இருக்கும் புகைப்படம் அனுப்பி வைக்கப்பட்டது. அதே புகைப்படத்துடன் பி.பி.ரி நிறுவன உரிமையாளரை உண்மைக்குப் புறம்பான முறையில் படுகேவலமாக விமர்சித்து "நியூ ஜவ்னா" என்ற இணையத்தளம் செய்தி வெளியிட்டிருந்தது.

இதுதொடர்பாக மேற்படி இணையதளத்திற்கு பி.பி.ரி.உரிமையாளர் தரப்பு தமது ஆட்சேபனையை தெரிவித்ததை அடுத்து அந்த இணையம் தமது செய்தியை உடனடியாக வாபஸ்பெற்றுக்கொண்டது. மேலும், இது சம்பந்தமாக "நியூ ஜவ்னா" இணையத்தளத்தினர் துவாரகேஸ்வரனின் வர்த்தக நிலையத்தில் வைத்து எடுக்கப்பட்ட சீ.சீ.ரி.வி கமராப் பதிவுகளை பி.பி.ரி உரிமையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

அதன்பிரகாரம் 29–11–2015 அன்று பி.பி.ரி நிறுவன உரிமையாளருக்கு அனுப்பி வைத்த சீ.சீ.ரி.வி கமராவில் பதிவாகியிருந்த புகைப்படம் ஒன்று கிடைத்தது. அப்புகைப்படத்தில் கொழும்பு டாம்வீதியில் அமைந்துள்ள துவரகேஸ்வரனுக்கு சொந்தமான "ஈஸ்வரன் ரேடர்ஸ்" நிறுவன கடையில் 27–11–2015 அன்று பி.பி.ரி நிறுவன பேருந்தில் கஞ்சாபொதியுடன் கைதான முஸ்லிம் இளைஞன் நிற்கின்ற காட்சியே சீ.சீ.ரி.வி கமராவில் பதிவாகியிருந்தது.

ஆக இந்த கஞ்சாபொதி விவகாரம் தனக்கும் தனது பி.பி.ரி. கொழும்பு–யாழ்ப்பாணம் போக்குவரத்து சேவைக்கும் பெருத்த அவமானத்தை உண்டாக்குவதன் மூலம் பாரிய நஷ்டத்தை எற்படுத்துவதை இலக்காகக் கொண்ட சதிமுயற்சி என பி.பி.ரி நிறுவனஉரிமையாளர்உறுதியாக நம்வதாக 'தினச்செய்தி'க்குத் தெரிவிக்கிறார்.

---

(06 ஆம் பக்கத்தொடர்ச்சி)

# ஹைட் மைதானத்தில்...

கூட்டத்தொடர் நாடு முழுவதிலும் பல நகரங்களில் நடாத்தப்பட்டு இளைஞர்களின் பேராதரவைப் பெற்று வந்தது. அந்நாள் வரையில் இருந்துவந்த சம்பிரதாய பூர்வமான மேடைக்குப் பதிலாக மிகவும் அழகான மக்களை ஈர்க்கக்கூடிய மாற்று மேடையை இலங்கைக்கு இந்த கூட்டங்கள் மூலம் அறிமுகப்படுத்தியது ம.வி.மு. ஆகும். அதேபோல் தோழர் ரோகண விஜேவீர சிறந்த பேச்சாளர் என்பதையும் நாட்டு மக்கள் இந்தக்கூட்டங்கள்மூலம்கண்டனர். தோழர் ரோகணவிஜேவீராவின் பேச்சாற்றலுக்கு அப்பேச்சில் உள்ளடங்கியிருக்கும் கருத்துகளுடன் மக்களை ஈர்க்கக் கூடிய பேச்சாளர் ஒருவரும் இப்போதும் இல்லையென கூறினால் மிகையாகாது. பேச்சாற்றல் என்பது வாய் வீச்சு இல்லையென்பதையும், பாரியதும் ஆழமானதுமான விடயங்களை மிகவும் சரளமாகவும் விரும்பத்தக்க முறையிலும் மக்களுக்கு புரியவைப்பது எவ்வாறு என்பதையும் எமக்கு கற்பித்தவர் இவரே. அவரது எல்லா உரைகளிலும் புதிதாக கற்றுக்கொள்வதற்கு பல புதிய விடயங்கள் இருந்ததுடன் அப்பேச்சின் உள்ளடக்கத்தில் செல்வாக்கு மிக்கது போன்றே, நமது நாட்டின் கலாசாரம் மற்று பண்பாட்டை உள்ளீர்த்து சாதாரண மக்களுக்கு மனதுக்கு பேசுவதானது அக்கலையை மிக உயர்வான மட்டத்தில் கொண்டிருந்தார். கொழும்பு ஹைட் மைதானத்தில் இடம்பெற்ற கன்னிக் கூட்டத்திலிருந்து ஆரம்பமாகிய கூட்டத்தொடர் 6 மாத குறுகிய காலத்தில் (அடக்கு முறை காரணமாக) முடிவுக்கு கொண்டுவந்த போதிலும், பிரதான நகரங்கள் பலவற்றில் கூட்டங்கள் நடாத்துவதில் ம.வி.மு. வெற்றிகண்டது. அவை:– 1970 செப்ரெம்பர் அனுராதபுரம், 1970 ஆகஸ்ட் 31 ஹிங்குரக்கொட, 1970 செப்ரெம்பர் 07 குருணாகல், 1970 செப்ரெம்பர் 23 வெள்ளவாயா, 1970 செப்ரெம்பர் 25 தங்காலை, 1970 செப்ரெம்பர் 20 திஸ்ஸமாராம, 1970 செப்ரெம்பர் 27 கண்டி, 1970 ஒக்டோபர் 02 காலி, 1970 ஒக்டோபர் 06 நீர்கொழும்பு, 1970 ஒக்டோபர் 07 சிலாபம், 1970 ஒக்டோபர் 28 மொரட்டுவை, 1970 ஒக்டோபர் 29 எல்பிட்டிய, 1971 பெப்ரவரி 21 கொழும்பு ஹைட் மைதானம்.

இதன்படி சுமார் 06 மாதங்களாக நாடு முழுவதிலும் நடாத்திய கூட்டத் தொடர் 1971 பெப்ரவரி 21 கொழும்பு ஹைட் மைதானத்தில் இடம்பெற்ற கூட்டத்துடன் முடிவுக்கு வருகின்றது. இவ்வாறாக நாடு முழுவதும் கூட்டங்கள் நடத்திய வேளையில் நாடு முழுவதிலும் சொற்பொழிவு தொடர் ஒன்றும் தோழர் ரோகண விஜேவீரவால் நடாத்தப்பட்டது. அவை:– தொழிற்சங்க அரசியலும் தொழிலாளர் வர்க்க அரசியலும், முக்கூட்டு சோஷலிசமும் வரவு செலவும், நமது மாணவர் இயக்கம் செல்ல வேண்டிய பாதை, பாரளுமன்றமும் புரட்சியும், சிவப்பு ஆசியாவை நோக்கி. இவை இவர் நிகழ்த்திய சில சொற்பொழிவுகளின் தலைப்புக்கள் ஆகும்.

இக் கூட்டத்தொடரையும் சொற்பொழிவுத் தொடரையும் நிகழ்த்துவதற்கான பிரதானமான காரணம், உக்கிரமடைந்த அரச அடக்குமுறையாகும். அதற்குப் புறம்பாக கட்சியினுள் அப்போது தோற்றம் பெற்றிருந்த உள்ளக நெருக்கடியும் இதற்கான தாக்கத்தை ஏற்படுத்தியது. அரசியல் இயக்கம் ஒன்று பகிரங்கமாக கூட்டங்களை நடாத்திக்கொண்டு, சொற்பொழிவுகளை நடாத்தி, பத்திரிகைகளை அச்சிட்டு தனது கருத்தியலை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது ஜனநாயகத்திற்கு ஏற்ப அதற்கு இடமளிக்க வேண்டியிருந்ததாலும். ஐக்கிய முன்னணி அரசாங்கம் அதற்கு எதிர்மாறாகவே செயற்பட்டது.

ம.வி.மு தனது கன்னிக் கூட்டத்தை 1970 ஆகஸ்ட் 10ஆம் திகதி நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போது அதே ஆண்டு ஆகஸ்ட் 09 ஆம் திகதி ஐக்கிய முன்னணியின் மூன்று கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிகளின் செயலாளர்கள் இணைந்து கூட்டு அறிக்கையின் மூலம் கூறியதாவது:– பிற்போக்கு இயக்கமான ம.வி.மு.யை ஒடுக்க வேண்டும் எனவும் மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டாம் எனவும் கேட்டனர் ஆனால், கூட்டம் நடைபெற்றது நடந்தது அதுவல்ல, கூட்டத்தில் பெரும்திரளாக மக்கள் கலந்து கொண்டனர். இது அரசாங்கத்திற்கு விட்ட அபாய அறிவிப்பு என்றே அவர்கள் எண்ணினர்.

(தொடரும்)

**மன்னாரில் முஸ்லிம்களின் குடியேற்றம் சர்ச்சை தோன்றக் காரணம் என்ன?** என்ற தலைப்பில் வெளியான விவாத அரங்கு 14 இல் இருந்து 23 இற்கு தொடர்ச்சி என போடப்பட்டிருந்த நிலையில் தவிர்க்க முடியாத காரணத்தால் இப்பக்கத்தில் தொடர்ச்சி பிரசுரமாகவில்லை. எனவே அது அடுத்தவாரம் பிரசுரிக்கப்படும் என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம்.


**யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல பத்திரிகை நிறுவனமொன்றிற்கு பணிநிலைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

**01. கணக்காளர்**
இத்துறை சார்ந்து அனுபவமும் திறமையும் உள்ளவர்கள் விண்ணப்பிக்க முடியும். அனுபவம், தகுதிக்கேற்ற வகையில் ஊதியம் வழங்கப்படும்.

**02. விநியோக முகாமையாளர்**
பத்திரிகை விநியோகத்தில் அனுபவம் உள்ளவர் விண்ணப்பிக்கலாம்

**03. பக்க வடிவமைப்பாளர்கள்**
(Corel Draw, Photoshop, Pagemaker, In Designing) அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்

**04. உதவி ஆசிரியர்கள் - ஒப்புநோக்குநர்**

*பத்திரிகைத்துறையில் முன்னனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது*

*விண்ணப்பங்களை 31.01.2016 க்கு முன் அனுப்பி வைக்கலாம்.*

முகவரி : தில்லைகட்டி லேன் சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.

# இலங்கை கிரிக்கெட் வீரர்களின் கேவலமான நடத்தையே அணியின் படுதோல்விக்குக் காரணம்

கூத்து, கும்மாளம், கச்சேரி, ஆட்டம் – காவாலித்தனமான இலங்கை கிரிக்கெட் அணியின் நடத்தைகள் பற்றி புகார்கள் வந்தவண்ணம் உள்ளன.

இலங்கையணியின் படுதோல்விக்கு இலங்கை அணியின் கிரிக்கெட் வீரர்கள் நியூஸிலாந்தில் இருந்தபோது காவாலித் தனமாக நடந்து கொண்டார்கள் என்று நியூஸிலாந்தில் வாழும் இலங்கையர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

கிரிக்கெட் விளையாட நியூஸிலாந்து பயணம் செய்த இலங்கையின் விளையாட்டு வீரர்கள் கூத்தும், கூத்தியாள் களுடனும் காலத்தைக் கழித்தார்கள் என்று அங்குள்ள இலங்கையர்கள் விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜெய சேகராவின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்கள்.

ஆனால் 13 ஆம் திகதி இலங்கை வந்து சேர்ந்த கிரிக்கெட் அணியின் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் இந்தக் குற்றச் சாட்டுக்களை மறுதலித்துள்ளார். நியூஸிலாந்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டிகளில் இலங்கை படுதோல்வி அடைந்தது. அங்கே நடைபெற்ற இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் தோல்வி அடைந்தது.



மேலும், ஐந்து ஒருநாள் போட்டியில் ஒரு போட்டி மழை காரணமாக நடைபெறவில்லை. கண்ணே மணியே என்று ஒரேஒரு போட்டியில் மட்டும் இலங்கையணி வென்றது. மற்றும் ஏனைய மூன்று போட்டிகளிலும் இலங்கையணி நியூஸிலாந் திடம் படுதோல்வி அடைந்து மண்ணைக் கவ்வியது. அடுத்து நடைபெற்ற இரண்டு ரீ–20 போட்டிகளிலும் படுதோல்வி அடைந்தது.

இவ்வாறாக இலங்கை கிரிக்கெட் அணி தோல்விக்கு மேல் தோல்விகளை இதுவரை சந்திக்கவில்லை.

உலக கிரிக்கெட் அணி தரவரிசையில் நடைபெற்ற ரீ–20 போட்டியில் அடைந்த படுதோல்வியை அடுத்து, முதலாம் இடத்திலிருந்த இலங்கை அணி மூன்றாவது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது. அதேபோல இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் தோல்வியடைந்ததனால் இலங்கையணி டெஸ்ட் தரவரிசையில் ஏழாவது இடத்திற்கு தள்ளப்பட்டது. ஒருநாள் சர்வதேசப் போட்டியில் ஐந்தாம் இடத்திற்கும் தள்ளப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு நடைபெற்ற கிரிக்கெட் போட்டிகளில் விளையாடிய இலங்கையணி இலங்கையில் வைத்து இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரண்டு நாடுகளுடன் மோதி தோல்வி அடைந்தது. ஆனால், மேற்கிந்தியத் தீவுகள் அணியையே இலங்கையில் வைத்து விளையாடி வெல்லக்கூடியதாக இருந்தது.



இதுதான் இலங்கையணியின் சாதனையாகும்.

ரீ 20 போட்டியில் விளையாடிய இலங்கை அணியின் வீரர் டில் சானை கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுமாறு நியூஸிலாந்தில் வாழும் இலங்கையர்கள் பகிரங் கமாகக் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

இலங்கை கிரிக்கெட் வீரர்கள் போட்டிகளில் ஏனோதானோ என்று அசண்டைப் போக்கான மனநிலையிலேயே விளை யாடினார்கள் என்றும், போட்டி ஆரம்பிப்பதற்கு முதல் இரவு முழுவதும் குடி, கும்மாளம், கூத்து, கூத்தியிடம் செல்லுதல் போன்ற கடப்புலித்தனமாக நடந்து கொண்டார்கள் என்றும் நியூஸிலாந்து இலங்கைமக்கள் விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜெயசேகராவுக்கு புகார் தெரிவித்துள்ளனர்.

இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜெயசேகர கருத்துத் தெரிவிக்கையில் “இலங்கை அணி சம்பந்தப்பட்ட பாரிய குற்றச்சாட்டுக்களும், அவற்றின் நடத்தைகள் பற்றியுமான ஊடகங்களில் வெளியான பல அறிக்கைகளை நான் படித்துள்ளேன். எனக்கும் உண்மை என்னவென்று தெரிய வேண்டும். எனக்கு நியூஸிலாந்தில் நடந்தது என்ன என்ற உண்மை தெரியவேண்டும்” என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், “எனவே, அங்கு என்ன நடந்தது என்று விசாரணை நடாத்த திட்டமிட்டுள்ளேன். இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் நியூஸிலாந்து சென்ற இலங்கையணி நிர்வாகி (மனேஜர்), ஜெறில் வவுட்டேஸ் (*Jeryl woutersg*) மற்றும் தெரிவுக்குழுவின் தலைவர் கப்பில விஜயகுணவர்தன ஆகிய மூவரையும் சந்தித்து அங்கு நடந்தது என்ன?” என விசாரிக்க விளையாட்டுத்துறை அமைச்சர் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

ஒரு காலத்தில் ஒருநாள் தொடரின் உலகக் கோப்பையை மற்றும் ரீ – 20 உலகக் கோப்பையை வென்ற இலங்கையணி இன்று இவ்வாறு படுதோல்வி அடைந்து பரிதாபமாகவுள்ளது மிகவும் கவலைக்குரிய விடயம். அணியில் நிலவிவரும் ஒழுக்கக்கேடான செயற்பாடே இந்தக் கேவலமான தோல்விக்குக் காரணம் என பலரும் பகிரங்கமாகத் தெரிவிக்கின்றார்கள்.



இலங்கை அணி வீரர்கள் இந்தக் காவாலித்தனம், கடப்புலித் தனம், பெண்களுக்குப் பின் செல்வது போன்ற விடயங்களை விட்டுவிட்டு விளையாட்டில் தீவிர கவனம் செலுத்தி வருங் காலத்தில் வெற்றியை ஈட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என ‘தினச்செய்தி’யும் எதிர்பார்க்கின்றது.

இப் பத்திரிகை சுன்னாகத்திலுள்ள தினச்செய்தி நிறுவனத்தினால் கோப்பாயிலுள்ள நாவலர் அச்சகத்தில் அச்சிடப்பட்டு ஜன. 17, 2016 அன்று வெளியிடப்பட்டது.